# நிலா நேசம்

காஞ்சனா ஜெயதிலகர்



## நூல் விவர அட்டவணை

நூல் தலைப்பு : நிலா நேசம்

ஆசிரியர் : காஞ்சனா ஜெயதிலகர்

முதல் பதிப்பு : செப்டம்பர், 2003

இரண்டாம் பதிப்பு : ஆகஸ்ட், 2008

உரிமை : ஆசிரியருக்கு

மொழி : தமிழ்

தாளின் தன்மை : 11.6 kg. வெள்ளைத் தாள்

கட்டமைப்பு : சாதா அட்டை பைண்டு

நூலின் அளவு : 1 x 8 கிரவுன்

மொத்தப் பக்கங்கள் : 336

அச்சு எழுத்து : 10 புள்ளி

நூல் வெளியிடுவோர் : அருணோதயம்<br>5/3, கௌடியா மடம் சாலை,<br>இராயப்பேட்டை,<br>சென்னை-14.

**விலை ரூ.100.00**

அச்சிட்டோர் : ஜீ.எம்.கிராபிக்ஸ்,<br>சென்னை-14.




# நிலா நேசம்

## உள்ளே....


1. நிலா நேசம் 5
2. பாலைவனத்தில் பன்னீர் 113
3. சிருங்கார நாதம் 230


Uploaded by Naghu

# நிலா நேசம்

## 1

சாருமதிக்குத் தன் கைகள் நடுங்குவது தெரிந்தது. அருகேயிருந்த நாற்காலியை அழுந்தப் பிடித்து, நடுக்கத்தைக் கட்டுப்படுத்த முயற்சித்தாள்.

சண்டை, சச்சரவென்றாலே அவளுக்கு ஆவதில்லை... ஆவதில்லை என்ன - பயம்.

இப்படி கையும் காலும் உதறலெடுக்கும்படியா பயம்-

"உன் மனசுல நீ என்னதான் நினைக்கறே? என்னை நினைக்கலைங்கறது நிச்சயம்... என்னைப் பற்றி ஏதேனும் கரிசனையிருந்தால் இப்படி காசுதான் முக்கியம்னு நிற்பியா?"

பிரபு குற்றம்சாட்ட, சாருமதி குன்றிக் குறுகினாள். அவன் சொல்வதைப் பார்த்தால் காசு ஆசை பிடித்த கொடுமைக்காரி அல்லவா தான்?

"இல்லை பிரபு... முன்னமே உங்ககிட்ட மொத்தமாய் 20,000 அப்பப்ப ஆயிரங்கள்னு தந்திருக்கேனே!"

"யாருக்குக் கொடுத்தே? எனக்குத்தானே! உனக்கு வாழ்க்கை தரப் போறவனுக்குத்தானே? ஏன் கணக்குப் பார்க்கறே? நான் ஊரிலேயே யார் பேரழகின்னு பார்த்தேனா? இந்தச் சாரு நல்லவ, கடும் உழைப்பாளி, புத்திசாலி - ஆக இவளே போதும்னு

இருந்திடலை? ஆனா உனக்கு நான் போதலை... கஷ்டப்பட்டு முன்னேறுற மனுஷனுக்கு மதிப்பில்லைதான்..."

"அதெல்லாம் இல்லை பிரபு." முனகினாள்.

அவன் குரல் மேலும் உயர்ந்தது - "இல்லைன்னா கேவலம் ஐம்பதாயிரம் தர மாட்டேன்னு ஏன் சொல்றே?"

"அது... அது என் ஆபீஸுக்கான முதலீடு."

"நான் உன் வாழ்க்கைக்கான அடிப்படை. முதலீடு... எல்லாமும்?" அவன் கர்வமாய்க் கத்த இவள் கண்களை இறுக மூடினாள்.

'யாரும் ஒரு புலியைத் தடவித் தடவியே பூனையாக மாற்றி விட முடியாது.'

என்று அவளது பேராசிரியை சொல்வது இப்போது நினைவு வந்தது. இக்கருத்தைச் சொன்னவர் ஃப்ராங்க்ளின் ரூஸ்வெல்ட்.

அனுபவ மிக்க மனிதர் - தெரிந்து, புரிந்துதான் சொல்லியிருக்கிறார். எத்தனை நயந்தாலும் இப்போது பிரபுவை அமைதிப்படுத்த முடியாது.

ஆத்திரம் அவனைப் புலியாக்கியிருக்கிறது. அவனது ஆவேசத்தைத் தாங்கும் தெம்பு தனக்கில்லை... ஆக தன் தோள் பையை எடுத்துக் கொண்டு அவசரமாய் வெளியேறினாள். பின்னால் தொடர்ந்த அவனது கூச்சல் அவளை மேலும் நெட்டித் தள்ளியது.

மனிதர்கள் அவ்வப்போது ஆக்ரோஷமான புலிபோல மாறிவிடுகிறார்கள். அவளால் தாங்கவே முடியாதது அது.

கால்களும் உடல் பாரத்தைத் தாங்க முடியாதது போல தள்ளாடியதால் ஆட்டோ ஒன்றை நிறுத்தி அதற்குள் ஒண்டினாள்.

"அசோக் நகர் போப்பா..."

முறுகி விரைத்திருந்த தன் உடலைத் தளர்த்த முயன்றாள்.



'வாழ்க்கையில் நீ ஒண்டி ஆள். ஆதரிக்கவோ ஆறுதல் சொல்லவோ குடும்பங்கற பாதுகாப்பற்ற. ஒரு பெண் இப்படிப் பயந்தால் ஆகாது. வேலை ஏதும் நடக்காது.'

தனக்குத் தானே அறிவுரை சொல்லிக் கொண்டாள்!

லேசாகத் தூறி. மண் வாசனை கிளப்பியது - அந்த வாசனை ஒரு பாம்பு போல அவளது கழுத்தைச் சுற்றி இறுக்கிய உணர்வு... அவளது பெற்றோர் இப்படிச் சண்டை போட்டுக் கொண்ட ஞாபகம் இன்னும் இருக்கிறது. அன்று கடும் மழை... நீரின் கூச்சலை மீறிய கோபக் கத்தல்கள்...

அதற்குக் காரணம் பணம்... அல்லது பணம் போதாமை! பணம்தான் வாழ்க்கையின் சுழற்சியைப் பல சமயங்களில் தடுத்து உடைக்கிறது.

அப்போது சாருமதிக்கு ஏழு வயதிருக்கும். எவ்வளவோ துலக்கித் துலக்கி யோசித்தாலும் மங்கலான நினைவுகள். யோசிக்கையில் எல்லாம் மனம் ரணமாகிறது. துலக்கியதில் துக்கம்தான் பொங்குகிறது.

சாருமதியின் பெற்றோர் காதல் கல்யாணத் தம்பதி. இந்த காதல் உறவு வர. இருந்த உறவுகள் கோபத்துடன் அறுத்துக் கொண்டு விலகின.

ஆக சுற்றத்தாரின் ஆதரவற்ற வாழ்க்கை.

ஆனால் ஒருவருக்கொருவர் போதுமென்றே இருந்தார்கள்.

'அக்கா ஓடிப் போனவள்' என்ற பழிச்சொல்லால் தடைப்பட்ட, அம்மாவின் தங்கையின் திருமணம் அரும்பாடுபட்டு எட்டு வருடங்களுக்குப் பிறகு நிச்சயமாக. அம்மாவிற்கும் அழைப்பு வந்தது.

அம்மாவிற்குப் பிறந்தகம் போய் அறுந்த உறவு இழைகளை மீட்டுக் கொண்டு அப்படியே மதிப்பாய் அல்லது பிராயச்சித்தமாய் தங்கையின் கழுத்தில் ஒரு மூன்று பவுனில் செயின் போட்டு விட வேணுமென்ற ஆசை.

Uploaded by Naghu

அவர்களது குடித்தனம் செல்வத்தில் புரளவில்லை என்றாலும் பஞ்ச ஜீவனுமல்ல... மூன்று பவுன் எட்டாக் கனியுமல்ல. ஆனால் தேவைப்பட்ட நேரம் பணம் திரளவில்லை.

அதில்தான் தம்பதிக்குள் விரிசல் ஆரம்பம். 'இத்தனை நாளாய் சீண்டாத உன்னை இப்ப ஏன் அழைக்கனும்? ஏதேனும் சீராய் பிடுங்கிறலாம்னுதான்.'

பணத்தைப் புரட்டக் கூடாத ஆற்றாமையில் புருஷன் கத்த,

'இந்த மாதிரி சின்ன புத்தியெல்லாம் எங்க குடும்பத்துக்குக் கிடையாது.'

நொடியில் கட்சி மாறினாள் மனைவி. கல்யாணத்திற்கு முந்தின நாள் சண்டையெல்லாம் ஒரு வழியாய்ப் போட்டு முடித்து தீர்வு வந்திருந்தது.

இருக்கும் காசோடு அம்மாவின் ஒரு வளையலையும் போட்டு புது செயின் வாங்கி விடுவதென்று இறுகிய முகங்களோடு சாருவின் பெற்றோர் கிளம்பியபோது வலுத்த மழை.

'நானும் வரேனே!' என்று கேட்கக் கூட அஞ்சி ஒடுங்கியிருந்தாள் அவர்களுடைய ஒரே மகள் சாருமதி.

இம்மாதிரி சந்தர்ப்பங்களில் சிறுமியை இழுத்தணைத்து,

'அவங்க போகட்டும் ராஜாத்தி - நீ சாப்பிடுவியாம் வாப்பா...' என்று சீராட்ட யாருமில்லாத வீட்டில் தனியே முடங்கினாள்.

சின்னவளின் மிரட்சியைப் பார்த்துச் சீறி மீறி மேலும் அவளை அச்சுறுத்தின மின்னல்கள்.

இடி இடி எனச் சிரித்தது வானம்.

போன பழம் ஸ்கூட்டர் பழுதாகி விட, மரத்தின் அடியே ஒதுங்கிய அத்தம்பதியை வாரிச் சுருட்டிக் கொண்டது இடி.

மறுநாள் காலை செய்தித்தாளின் மூன்றாம் பக்க ஓரத்தில், 'இடி தாக்கித் தம்பதி பரிதாப மரணம்' என்று செய்தியானார்கள்.



'இவ இருந்தும் கெடுத்து, போயும் கெடுத்துருவா போலியே...' என்று முணுமுணுப்புடன், மூத்தவளின் இறப்பைக் கண்டு கொள்ளாமல் இளையவளின் கல்யாணத்தை முடித்து வைத்தார்கள் அம்மாவின் வீட்டார்கள்.

அன்றே சாருமதியின் வாழ்விலும் இடிதான். சுற்றங்கள் எல்லாம் விலகிக் கருகிய நிலை.

அம்மா வழிப் பாட்டியின் அக்காதான் அந்நேரம் ஒரு கை நீர் வார்த்தார்கள்.

'எனக்குக் குழந்தை குட்டியில்லை... அவரும் போய் நாலு வருஷங்களாச்சு. இவ எங்ககூட இருந்துட்டுப் போகட்டும். இப்ப நான் மெனக்கெடணும்னாலும் பின்னால எனக்கு ஒத்தாசையாய் நிற்பாள்ல?''

இப்படி ஒரு வியாபார எண்ணத்தோடு பாட்டி எடுத்து வளர்த்தாலும் சாருமதி நன்றி மறந்ததில்லை. பணிவும் பாசமுமாய் இருந்தாள்.

ஆனால் பாட்டி, பேத்தியை அன்பாய்ப் பேணினாள் என்று சொல்ல முடியாது.

'என்னடீ இப்படி பீர்க்கையோட போட்டி போட்டு வளர்றே? பெத்தவங்களை முழுங்கிட்டதால இந்த அசாத்திய உயரமோ?'' என்று மனதைக் கிள்ளுவாள்.

சாரு மறுத்தோ எதிர்த்தோ பேசுவதில்லை.

அந்த உரிமை இல்லாத நிலை அல்லவா?

அடங்கியே போனாலும் உள்ளே குமுறிய ஆவேசத்தைப் படிப்பில் காட்டினாள். படம் வரைந்து ஆசுவாசப்படுத்திக் கொண்டாள்.

கதவுகளை மூடிய விதி அவளுக்கு ஜன்னல்களைக் கலை மூலம் திறந்து விட்டிருந்தது.

ஆரம்பத்தில் முத்தான அவளுடைய கையெழுத்தைப் பார்த்த சகாயம் டீச்சர்தான் பாராட்டோடு ஓவிய ஆசிரியையிடம் கூட்டிப் போய்,

'இவளுக்கு நல்லா வரைய வரும்னு நினைக்கறேன், ஜமுனா. அருமையான எழுத்து!' என்றதுதான் ஆரம்ப சுழி.

ஆரம்பப் பாடமும், அவ்வப்போது கிடைத்த ஊக்கமும், வென்ற பரிசுகளும் சாருமதி என்ற தளிருக்குக் குடை விரித்தன. விதவிதமான ஓவிய முறைகளை ஆர்வத்துடன் பயின்றாள். பொறுமையுடன் செய்து தேறினாள்.

அவளது ஓவியங்களை யமுனா டீச்சர் விற்றும் உதவியதால் பாட்டி மறுப்புச் சொல்லவில்லை.

கல்லூரியில் 'ஃபைன் - ஆர்ட்ஸ்' கற்றவள், கூடவே தபால் மூலம் வட இந்தியாவிலிருந்த ஒரு பிரபல இன்ஸ்டிட்யூட்டில் வீட்டு அலங்கரிப்பையும் பயின்றாள்.

கல்லூரி ஆசிரியைகள் அவள் நிலைமை புரிந்து, திறமை தெரிந்து உதவினார்கள்.

கல்லூரி நாடக மேடை அமைப்பு, சிறு விற்பனைக் கூடங்களுக்கு என்று அப்போது சந்தித்ததுதான் பிரபுவை.

## 2

அச்சிறு பெட்டிக் கடை முழுக்க அடைசலாய் படச் சட்டங்கள் விதவிதமாய்க் கிடந்தன. குவியல் குவியலாய்ப் பொடி ஆணிகள், சுத்தியல் வகைகள், உபரியாய் பெவிகால் வாடை, சில வட்டங்களுக்குள் மின்னிய பெரிய கண்ணாடிகளில் சாருமதியின் பிம்பம் தெரிந்தது. அவள் அதைப் பார்ப்பதைக் கவனமாய்த் தவிர்த்தாள்.



அப்படி ஒன்றும் பார்த்து ரசிக்கக் கூடிய உருவமில்லை தான் என்ற நினைப்பு.

நெடுநெடுவென்ற உயரம்.

அதையே கவர்ச்சியாக்கக் கூடிய வளைவுகள் வாய்த்திருந்தால் தேவலை - மாடல் போல அன்ன, பூனை இத்தியாதி நடை வகைகளைப் பழகியிருக்கலாம்.

இவளுக்கு வெறுமே உருவிவிட்டாற் போன்ற உடம்பு - தோழிகள் 'ஒட்டடைக்குச்சி' என்றுதான் செல்லமாய்க் கூப்பிடுவார்கள்.

'புஸுபுஸு' என்று அடங்காமல் திமிறும் குட்டைத் தலைமுடி. குளித்து தலைகாயவிடும் போது சாருவிற்கே தான் ஒட்டடைக் குச்சி என்றுதான் படும்.

பிறர் கண்படும் தந்த நிறமும் கிடையாது.. ஆனால் கறுப்பும் இல்லாத நடுத்தர நிறம்.

'சிறுவயசில் சிவப்பாத்தான் இருந்தே.. இப்படி வெயில்ல ஓடி ஒழைச்சுக் கறுத்துட்டே!' என்று பாட்டி சில சமயம் அங்கலாய்ப்ப துண்டு.

அவள் வரையும் அழகிகளைப் போன்ற அம்சமான முகமில்லை -

ஆனால் களையும் கனிவுமான முகம்தான்.

'இந்த வருஷ மிஸ், யுனிவர்ஸ் நம்ப சாரு ஜாடையில் இல்லை?' ஒல்லியாய், மகா உயரத்தில் கிரீடம் வென்ற கர்வத்துடன் காதுகள் வரை விரிந்த சிரிப்புடன் நிற்கும் பெண்ணைப் பார்த்துத் தோழிகள் சொல்லியதுண்டு.

சாருவிற்குமே அப்படித் தோன்றினாலும் தோழிகளின் பேச்சு பாராட்டா பழிப்பா என்பது புரியாமல் ஒதுங்கி விடுவாள்.

அழகோடு பிறப்பவர்கள் அபூர்வம்.

அறிவும் தன்னம்பிக்கையும் கலை நேர்த்தியும் சேர்ந்துதான் உரிய வயதில் வேண்டிய அழகைக் கொண்டு வந்து சேர்க்கின்றன.

சாருமதியும் சற்று மெனக்கெட்டிருந்தால் பொலிவாய்த் தெரிந்திருக்கக் கூடும். ஆனால் தன்னில் காசைச் செலவழிக்க அவளுக்கு மனம் வரவில்லை. தவிர இப்படி சிறு கடைகளில் மணிக்கணக்கில் ஆண்களின் நடுவே நின்று வேலை பார்க்கும் வகையில் வேலை அமைந்த தனக்கு இப்படி சாக்குத் துணியிலான கூடார வகை சுடிதார்தான் பாதுகாப்பு என்ற எண்ணமும் உண்டு. பொட்டு வைக்கக் கூட அவள் மெனக்கெடுவதில்லை.

அவள் கவனமெல்லாம் வீடுகளின், அறைகளின் அமைப்பைக் கவனிப்பதிலும் அவற்றை மெருகேற்று-வதிலுமேதான்... அதற்கான பலனும் கிடைக்காமல் இல்லை.

முதன் முதலில் அவள் உருவாக்கியது மங்களா மேடமின் வரவேற்பு அறைதான்.

திருமதி மங்களா கணேசன் கேட்டிருந்த ஒரு ஓவியத்தை வரைந்து எடுத்துப் போனவள் வரவேற்பறை சுவர்களில் நீல ஷேட்கள் இருப்பது கண்டு யோசனையில் அமிழ்ந்தாள்.

'ப்ளூ உங்களுக்குப் பிடிச்ச கலரா மேம்?'

'இவரு நீலப் பிசாசு. ஆர்க்கிடெக்டிடம் முதல்லியே சொல்லிவிட்டார்... ம்ம்... உன் படத்தை அப்படி வச்சிட்டுப் போ.'

சாருமதி தான் வரைந்து எடுத்து வந்திருந்த ஹம்ஸ தமயந்தி படத்தையே பார்த்தாள்.

'எனக்கு வேற ஒரு ஐடியா மேம்.'

'நான் ரவிவர்மா ஓவிய ரசிகை... ஆக இந்தப் படம் என் ஆசைக்கு. இங்கேதான்.'

'தமயந்தியின் சிகப்புப் புடவையையே நீலத்துல வரைஞ்சால் என்ன? வெள்ளை அன்னத்தோட நீலப்பட்டில் தமயந்தி நிற்பது வித்தியாசமாய் இருக்கும்... இந்த அறைக்கும் பொருந்திப் போகும்...'



'ம்ம்...'

அதோடு நிற்காமல் அறையின் திரைச்சீலைகளை இவளே தேடித் தேடித் தேர்ந்தெடுத்தாள். சங்கு, பாசிச் சரங்களை ஆங்காங்கே தொங்க விட்டாள். நுழைவாயிலில் ஒரு பெரிய வலம்புரிச் சங்கு அமைப்பு.

ஆக வந்தவர்கள் அனைவரும் 'யார் வேலை இது?' என்று விசாரித்துப் பாராட்டினார்கள்.

சகாய விலையில் சாரு வேலைகளை நடத்த, பல பெண்கள் இவளது உதவியை நாடினார்கள்.

இப்படிப் பல படிகளைக் கடந்து வந்த வாய்ப்புதான் சினிமா தயாரிப்பாளர் ஒருவரின் வீடு.

'எனக்குப் பசும் மஞ்சள் நிறந்தான் ராசி... பெரும்பாலும் அந்த நிறமே இருக்கட்டும்!' என்ற அவரது மனைவி கலா சின்னப் பெண்ணாய்த் தெரிந்தாள் - பிறகுதான் தெரிந்தது. கலா அவரது 'சின்ன வீடு' என்பது!

சற்றுச் சங்கடமாயிருந்தாலும் சாருமதி தன் வேலைகளைக் கருத்தாய்ச் செய்தாள். தவிர இங்கு காசு ஒரு பொருட்டாகவே யில்லை - இறைபட்டது.

அரைத்த சந்தன நிறத்தில் ஒரு சுவரும் மற்றவை அதை விட சற்று சாந்தமாகவும் நிறமேற்றப்பட்டன.

'பளீர்னு இல்லையே?' - கலா குறைப்பட்டாள்.

'வேலை முடிஞ்சதும் பாருங்க மேம்...'

"இவரு என்னை ஸிட்னிக்கு வா வாங்கறார்.... ரெண்டு வாரமாகும்."

'போயிட்டு வாங்க மேம்... ஓரளவு வேலை ஆயிருக்கும்.'

பழுப்பும் பொன்னிறமும் கலந்த ப்ரோகேட் துணியில் திரைச்சீலைகள் தொங்க விடப்பட்டன. பித்தளை விளக்கின் நூதன

வகைகள் ஒவ்வொரு அறையையும் அலங்கரித்தன. கூடவே பளபளப்பான பித்தளைத் தாம்பாளங்கள், ஜாடி, மலர்க்குவளைகள் ஆங்காங்கே.

கலா தன்னவரைக் கட்டியபடி சிரித்த ஒரு புகைப்படத்தைப் பெரிதாக வரைந்து அதை விஸ்தாரமான பொன் சட்டத்தில் வைத்துப் பிரதான சுவரில் மாட்டினாள். மறுபுற அலமாரியில் படத் தயாரிப்பிற்கான கேடயங்களை அடுக்கி, சோடியம் ரக பல்புகளை இட, அறை ஜகஜோதியானது.

விமான நிலையத்திலிருந்து நேரே புது வீட்டிற்கு வந்து இறங்கிய கலா இரவில் வீட்டைப் பார்த்துப் பிரமித்துப் போனாள்.

முப்பதாயிரத்திற்கு செக் கிழித்து நீட்டினாள்.

அதுதான் சாருமதியின் மிகப் பெரிய சம்பாத்தியம்.

பாட்டிக்கு ஒரு காஷ்மீர் சால்வை வாங்கி வந்து போர்த்தினாள். அமைதியாய் அதை நீவிய பாட்டி,

'மிருதுவாய் இருக்குது - என்ன விலை?'

'ஆயிரத்து ஐந்நூறு.'

'மொத்த சம்பாத்தியம் என்ன?'

சொன்னாள்.

'நாளையே உனக்கு பாங்க் அக்கௌன்ட் ஆரம்பிக்கணும் சாரு. மொத்தமாய்ப் பணத்தை அதிலே போட்டுடு. இதுவரை உன் சம்பாத்தியத்துல வீட்டுக்கு மொத்தமாய் அரிசி வாங்குவ, மளிகை வரும், சரி, பொறுப்பு வரட்டும்னு நானும் அனுமதிச்சேன் - இனி உன் வாழ்க்கையையும் நான் கவனிக்கணும்ல?'

'என்னை நல்லா படிக்க வச்சீங்களே, பாட்டி!'

'ஆனால் உனக்குக் கூறு போதாதடீ... உன் சம்பாதனை அத்தனையையும் பத்திரமாய்ச் சேமிச்சுடு. எங்காசு நம்ப சாப்பாட்டுக்குப் போதும் - எனக்கு இப்பல்லாம் சாப்பிடவே



முடியலை.. வயிறில் ஏதோ கோளாறு - சாப்பிட்டதும் கத்தி வெட்டுப் பட்டாப்பல வலி... நான் இனி அதிக நாள் இருக்க மாட்டேன். எனக்கப்புறம் இந்த வீடு உனக்குத்தான். பாங்க்கில் இருக்கற பணமும்தான் - அதிலே மெயின் ரோட்டில ஒரு ஆபீஸ் வாங்கிடு. சம்பாத்தியத்தைச் சிதற விடாத.. பிழைச்சுக்குவே..'

சாரு தாள முடியாமல் அழுதிருந்தாள்.

'உன்னைத் துக்கிரின்னு நினைச்சேன்டீ... பாசமும் புத்திசாலித்தனமுமாய் கடவுள் உன்னைச் செய்தது பிறகுதான் புரிஞ்சுது.. ஒண்டியாய் நிற்பே.. ஆனால் ஏமாளியாய் நிற்கக் கூடாது. என்ன?'

பாட்டியின் வயிற்றிலிருந்த முற்றிய புற்றுநோய் அவளைச் சீக்கிரமே தின்று விட்டது.

கலாவின் வீட்டு வேலையின் போது பரிச்சயமான பிரபு, பாட்டியின் சாவிற்குப் பிறகு நெருங்கினான் - வீட்டிற்கே வந்து பழகினான். இவளுக்குமே அது ஆறுதலாய்த்தான் இருந்தது.

இருவருக்கும் ஒரே ஆர்வம், ஆற்றல்கள் இருக்க, சேர்ந்திருப்பது சுவாரஸ்யமாயிருந்தது.

ஆனால் பிரபுவிற்குச் சாருவின் பணத்தின் மீது பெரிய சுவாரஸ்யம். 'ஒரு ஐயாயிரம் தேவைப்படும்..'

'உன் பணம் வந்தது - எடுத்துகிட்டேன் - பிறகு தந்துடறேன்!' என்று சுவாதீனமாய் இவள் பணத்தில் புழங்கினான்.

ஆனால் தொழில் விஷயங்களையும் தயக்கமின்றிக் கற்றுத் தந்தான்.

அவளை நேரே செட்டி நாட்டிற்குக் கூட்டிப் போய், அங்கு பழைய மரப் பொருட்களை வாங்குவது பற்றி விளக்கினான்.

கூர்மையாய்ப் பேரம் பேசி அற்புதமான கலைப் பொருட்களை அவன் வாங்கிக் குவிப்பதைப் பிரமிப்புடன் பார்த்தாள்.

அன்றே அத்தனையையும் தானே கவனமாய்ப் பொதிந்து, கட்டி அடுக்கினான்.

இத்தனை உடல்வலு பெண்ணிற்குச் சாத்தியமில்லை.

இந்த விவேகம் பழக நாளாகும் - ஆக பிரபுவுடன் இணைந்து வேலை செய்தால் பெரிய வேலைகளை ஏற்றுச் சாதிக்கலாம் என்று நினைத்தாள். அவனும் ஒத்தாற்போல நினைத்தான்.

'சாருவைப் போல நுணுக்கம், நளினமாய்த் தன்னால் மெனக்கெட முடியாது. இங்கிருந்து ஒரு மரத்தூணை வாங்கிப் போட்டால் போதும். சாரு அதன் அருகே ஒரு பாவை விளக்கை நிறுத்தி, கொடியைப் படர விட்டு, பழங்காலக் கோயில் தூண் போலாக்கி விடுவாள்.'

ஆக இருவரும் வியாபாரத்தில் ஜோடி சேர்ந்தனர்.

பிரபு பார்வைக்கு அழகன் - அதற்கு மெருகு சேர்க்கும் ஆளுமை. சாருவிடம் சகஜமாய்ப் பழகினான் - 'உன்னை விரும்புகிறேன் சாரு!' என்றான். அதில் சாருமதிக்கும் ஒரு அசட்டுக் கர்வம்தான்!

ஆக அவன் அடிக்கடி, ஏறக்குறைய பிடுங்கிக் கொண்ட சில, பல ஆயிரங்களை அவள் பொருட்படுத்தவில்லை.

பிரபு, பாட்டி சாருவிற்கு விட்டுப் போன தொகை பற்றி அறிய வெகு துடியாய் இருந்தான்.

தனது நிர்கதியான நிலையும், கூடவே பாட்டியின் கடைசிக் கால எச்சரிப்பும் சாருவின் உச்சியைப் பற்றி உலுக்கின.

தவிர தற்போது அவன் கேட்கும் தொகைகளும் பெரிதாகி இருந்தன. பத்து, இருபது, ஐம்பது என்று ஆயிரங்களைச் சர்வ சாதாரணமாய்க் குறிப்பிட்டுக் கேட்டான்... தவிர 'திரும்பத் தருகிறேன்' என்ற பேச்சும் நின்றுவிட்டது!

'எனக்கும் பணம் தேவை பிரபு... மெயின் ரோடில் ஆபீஸ் போடணும் ... இடம் சரியாய் அமையலை..."



"அநாவசியமாச்சே... என் ஆபீஸிலேயே உன் வேலையையும் முடி. ஒரு எக்ஸ்ட்ரா ஃபோன் வேணும்னா வச்சுக்கோ - போதும்."

"கொஞ்ச நாள் என் கால்ல நின்னு பார்க்கறேனே?"

'ஊர்ல நிறைய அழகான பொண்ணுங்க நடமாட்டம், நீ உன் வலுவான கால்ல நிற்கறதுக்குள்ளே நான் வேற அழகான மூஞ்சியை ஏதும் பார்த்துடக் கூடாது... எல்லாம் உன் நன்மைக்குத்தான் சொல்றேன்...'

பிரபு பெரிதாய்ச் சிரிக்க... அவளுக்குச் சிரிப்பே வரவில்லை.

## 3

விதவிதமாய் யோசித்தும் ஒரே முடிவுதான் வந்தது - பிரபுவிடமிருந்து விலக வேண்டியதுதான் என்று!

அவனுடைய குத்தல் 'பேச்சும், அலட்டல் சிரிப்பும், இவளுக்காய் அவனே எடுக்கும் முடிவுகளும் தன்னை மூச்சடைக்கச் செய்வதாய்ப் பட்டன.

தற்காலிகமாகவேனும் ஒரு பிரிவு தேவை.

சற்று ஆசுவாசமாய் அமர்ந்து யோசிக்க வேணும்.

இந்த அவசர வாழ்க்கையில் அதற்கான அவகாசம் அமைவதில்லை. சாருமதி அழகில்லாதவள் என்பதைப் பிரபு பலமுறை, பல தினுசுகளில் சொல்லியாயிற்று.

'ஆனால் வேலையில் உன் திறமையும் ஈடுபாடும் மற்ற பெண்களுக்கு வராது, சாரு!' என்பான் - கிள்ளி விட்டுப் பின் நீவுவதைப் போல. முக்கியமாய் அவன் கணக்கு வழக்கின்றி இவள் காசைக் கையாளும் முறையும் சரியல்ல.

அனுபவ மிக்க பாட்டி சொன்னதில் அர்த்தமில்லாமல் இருக்குமா? 'திரும்பத் தருகிறேன்' என்பதே இல்லாமல் பல ஆயிரங்கள் அவனால் விழுங்கப்பட்டாயிற்று.

'அழகற்ற உனக்கு நான் கிடைப்பது பெரும் பாக்கியம்.'

ஆக 'பணத்தால் என்னை அபிஷேகித்து என் அடிமையாய்க் கிட.' என்பதே அவனது சமீபத்திய போக்கு.

ஓய்வைச் சாரு விரும்பவில்லை - ஆனால் தனிமை தேவை.!

இப்படி யோசிக்கையில்தான் அந்தத் திட்டம் துளிர்த்தது.

கலாவின் வீட்டு அலங்காரத்தைக் கண்டு அயர்ந்த விருந்தாளிகள் மூலம் மேலும் சில வேலை வாய்ப்புகள் வந்திருந்தன.

அதில் ஒன்று பெரிய வாய்ப்பு.

க்ருதிகாவின் பழைய வீட்டைப் புதுப்பிக்கும் பொறுப்பு.

க்ருதிகா கரண் - தமிழ் நாட்டில் பிரபலமான பெயர்.

டி.வி.யின் மூன்று முக்கிய மெகா சீரியல்களில் அவள் நடிக்கிறாள். அசாத்திய அழகியான அவள் நாயகியாக நடித்த முதல் படம் 'ஊற்றிக் கொள்ள...'

'தமிழ் பேசத் தெரிந்த நடிகைகளுக்கு இது காலமில்லை!' என்று அவள் சார்பில் பத்திரிகைகள் முழங்கின.

அவள் தலைகாட்டிய ஒரு குறும் சீரியல் அவளைச் சின்னத் திரையில் பிரபலமாக்க, க்ருதிகா பிறகு சில மெகா தொடர்களில் கண்ணீர் விட்டுக் கலக்கினாள்!

அவள் முகம் பரிச்சயமாகி, பேர் பிரபலமாகிப் போக, வருமானமும் வலுத்தது. தனக்குத் தொன்மையாக ஏற்காட்டில் இருந்த வீட்டை அதை அதன் கம்பீரம் கலையாமல் புதுப்பித்து அலங்கரிக்கும் வேலையைச் சாருவிடம் ஒப்படைத்திருந்தாள் க்ருதிகா.

ஒரு முறை இருவருமாய்ப் போய் மலையில்' நின்ற அவ்வீட்டையும் பார்த்திருந்தார்கள்.



க்ருதிகாவின் எதிர்பார்ப்புகளை, ரசனைகளைக் கருத்தாய்ப் புரிந்து கொண்ட சாருவிற்கு அச்சின்னத் திரை தாரகையின் தோரணை சற்றும் ஒத்து வரவில்லை.

ஆனால் வீடு முதல் பார்வையிலேயே அவளைச் சுருட்டி இழுத்தது.

கம்பீரமும் நளினமும் ஒருங்கிணைந்த கட்டடம் அது.

அதன் பழமை நலுங்காமல் அதை அலங்கரிப்பது ஒரு சவால்தான். ஏற்காடிலிருந்து திரும்பியவளை இரு நாட்களுக்கு அவ்வீடு பற்றிய யோசனைகளே மொய்த்தன.

வீட்டின் ஒரு சாவியை இவளிடம் தந்த க்ருதிகா, 'இதற்குப் பொருத்தமான ஓவியங்களையும் நீயே வரைஞ்சிடு... இதற்குப் பொருத்தமான பழைய கால பர்னிச்சர்களையும் சேகரிச்சுடு... லஸ்தர் மணி விளக்குகள் வேணும் - அதே சமயம் அழுதும் வடியக் கூடாது. திரைச்சீலைகள், கார்பெட், அப்ஹோல்ஸ்டரி எல்லாம் உன் தேர்வு; இந்த ஆபிஸ் நம்பருக்கு ஃபோன் பண்ணி, தேவையான பணத்தை வாங்கிக்கோ. வேலையைச் சீக்கிரம் ஆரம்பித்து, சுறுசுறுப்பாய் முடி!' என்று உத்தரவிட்டிருந்தாள்.

தனக்குத் தேவையான வேலையை, தனிமையைத் தரக்கூடிய இடமாய் சாருவிற்கு அவ்வீடு தோன்றியது.

பிரபுவிற்கு அது பற்றித் தெரியுமானாலும் தான் அங்கு இருப்பதை அவனால் யூகிக்க முடியாது.

சென்னை வீட்டைப் பூட்டிவிட்டு இவள் கிளம்பினாலுமே, 'எங்கே சாருவை?' என்று தேடவோ தவிக்கவோ இங்கு யாருமில்லையே! ஆனாலும் பக்கத்து வீட்டாரிடமும் வேலையில் தோள் கொடுக்கும் சிலரிடமும் வேலை விஷயமாய் சேலம் பக்கம் போவதாய்ச் சொல்லிவிட்டே கிளம்பினாள்.

ஏற்காடு ஊரை விட்டுச் சற்று எட்டியே நின்ற வீட்டின் முன் நின்ற போது சற்றுக் கலக்கமாயும் மீதி நிம்மதியாயும் இருந்தது.

மனித அரவமே இல்லாத ஏகாந்தம்.

அவளுக்குத் தனிமை தேவை. அந்தத் தனிமை அங்கு முழுமையாய் வாய்த்திருந்தது. வீட்டின் பின்புறமிருந்த கொட்டகைப் பக்கமாய் நடந்து குரல் கொடுத்தாள். போன முறை இங்கே இரு ஜெர்ஸி பசுக்கள் கொழுமையாய் நின்றனவே! அவற்றையும் வீட்டையுமாய்ப் பராமரிக்க ஒரு நடுத்தர வயதுத் தம்பதியும் இருந்தனர்... அவர்கள் எங்கே?

கொட்டகையை ஒட்டிய சிறு வீட்டின் கதவில் பளபளவென்று ஒரு பித்தளைப் பூட்டு. ஜன்னல்களும் இறுக மூடியிருந்தன.

யோசனையுடன் திரும்பி நடந்தாள்.

இருள் ஒரு கரும் சால்வை போல அம்மலைப் பிரதேசத்தைச் சுற்றிக் கவிந்து கொண்டிருந்தது. காற்றின் குளுமை கூடுவதை ரசித்தாள்.

வீட்டைத் திறந்து ஒரு முறை சுற்றியவளை, பயண அலுப்பு பிழிந்து எடுத்தது. வேறேதும் வேண்டாம் - இழுத்துப் போர்த்திப் படுத்தால் போதும்.

ஆனால் வயிறு - 'அதெல்லாம் போதாது - எனக்கு ஏதேனும் தா!' என்று கிள்ளியது.

சமையலறைக்குள் நோட்டமிட்டாள். சமைத்த சுவடின்றிக் கிடந்தது அது. இப்போது வயிற்றின் கிள்ளல் அதிகமானது.

தன் வரவை ஒரு கடிதம் மூலம் இங்குள்ளவர்களுக்குத் தெரிவித்திருக்க வேணும். ஆனால் இங்கு யாரும் இருப்பதாய்த் தெரியவில்லையே!

ஒரு ரொட்டி, பிஸ்கட், பழம் என்று ஏதும் வாங்கி வராத தன்னையே நொந்து கொண்டவள், பெட்டியுடன் மாடிப்படி ஏறினாள்.

அவளுக்கு எப்போதுமே மாடி வீடுகளின் மீது மோகமுண்டு. அதன் உயரத்திலிருந்து பார்த்தால் தெரியும் விசாலமான உலகம்



தனியழகு. ஆனால் மாடியில் வசிக்கும் சந்தர்ப்பம் இதுவரை அமையவில்லை. காலியாகக் கிடக்கும் இப்பெரிய வீட்டில் அவள் எந்த அறையில் வேண்டுமானாலும் தங்கலாம் - அனுமதி தரவோ மறுக்கவோ யாருண்டு?

மேலே ஒரு அகன்ற கூடம்.

அதன் பிரதான கதவைத் திறந்தால் மாஸ்டர் பெட்ரூம்.

அதில் தனியே தங்கினால் உறுத்தும். ஆக தன் பெட்டியை வலப்புறம் உள்ள அளவான அறையில் வைத்தவள் மற்ற அறைகளையும் ஒரு நோட்டமிட்டாள். அவைகளை எப்படிப் புதுப்பிக்கலாம் என்று பரபரத்தது புத்தி.

மீண்டும் பிரதான படுக்கையறையுள் நுழைந்தவள் சற்றுத் திடுக்கிட்டாள். அதன் பால்கனி பக்கச் சுவர் இடிக்கப்பட்டிருந்தது.

ஆக பழுது பார்க்கும் வேலை ஆரம்பமாகி விட்டது போலும்...

பூட்டப்பட்டிருந்தாலும் அறைகள் தூசு படியாமல் சுத்தமாகவே தெரிந்தன. அறையைக் கடந்து பால்கனி பக்கம் காலெடுத்து வைத்தாள். அங்கிருந்து தெரிந்த மலைச் சரிவும் அதற்குள் பதுங்கிக் கொண்டிருந்த சூரியனின் சொச்ச பிரகாசமும் அசத்தின.

அழகை அனுபவித்த அவளை -

"உள்ளே போ!" என்று சுண்டியது எங்கிருந்தோ வந்த குரல்! அங்கு மிங்குமாய்ப் பார்வையை விரட்டினாள்.

ஒருவன் தன்னை நோக்கிக் கைநீட்டிக் கத்துவது புரிந்தது.

"உடனே உள்ளே போ..."

உத்தரவாய் அதட்டியது குரல்.

யாரது - ஏனிப்படிக் கத்துகிறான்?

ஏதோ 'வெளியே போ!' எனாமல், 'உள்ளே போ!' என்பது வரை சரிதான்.

அவசரமாய்ப் பின்வாங்கியவள் அந்த அறையின் கதவைச் சாத்திவிட்டுப் படியிறங்கினாள்.

அப்படி அதட்டலாய் அலறியவன் மேலும் ஏதேனும் சொல்ல வருவான் என்று தோன்றியது.

அதே போல அவளுக்காக முன்னறையில் காத்து நின்றான் அவன்.

## 4

"யாரு?" மொட்டையாய் வந்தது அவனிடமிருந்து கேள்வி.

"நான் சாருமதி. இந்த வீட்டின் இன்டீரியர் டெகரேட்டர்... அதாவது..."

"சரி. இப்ப ஏன் வந்தீங்க?"

"எப்ப வேணுமானாலும் வரலாம்னு க்ருதி மேம் எனக்கு ஒரு சாவி தந்திருந்தாங்க..."

"நீங்க வருவதாயும் தெரியவில்லை..."

"வீட்டை... அதாவது மாட்டை வந்து... கவனிக்க ஒரு தம்பதி இங்கயே இருப்பதாய்ச் சொன்னாங்க... வந்து பார்த்தால்..."

"இங்கே இருப்பது நான் மட்டும்தான்... ம்ம்?" இப்போது உரக்கப் பேசாவிட்டாலும் அவன் குரலில் அசாதாரண அழுத்தம் இருந்தது. அந்தத் தொனிக்கேற்ற உருவமும்தான்.

சராசரி இந்தியனை விட நல்ல உயரம் என்று அவனை நிமிர்ந்து பார்த்தவள் மனதிற்குள் சிலாகித்தாள்.

தன்னைப் போலவே அதிக ஒல்லியோ என்று கூடப் பட்டது.

ஜெர்க்கின் மூடிய உடல்வாகைக் கணிக்க முடியாவிட்டாலும் துருத்திய தாடை தன்னைப் போலவே உயரம், ஒல்லி, தவிர விரக்தி தளாமல் தனிமையும் தேடி வந்திருக்கிறானோ?



அவளுக்குச் சிரிப்பு வந்தது.

உள்ளேயே கொப்பளித்த சிரிப்பை அளந்து விட்டான் போலும் -

"இது யாருமற்ற அத்துவானம்... இங்கே தனிமையில் இருப்பது தெரிஞ்ச பிறகும் உங்களுக்குச் சிரிப்பு கிளம்பறது ஆச்சரியம்தான்!"

ஆனால் அவன் குரலில் நக்கலோ சலிப்போ இல்லை. அங்கும் மெல்லிய சிரிப்பு மட்டுமே!

அப்போதுதான் அவளுக்கு உறைத்தது. இப்படி ஒரு சூழ்நிலையில் தனக்கு வந்திருக்க வேண்டியது பயம்... குறைந்தபட்சம் சஞ்சலம்!

தவிர தான் பயணக் கோலத்திலேயே, முகம் கூடக் கழுவித் துடைக்காமல் நின்றது வேறு உறுத்தியது.

இப்படி அசடாட்டம் நின்றால் அவன் என்னதான் நினைக்க மாட்டான்?

ஏற்காடு 'குளுகுளு' என்றிருந்ததால் தண்ணீரைத் தேடத் தோன்றவில்லை. ஆனாலும் தன் தோற்றத்தைப் பற்றிய திடீர் அதிருப்தி அவளது மென்னியைப் பிடித்தது.

மறுபடி தன்னையே கடிந்து கொண்டாள்.

'யாருமற்ற ஒரு பெரிய வீட்டில், இருட்டிய நேரம் ஒரு அந்நியனுடன் இருக்க நேர்ந்தது பற்றிய கவலையின்றி, முகம் கழுவாதது பற்றி யோசிக்கும் ஒரே மக்கு நீதான்!' என்று!

பள்ளிப் பெண் போன்ற முழியுடன் நின்றவளைப் பார்த்துப் புன்னகைத்தான். "அந்த பால்கனி சுவர் விரிசல் விட்டிருந்தது. ஆக கொத்தி, மறுபடி பூச ஏற்பாடாகியிருந்தது. நீங்க வந்து நின்ற இடம் ஆபத்தானது. மேலும் விளிம்புப் பக்கமாய் நகர்ந்திருந்தால் சுவர் சரிந்திருக்கக்கூடும்... அதான் அப்படிக் கத்தினேன்..."

"ஓ... பர... தாங்க்ஸ்... நீங்க?"

"உட்காருங்க."

அவளுக்கு ஒரு நாற்காலியைக் காட்டியவன் தன் ஜெர்க்கினைக் கழட்டி ஒரு மரக்கொக்கியில் மாட்டியபின் தானும் அமர்ந்தான்.

அவன் மார்பு அகலமாயும் தோள்கள் உறுதியாயும் இருப்பதைக் கவனித்தாள். "நான் இந்தத் தோட்டத்தை லேண்ட்-ஸ்கேப் பண்ண வந்திருக்கேன்... அதாவது..."

"தெரியும்... வீடு என் கற்பனைக்கும் தோட்டம் உங்க கற்பனைக்குமாய் விடப்பட்டிருக்கிறது..."

"யெஸ்." கன்னத்தை நீவியபடி தலையசைத்தான். அவனது நீண்ட விரல்களையும், சன்னமாய் முடி படர்ந்த கன்னங்களையும் ஒரு ரசனையுடன் கவனித்தாள்.

"பின்புறத் தோட்டத்தை அளக்கப் போனேன்... திரும்பும் போதுதான் உங்களை பால்கனியில் பார்த்தேன்... ஒரு கணம் திகைச்சுட்டேன்.. பறந்து வந்த ஏதோ தேவதைதான் அங்கே நின்று இளைப்பாறுதோன்னு!"

"நல்ல கற்பனை... நானாவது தேவதையாவது..."

"எனக்கின்னும் அந்தச் சந்தேகம் முழுக்கத் தீரலை... தேவதைகள்தான் பயமின்றி, சாப்பாடு பற்றிய கவலையின்றி இங்கே இப்படி துணிச்சலாய் வரக்கூடும்."

"உண்மைதான்... எனக்குப் பசிக்குத் தயிர்சாதம் போதும். அது கிடைச்சிடும்ன்ர நினைப்பில... இல்லை... நான் சாப்பாடு பற்றியே யோசிக்கலை... ஏதோ வேகத்தில்...."

"ஆனா இப்பப் பசிக்குதுல்ல?"

"ம்ம்.." அசட்டுத்தனமாய்ச் சிறு சிரிப்போடு தலையாட்டினாள். "ஆனா கிச்சன்ல மணி அரிசியில்லை... பால் கூட இல்லை..."

"அது பெரிய கிச்சன். உள்புறம் ஒரு சின்ன கிச்சன் உண்டு. அதில் எனக்கு வேண்டிய சிலது உண்டு. இப்ப உங்களுக்கு என்ன வேணும்?"



"சாப்பிடவா?" கண்களை விரித்தாள்.

"வேறேதும் வரம் கொடுக்கக் கூடிய நிலையில் நானில்லை..." இயல்பாய்த் தோள்களைக் குலுக்கினான்.

அவன் எழ, அவளும் பின் தொடர்ந்தாள்.

"நானும் உதவட்டுமா?"

"எந்த ரூம்ல படுக்கப் போறீங்க?"

சொன்னாள்.

"சரி. கீழே என் அறையில் கீஸர் போட்டிருக்கேன். அதில் வெந்நீர் வரும். டவலும் பாத்ரூம் ஷெல்ஃபில் இருக்கும்."

"தாங்க்ஸ்."

ஆவி பறக்கக் கொட்டிய வெந்நீரைப் பார்க்கவும்தான் தன் அலுப்புப் புரிந்தது. தன் துணிகளை எடுத்துக் கொண்டு மறுபடி அவனது குளியலறைக்குள் புகுந்தவள் அங்கு நின்றவனைக் கண்டு ஏறக்குறைய அலறிவிட்டாள்...

"ஸாரி... குளிக்க வந்தேன்."

"நானும் ஸாரி. குளிக்க... யூகலிப்டஸ் தைலம் தரலாம்னு வந்தேன்."

"எதுக்கு?"

"வெந்நீரில் ரெண்டு சொட்டு விட்டுக் குளிச்சால் அலுப்பிருக்காது."

"ஓ... தாங்க்ஸ்."

சொன்னது போல குளித்த உடம்பு கலகல வென்றிருந்தது.

சிறு சாப்பாட்டு மேசையில் அவன் பரப்பியிருந்த உணவை ஆர்வமாய்ப் பார்த்தாள் - மிருதுவான பன்கள், வேக வைக்கப்பட்ட பச்சைப் பட்டாணி, அரிந்த தக்காளி வட்டங்கள், இரண்டு கரண்டி வெண்ணெய், மிளகு தூவி வறுத்த சில மாமிசத் துண்டங்கள், பழம், போதாததற்கு ஒரு கண்ணாடிக் குவளை நிரம்பப் பால்.

'ஓ... தாங்க்ஸ்... உங்க பேர்.. பேரை..."

தயக்கமாய் அவளை ஏறிட்டாள்.

"சந்துரு... ரொம்பப் பசி போல? நன்றி சொல்லும் தோரணையிலேயே தெரியுது." சாப்பிடச் சைகை செய்தான்.

ஆவலாய்ச் சாப்பிடலானாள்.

"உங்களுக்குச் சமையல் தெரியுமா?"

"இதெல்லாம் பதப்பட்ட உணவு வகைகள், டின்களை வாங்கி ஃபிரிட்ஜில் வைக்க வேண்டியது - பிறகு சூடு பண்ண வேண்டியதுதான்."

"ஆனால் நல்ல உப்பும் உறைப்புமாய் இருக்குதே."

"இருந்த ஓரிரு பொடிகளைச் சேர்த்தேன்..."

"நீங்களும் சாப்பிடுங்களேன் - பிரமாதமாய் இருக்குது."

"மீதமிருந்தால் சாப்பிடறேனே..." வாய்க்குள் சிரித்தான்.

"ஓ... ஸாரி."

"ஜஸ்ட் எ ஜோக்... உங்க பேர்?"

"சாரு - சாருமதி."

அவர்களிடையே பேச்சு சரளமாய் உருண்டது.

"நீங்க எப்படி தனியாய் இங்கே இருக்கீங்க?"

"வேறு யாரேனும் இருந்தால்தான் ஆச்சரியப்படணும் - நான் ஒண்டி ஆள்!" என்று தன்னைப் பற்றிச் சிலது சொல்ல, இவளும் பரஸ்பரம் பேசினாள்.

இடை இடையே இதையெல்லாம் இவனிடம் ஏன் சொல்கிறோம் என்று புத்தி இடித்தாலும் வாய் மட்டும் மூடவில்லை!

சூடான பாலையும் பருகிய அவளுக்கு உறக்கம் சொக்கியது.

"படுக்கப் போகிறேன்... காலையில்..."



"டாக்ஸியை வரச் சொல்லிடறேன்."

"எதுக்கு?"

"நீங்க கிளம்பணுமே..."

"வேலையே இன்னும் ஆரம்பிக்கலையே!"

"தனியே இருந்து வேலை செய்யப் போறீங்களா?"

"இல்லையே..."

"பின்னே?"

"நீங்க இருக்கீங்களே! வெளியே நீங்க மும்முரமாய் இருப்பது போல உள்ளே என் வேலை நடக்கும். சாப்பாடு பிரச்சனையும் இல்லை..."

முறுவலித்தாள்.

"ஆனாலும்..."

"நாலு பேர் என்ன சொல்வாங்கன்னு நாம பயப்படத் தேவையில்லைங்க, சந்துரு. சுற்றித்தான் யாருமில்லையே... ரொம்பத் தூக்கம் வருது - குட் நைட்."

சாருவிற்குப் படுத்தது தான் தெரியும் -

அப்படி நிச்சலனமாய் உறங்கி வெகு நாட்களாகிவிட்டன...

## 5

காலையில் காபியின் வாசனை அவளைக் கீழிறக்கியது. நான்கு பிஸ்கட்டுகளுடன் பெரிய கோப்பைக் காபியை உள்ளிறக்கியவள்,

"இனி வண்டி மதியம் வரை ஓடும் - அப்புறம் சந்துரு - நாளை சமையல் முழுக்க என் பொறுப்பு!" - என்று அறிவித்தாள்.

"அப்ப இங்க தங்கறதாய் முடிவு பண்ணியாச்சா?"

"இது என் வேலைங்க - இதைச் செய்தால்தான் பிழைப்பு ஓடும்... இந்த டின்ட் உணவுகளைக் கைக்காசு போட்டு வாங்கியிருப்பீங்க... என் பங்கு எவ்வளவுன்னு சொன்னால் தந்துடறேன் - செலவுகளைப் பகிர்ந்துக்கலாம்."

அவன் யோசனையாய் அவளைப் பார்த்தான்.

"அதாவது இந்த வீட்டு வேலையைப் பகிர்ந்துக்கறது போல?"

"ம்ம்... இத்தனை அம்சமான வீட்டுக்குத் தோட்டம் பகட்டாய்தான் அமையணும். உதவியாளே இல்லாம எப்படி சமாளிக்கறீங்க?"

"நீங்க ஒண்டியாய் மெனக்கெடலையா?"

"உதவிக்கு ஆள் வைக்குமளவு என் வருமானம் இல்லைங்க..."

"எதையேனும் தூக்க, தள்ளணும்னால் என் உதவியைக் கேட்கலாம்."

"தாங்க்ஸ்!" என்றவள் வேலையில் இறங்கினாள். ஈசலில் வரையும் காகிதங்களை வைத்து அந்த அறையை அலங்கரிக்க வேண்டிய விதத்தைப் படமாகவே வரைய ஆரம்பித்தாள். டேப்பால் முதலில் அறையை அளந்த போது, ஒத்தாசைக்குச் சந்துருவைக் கூப்பிடலாமா என்ற நப்பாசை எழுந்தது. ஆனாலும் அவன் வேலையைக் கெடுப்பானேன் என்று தானே இருபுறமும் மாறி மாறி ஓடி ஒருவழியாய் அளந்தாள்.

சீக்கிரமே பசித்து விட, சிறு கிச்சனின் ஃப்ரிட்ஜைத் திறந்து, அதிலிருந்தவற்றைக் கொண்டு மதிய உணவைத் தயாரித்தாள். வலை ஷெல்பிலிருந்த சில வெங்காயம், தக்காளியும் சேர, சமையல் மணத்தது.

சந்துருவிற்குக் குரல் கொடுத்தாள்.

கை, முகம் கழுவிவிட்டு வந்தவனுக்கு வியப்பு -



"நாளைதானே சமைக்கப் போறதாய்த் திட்டம்?"

"பசி உடனே சமைக்கச் சொல்லிடுச்சு!"

பரிமாறியபடி கேட்டாள் - "வேலை எப்படி போச்சு...?"

"வழக்கம் போல - உங்களுக்கு?"

"ம்ம் - ஒரு வாரத்தில எல்லா அறைகளையும் முடிச்சிடலாம். மற்ற வேலைகளைச் சென்னைக்குப் போய்த்தான் தொடரணும்."

"எவ்வளவு நாளாய் இந்த வேலைல இருக்கீங்க, சாரு?"

"15, 16 வருஷங்களாய்." அவன் வாய்க்கு எடுத்துப் போன வறுவல் அப்படியே அந்தரத்தில் நின்றது.

"உங்க வயசே அவ்வளவுதானே இருக்கும்?"

வாய்விட்டுச் சிரித்தாள். "என். சொச்ச ஆறு வயசை எங்கே ஒளிச்சு வைக்க? 15 வருஷமாய் மனசால் நான் இதே வேலையில் இருக்கேன்னு..."

"ஓஹோ...?"

"சினிமா போனலும் அதிலும் ஹீரோ, சண்டை, டான்ஸ் எல்லாம் கவனிக்க மாட்டேன். அதில் வரும் வீடு, அதன் செட்டிங்ஸ், நிறங்கள்தான் என்னை ஈர்க்கும். வீட்டுக்கு வந்ததும் அதே வீட்டை ஸ்கெட்ச் பண்ணி அதை என் பாணியில் அலங்கரிப்பேன்... அதைத்தான் அனுபவம்னு சொன்னேன்."

"நிச்சயம் நீங்க ஒரு உதவியாளரை நியமிச்சிடணும், சாரு - அதுவும் 15, 15 வருட அனுபவத்திற்குப் பிறகும்..."

அவனோடு இணைந்து சிரிப்பது அவளுக்குப் பிடித்திருந்தது.

"எடுத்ததிலேயே பெரிய ப்ராஜெக்ட் இதுதாங்க..."

"குட் லக்." - வாழ்த்தினான்.

அவன் ஆங்கிலம் மிகச் சரியாய் உச்சரிக்கப்பட்டதைக் கவனித்தாள்.

"லக்... என் வேலைல எனக்கு அதிர்ஷ்டம் உண்டுதாங்க..."

குரலில் அவளையும் மீறி வழிந்த துளிக் கசப்பை அவன் கவனிக்கத் தவறவில்லை. 'அப்ப... வேறெதில் நோ லக்? உன் முகத்தில் முழுமையான திருப்தி தெரியலையே?"

அவளுக்குப் பிரபுவின் நினைப்பு வந்தது.

சதா தான், தன் தேவைகள் என்றே பேசுபவன் ஒரு நாளும் இவளைப் பற்றி விசாரித்ததில்லை - அறிய ஆசைப்பட்டதில்லை.

தன்னைப் போல ஒரு அம்சமான ஆண் அவளுக்குக் கிடைத்தது பெரும் பாக்கியம் என்பதே அவனது பேச்சு... சிந்தனை எல்லாம்.

"என் வேலையில் திருப்தி உண்டு.

'ஒரு மணி நேரம் வாழ்வை அனுபவிக்க ஒரு குட்டித் தூக்கம் போடு. ஒரு நாளை ரசிக்க பிக்னிக் போ - '

'ஒரு நாள் முழுவதும் அனுபவிக்க உன் வேலையை நேசி'ன்னு சொல்வாங்க... எனக்கு அந்தக் கொடுப்பினை அமைஞ்சிருக்கே..."

"நியாயமான எளிய சந்தோஷங்களில் திருப்தி அடையறவங்களைப் பார்க்க சந்தோஷமாயிருக்குது."

"நமக்கு விதிக்கப்பட்டது அது. எல்லாரும் க்ருதிகா கரணாயிருக்க முடியுமா?"

மௌனமாய் அவளையே பார்த்தான் - பின் மெதுவாய் வினவினான் - "ஏன் அப்படிச் சொல்றே?"

"அவங்களுக்கு எல்லாமே அமைஞ்சிருக்குதே. தமிழ்நாடே இப்ப அவங்க பேரைத்தானே ஜெபம் பண்ணுது... அந்தளவு திறமை, அதற்கேற்ற அழகு அந்தஸ்து... இதோ இத்தனை அம்சமான வீடு..."

குற்ற உணர்வு உந்த நிறுத்தினாள் - இது பொறாமை என்று சந்துரு நினைத்து விட்டால்..?



"இந்த வீட்ல வாழ ஒருத்தி கொடுத்து வச்சிருக்கணும்ங்க... இங்கே நுழைஞ்சதுமே அலாதி அமைதியை உணர்ந்தேன்... எல்லா வீட்டிலேயும் இப்படி அமையாது... அதான் க்ருதி கொடுத்து வச்சவங்கன்னு சொன்னேன்..." அவசரமாய் விளக்கினாள்.

"ம்க்கும்" - தொண்டையைச் செருமிய சந்துருவும் சற்றுப் பேச்சை மாற்ற முயன்றான்.

"உங்க செலவுக்கு ஏதும் பணம் தேவையா, சாரு?"

"என் தேவைகளுக்குக் கையில் இருக்கறது போதும். வேலை விஷயமாய்ப் பணம் தேவைப்பட்டால் காந்தன் க்ரூப் கம்பெனிக்கு ஃபோன் செய்யச் சொன்னாங்க, க்ருதிகா..."

"பெரிய கம்பெனி... அந்த ஆட்களைச் சந்திச்சிருக்கியா?"

"சந்தர்ப்பம் இல்லையே..." உதடு பிதுக்கினாள் - "அவங்க சேலத்தில் ஏதோ ஃபாக்டரி, மில்ஸ்னு இருக்கறவங்க... போல."

"இந்த வீடு காந்தனுடையது. க்ருதியுடையது இல்லை. அவருடைய தாத்தாவின் வீடு இது... அவருக்கும் உன்னைப் போல இந்த வீடு மேல் பிரியம்ங்கறதால் க்ருதி அவரோடு இங்க வாழச் சம்மதிச்சாங்களாம்..."

"க்ருதிகா சம்மதிச்சது பெரிய விஷயம்தான்... பரபரப்பும் பகட்டுமான லைப் - ஸ்டைலுக்குப் பழகினவங்களுக்கு இந்த அமைதி உறுத்தலாம்... ஆனால் இங்கே அன்பும் அமைதியுமாய் வாழ முடிவுபண்ணிட்டாங்கன்னா... அதுதான் உண்மையில் பெரிய அதிர்ஷ்டம்."

இந்த வீட்டில் அழகிய க்ருதிகா வளைய வந்தால் மிகப் பொருத்தமாயிருக்கும் என்று நினைத்தவளுக்குள் ஏனோ சென்னை நகரச் சுவர்களில் 'க்ருதியின் காதல் லீலைகள்' என்ற போஸ்டர்களும் நினைப்பு வந்தன.

பெண்கள் வெளிச்சத்திற்கு வந்து விட்டால் சமூகம் அவர்கள் கண்களைக் கூசவும் வைக்கிறது...

"என்ன யோசனை, சாருமதி?"

அவன் தன் பெயரை இயல்பாய்ப் பயன்படுத்தியது அவளுக்குப் பிடித்திருந்தது.

"அந்தக் காந்தனும் அதிர்ஷ்டசாலின்னு நினைச்சேன்."

"எதனால் - க்ருதிகா அழகிங்கறதாலயா?"

"திறமை, புகழ்... எல்லாமும்..."

"ஒரு கல்யாணத்திற்கு இதெல்லாம் அடிப்படை இல்லையே... நிஜமான அன்புதான் அஸ்திவாரம்."

சொன்னவனை விழி மின்னப் பார்த்தாள்.

"நீங்க பல விஷயங்களில் என்னைப் போலவே நினைக்கறிங்க..."

"க்ரேட் - மைன்ட்ஸ்! உயர்ந்தவர்களின் சிந்தனை ஒத்துப் போகும்!"

சிரித்தார்கள்.

"ஒன்னுதான் புரியலை... இத்தனை இனிமையாய்ப் பேசும், பழகும் நீ எப்படித் தனிமையை ரசிக்கறே... விரும்பறே..? உனக்கு நிறையச் சிநேகிதிகள் இருக்கணுமே..?"

"அதிலும் நாம ஒத்துதான் போறோம் - நீங்களும் அருமையாய்ப் பேசிப் பழகறீங்க... ஆனால் தற்சமயம் தனிமையைத்தானே விரும்பறீங்க!"

அவன் முகம் கறுத்தது.

## 6

அன்று சீக்கிரமே சமையலறைப் பக்கம் எட்டிப் பார்த்தான், சந்துரு.

"என்ன இப்படிக் கமகமன்னு மணம்?"



சிறுவனைப் போலக் கேட்டவனைச் சற்றுப் பெருமையுடன் பார்த்து நகைத்தாள் சாரு

"பிரியாணி."

"ஓ... இதுக்காகத்தான் டாக்ஸியை வரவழைச்சு டவுனுக்குப் போனியா?"

"ம்ம்."

தலையாட்டியவளுக்குத் தான் டாக்ஸி கேட்டதுமே சந்துருவின் முகம் வாடியது நினைப்பு வந்தது. அந்த முக வாடலை, விழிகளின் ஏக்கத்தைத் தன் வாழ்நாள் முழுக்க மறக்க முடியாதெனவும் தோன்றியது.

தன் பிரிவைச் சந்துரு விரும்பவில்லை என்றுதானே அவை காட்டின?

"டவுனுக்குப் போகணும் - ஒரு மணி நேரமாகும். சில பொருட்கள் வாங்கணும்..." என்றதும்தான் சமாதானமானான்.

"நானும் கூட வரவா...? உனக்கு எதெதை எங்கே வாங்கணும்னு தெரியாதே?"

"ஏற்காடு இத்துனூண்டு ஊர். இதிலே சமாளிக்க முடியாதா என்ன?" என்று கிளம்பியவள் பொருட்களுடன் வீடு திரும்ப, அவன் முகம் மலர்ந்த அழகு..!

இப்போது ருசித்து அவன் தன் சமையலைச் சாப்பிடுவதை ஆர்வமாய்ப் பார்த்தாள் - எலெக்ட்ரிக் குக்கரில் பருக்கை மீதமில்லை.

"ராத்திரிக்கு நான் ஏதேனும்..."

"இல்லை. தோசை மாவு வாங்கினேன் - சட்னி அரைச்சால் ஆச்சு."

"வேலை வேலைன்னு மாயற நீ! எப்படி இத்தனை ருசியாய்ச் சமைக்கக் கத்துக்கிட்டே?"

“பசிச்சு கிடந்தீங்க - ஆக ருசி இரட்டிப்பாய்த் தோணுது..”

“அப்ப நீ அழகுன்னு நினைக்கறதுகூட அதனாலதானா?” அவன் குறும்பாய்க் கேட்க, சாரு திகைத்தாள்.

இந்த ஒரு வாரத்தில் அவன்,

‘என்னை விட ஏழு வயசு உனக்குக் கம்மி’ என்றபடி உடனேயே ஒருமைக்கு நகர்ந்திருந்தான்.

“எதனாலதானா?”

“இங்கு வேறு பெண்களே இல்லாததாலா..? நோ நோ... அதற்குரிய பெருமைகளை எப்பவும் கொடுத்திடணும்.”

“பிரபு அப்படி நினைக்கலியே... என் ஒரே பிளஸ் என் வேலைதான்னுவார்...”

“யாரந்த முட்டாள் பிரபு? உன் பாஸா?”

“இல்ல... பார்ட்னர்னு வைங்க...”

“இங்கே வந்த பிறகு நீ யாரோடும் தொடர்பு கொண்ட மாதிரி தெரியலை... ஃபோன் கனெக்‌ஷன் வந்திடுச்சு... ஃபோன்ல பிரபுட்ட பேசனும்னா...”

அவசரமாய் மறுத்தாள்.

“இல்லை... எனக்குப் பிரபுட்ட... யாரிடமும் பேச அவசியமில்லை...”

“உறவுகள் கொஞ்சம் சிக்கலானவைதான்... ம்ம்?”

“அந்தச் சிக்கல்கள்தான் வாழ்க்கையை சுவாரஸ்ய-மாக்குதுன்னும் நினைக்கறேன்.”

“மேபி.” தோளை உயர்த்தியபடி எழுந்தான் - “அசதியாய் இருக்குது சாரு. அதிகமாய்ச் சாப்பிட்டுட்டேன்... தூங்கி எழுந்தால் வேலை ஜரூராய்ப் போகும்.”

பாத்திரங்களை நனைத்து வைத்தவன் வந்து கழுவுவதாய்ச் சொல்லிவிட்டுப் போனான்.



அன்று சீக்கிரமே இருட்டிவிட்டாலும் மண்ணைக் கிளறுவதும் நடுவதுமாய் இருந்தான்.

அவனை எட்டி எட்டிப் பார்த்த சாருவின் பார்வையில் கால் பங்கு மட்டும் வெட்டப்பட்ட தங்கக் காசு போல வானில் மிதந்த சந்திரனும் பட்டது.

அவள் இங்கு வந்த அன்று தேசலாயிருந்த நிலவு இன்று பூரித்திருந்தது. தனக்கும் சந்துருவிற்குமான உறவை, நட்பைப் போல... ஒரு பார்வை, சொல் அவன் தப்பாய் விடவில்லை.

வரவரப் பழக்கம் இயல்பும் இனிமையும் கூடியிருந்தது.

ஏன் இப்போது இருட்டியும் அவன் வீடு வராதது எரிச்சலாயிருந்ததே..!

சங்கோஜத்துடன் தனக்குள்ளாகச் சிரித்துக் கொண்டாள்.

கொல்லைப்புறம் துளிர்த்திருந்த சில புதினா இலைகளைக் கிள்ளிச் சேர்த்து சட்னி அரைத்திருந்தாள் - பழ நறுக்கல்களில் டின்ட் கிரீமைச் சேர்த்துப் பழ சாலட் செய்து குளிர வைத்தாயிற்று. அடுப்பில் தோசைக் கல்லை ஏற்றிவிட்டு அவனுக்காக இப்படிக் காத்திருப்பது விநோதமான அனுபவம்... அப்பா அம்மா விளையாட்டு சாயலில்..!

வெட்கமாயிருக்க, எண்ணங்களைத் திசை திருப்பிக் கடவுளுக்கு நன்றி சொன்னாள் - இங்கு தனிமையில் இருந்திருந்தால் அது கொடுமைதான் - தப்பான ஒருவருடன் சேர்ந்து இருக்க நேர்ந்திருந்தால் அது அதனினும் கொடுமை.

சாப்பிட மட்டும் வாய் திறப்பதில் எந்த சுகமுமில்லை.

தானும் நன்கு உண்டு உறங்கி இந்தச் சில நாட்களில் உடல் தேறியிருப்பதை உணர்ந்தாள் - அலைச்சல் இல்லாது, கைக்குக் கிடைத்த வெண்ணெய், எலுமிச்சைச் சாறு என்றெல்லாம் சருமத்தில் தடவிக் கழுவியதால் மேனியும் பளபளக்கிறது.

மங்கிப் போன உடைகள்தான் குறை.

ஒரிரு சுமாரானவை தவிர அவளிடம் நல்லதாய் ஏதுமில்லை.

ஆக அருமையான மாற்றமாய் அவளுக்குக் கடந்த நாட்கள் அமைந்து விட்டன. வேண்டிய குறிப்புகள், வேலைகள் எடுத்தாயிற்று. சொச்சத்தைச் சென்னையில் போய் முடிக்கலாம்... ஆனால் கிளம்பத்தான் மனமில்லை.

அதைப் பற்றி நினைக்கவும் கூடச் சுணங்குகிறது.

அப்போதுதான் அந்த டெலிஃபோன் மணி அலறியது.

மிக அமைதியான அச் சூழலில் விகாரமான ஒலி!

ஒரு கணம் திகைத்தாலும், அருகிருந்த அலுவலக அறைக்கு விரைந்து போய் ஃபோனைக் கையிலெடுக்கப் பிரியமில்லை... அழைப்பது பிரபுவாய் இருக்கலாம் என்ற நினைப்பில் மனம் மரவட்டையாய்ச் சுருண்டது.

சந்துரு ஓடி வந்தான்.

"என்ன சாரு... எடுக்காமல் நிற்கறே..?" அவன் கைநீட்ட தொலைபேசிக் கருவி அலுத்துப் போய் அமைதியானது.

"என்ன?"

"ப்ச்... பிரபுவாய் இருக்குமோன்னு தோணுச்சு... அதான்."

மிகச் சன்னமாய்ப் புன்னகைத்தான். ஆனால் அதிலிருந்த புரிதல் அவளை ஆறுதல் படுத்தியது.

"உங்களை வரச் சொல்லணும்னு யோசிச்சுட்டே வந்தேன்."

"ஏதேனும் உதவி வேணுமா?"

"ஆமா, நான் சுட்டுப் போடற தோசைகளைக் காலி பண்ணனும்."

"வித் ப்ளஷர்! குளிச்சுட்டு வந்திடவா? இன்னைக்கு வியர்த்திடுச்சு."



"ம்ம்... பத்து நிமிஷமாகுமா?"

"யெஸ்" - உள்ளே ஓடினான்.

சூடான தோசைக் கல்லில் நீர் தெளித்து நீவி, மாவை வார்த்து விரித்தாள் - வட்டம் பெரிதாவது போல தனக்குள்ளே சந்தோஷமும் விரிவது புரிந்தது.

மூன்றாம் தோசையை எடுக்கையில் அவன் வந்து விட்டான்.

எப்போதும் போல இளநீல பைஜாமா ஷர்ட் - அதுதான் அவனது இரவு உடை.

தாடி மேலும் அடர்ந்திருந்தது.

தோசைகளை சட்னியுடன் வைத்து நீட்டினாள்.

"நீயும் உட்காரேன்... நானும் சுமாராய்த் தோசை வார்ப்பேன்!" என்றான் - ஒரு விள்ளலை வாயில் போட்டபடி.

"இருக்கட்டும்... புதினா சட்னி..."

"க்ரேட்... சமைக்கறதில் மட்டுமில்லை விஷயம்."

"பின்னே?"

"'எப்படி வேண்டுமானாலும் சமையுங்கள் - ஆனால் அன்போடு பரிமாறுங்கள்!' என்ற வரிகள் உண்மைதான்னு படுது."

"ம்ம்... நான் பசியோடு வந்து நின்ற முதல் நாள், நீங்க சமைச்சுப் போட்டது போல... அது ரியலி ஷ்பெஷல்!"

"தாங்க்ஸ் மேம்... வேலை எப்படிப் போகுது?"

பரஸ்பரம் வேலை பற்றிப் பேசினார்கள் - சாப்பிட்ட பின் மேசையை ஒழித்து ஃப்ரிட்ஜிலிருந்த கண்ணாடிக் கோப்பைகளை எடுத்தாள் -

"வாவ்... அதென்ன - ஃப்ரூட் ஸாலடா?"

"ம்ம்..." பெருமிதமாய்த் தலையசைத்தாள்.

"நம்ம முதலாளி இப்ப வந்து பார்த்தால் நாம உழைப்பதை நம்ப மாட்டார் - ஏதோ ஹாலிடே என்ஜாய் பண்றதாய்த் தோணும்."

"நமக்கு உண்மை தெரிஞ்சால் போதாது? வெளியே போய் உட்கார்ந்து சாப்பிடலாமா?"

"ஷுயர்."

போகும் வழியில் ஹாலின் ரேடியோவை முடுக்கி அதில் வீணை மீட்டலை வழிய விட்டான். முன்புறப் படிகளில் உட்கார்ந்து இனிப்பைத் துளித்துளியாய் ரசித்துச் சாப்பிடலானார்கள்.

திடீரெனக் கிளம்பிய அந்த வாசனை அவள் நாசியை நெருடி அவளை அவஸ்தைப்படுத்தியது...

"மண் வாசனை... மழை வரும்போல..." என்று இருண்ட வானத்தை அண்ணாந்து பார்த்தபடி சொன்னாள்.

அவள் உடம்பு சற்று சிலிர்த்தது.

"குளிருதுன்னா... உள்ளே போயிடலாம்."

"இருக்கட்டும்... அந்த நிலா நான் வந்தப்ப தேசலாய்க் கிடந்தது. இன்னும் மூணு நாளில் தங்கத் தட்டாயிடும்."

"நாள் ஓடிருச்சு... வேலை திருப்தியாய் முடிஞ்சிருச்சில்ல?"

"ம்ம்.. க்ருதிகாவிற்குத் திருப்தி வர மாதிரி இருக்கணும்... அதான் முக்கியம்."

"பணம் இருந்தால் இது ஒரு கஷ்டம்... நம்ப வீட்டை நாமே அலங்கரிக்க முடியாது..."

"உண்மைதான்... எளிய வீடுன்னாலும் நம்ப ரசனையின்படி வைக்கணும்..."

"அந்த இடத்தில் ஒரு ஸ்விம்மிங் பூல் போட்டால் இப்படி நிலாக் காலத்தில் குளிக்கலாம்."

"ஜலக்கிரீடையா...?" என்றவள் கூச்சத்துடன் நாக்கைக் கடித்தபடி பேச்சை மாற்றினாள் - "குளிருமே..." என்று.



"சின்ன ஹீட்டட் பூல் - பணமிருந்தால் அதெல்லாம் ஒரு பொருட்டேயில்லை."

"ஆனால் அதிலே இறங்கிக் குளிக்கத்தான் நேரமிருக்காது. பல பணக்கார வீடுகளில் உடற்பயிற்சிக் கருவிகள் பலது இருக்கும்... தூசு படிஞ்சு..."

சிரித்தவர்கள் இருவரது பார்வையும் இரு நெடிய மரங்களிடையே வந்து மிதந்த நிலாவில் நிலைத்தன.

"ம்ம்... பணப்பை பெருக்குதோ இல்லையோ, மனுஷ மனசில் அன்பு, நிம்மதி இதெல்லாம் பெருக்கணும்... இந்த நிலாவைப் போல..."

சொன்னவனை ஒரு இனிய ஆச்சரியத்துடன் பார்த்தாள்.

சற்று முன் தனக்குள் தோன்றிய நினைப்பல்லவா இது?

"என்ன திகைப்பாய்ப் பார்க்கறே?"

"நானும் நினைச்சேன்... இப்படி நிலா போல நேசமும் வளரணும்னு..."

"அப்படீன்னா தேய்..."

"ம்ஹூம். தேயக் கூடாது. நேசம் பூரணமாகி அப்படியே நிலைச்சு இருந்திடணும்... கடைசிவரை..."

அவன் பார்வை தன்னைக் குடைந்து உள்ளேறுவதாய்த் தோன்ற, அவளை வெட்கம் பிடுங்கியது.

"பாலை உறை குத்தணும்!" - என்றபடி எழுந்து உள்ளே விரைந்தாள்.

## 7

தன் முன் நின்ற புது மனிதரைப் பார்த்த சாரு விழித்தாள் - நீவிக் கொண்டிருந்த காலை அவசரமாய் மடக்க முயல வலி சுண்டியது.

"ஸ்ஸ்... ஆ..."

"பிரமாதமான வலி போல!"

கேட்டவரின் பின்னே நின்ற சந்துருவைப் பரிதாபமாய்ப் பார்த்தாள்.

"இவர் டாக்டர் வில்லியம்!" - அறிமுகப்படுத்தினான்.

டாக்டரின் பருத்த விரல்கள் அவளது கணுக்காலைச் சற்று அழுத்தி, நீவி ஆராய்ந்தன.

"பிராக்சர் இல்லை... இல்லைன்னா பெரிசாய் வீங்கியிருக்கும்."

"ஒரு எக்ஸ்-ரே எடுத்திடலாமே!" என்றவனை முறைத்துவிட்டு.

"ரெஸ்ட்டாய் இரும்மா - வலிக்கு மாத்திரை தரேன்" என்றார். சற்று நேரம் பொதுவாய்ப் பேசிய பின் வைத்தியர் கிளம்ப, தனிமையில் சாருவிற்கு அழுகை பொங்கியது.

'பெல்மட்'டுகளுக்காக அளவெடுக்க இவள் ஜன்னல் மேலேறித் தடுமாறி விழுந்து விட்டாள்.

கணுக்கால் வலித்தது நிஜமென்றாலும் கண்ணீர் கிளம்பியது சந்துருவின் கரிசனையால்!

எப்படிப் பதறி விட்டான்!

கீழே கிடந்த தன்னைப் பூவாய் அவன் தூக்கிய நினைப்பில் இன்னும் காதோரம் குறுகுறுத்தது.

எத்தனை வலுவான கை! சாய, வாகான மார்பு!

இத்தனை வலிமை இருந்தும், எத்தனை மிருதுவாய்த் தன் காலைப் பற்றினான். பிரபுவுடன் எதேச்சையான தீண்டல் கூட நேர்ந்ததில்லை.

நல்லவேளை... ஒரு ஆணின் அண்மை, அணைப்பு... இத்தனை இன்பமா! கண்ணீர் வழிய வெட்கப்பட்டாள்!



எத்தனை காய்ச்சல், உடல் நோவிலும் இவள்தான் வைத்தியரைத் தேடிப் போயிருக்கிறாள்... மருத்துவர் அவளைத் தேடி வந்தது இது முதல் முறை!

அதற்குக் காரணம் இந்தக் கால் வலி அல்ல... சந்துரு!

அவனது அன்பு! பெருகிய கண்ணீரைத் துடைத்த சமயம் உள்ளே நுழைந்தவன் மேலும் பதறினான்.

"ச்சே... உனக்கு மாத்திரையைத் தந்திட்டுப் போயிருக்கனும்... ரொம்ப வலிக்கிறதா?"

இவள் சிரித்தாள் -

"என்னை யாரும் இப்படி இதுவரை தாங்கி ஏந்தியதில்லை... அதான்..." என்றபடி, அவன் தந்த மாத்திரைகளை ஆரஞ்சுப் பழரசத்துடன் சேர்த்து விழுங்கினாள்.

"கண்டதையும் யோசிக்காமல் தூங்கு..."

ஒரு சகோதரனின் உரிமையுடன் அதட்டினான்.

"இன்னைக்கும் மண் வாசனை..."

'ம்ம்... நேற்றுப் பெய்யலை... இன்னிக்காவது மழை வரணும். அதுதான் நான் நட்ட செடிகளுக்கெல்லாம் டானிக்... என்ன இன்னுமா வலிக்குது..."

"இல்ல..."

"பின்ன முகம் போற போக்கு சரியில்லையே!"

அவளுக்கு ஆச்சரியம்தான் - இத்தனை வெளிப்படையான முகமா தன்னுடையது? இத்தனை சுளுவாய்ப் புரிந்து கொள்கிறானே!

"இல்ல... மழை பெய்தால்..."

"டானிக்னேன்."

"இல்ல இடி... இடிக்கும்!" என்றாள் மிக மெள்ள. பொங்கிய சிரிப்பை அவன் அடக்குவது புரிய முகத்தை மறுபக்கமாய்த் திருப்பிக் கொண்டாள்.

"அது ஒன்னும் புதுசில்லையே..." அவனும் மெள்ளவே சொன்னான்.

"நேற்று நல்லவேளை மழை பெய்யலை..."

அவன் கண்கள் கூர்மையாயின.

"பயமா சாரு?' குரல் மேலும் தழைந்து வருடியது.

வேறு பக்கம் பார்த்தபடி தலையாட்டினாள்.

"இடி, மழை எல்லாம்தான்."

"எதனால் - என்ன காரணம்?" கட்டிலின் கால்மாட்டில் உட்கார்ந்து தான் அவள் சொல்லப் போவதைக் கேட்கத் தயார் என்பது போலக் கைகட்டிக் கொண்டான்.

அவள் சொல்ல ஆரம்பித்தாள்... தன் பெற்றோரைக் கருக்கிய இடி பற்றி, அவர்களை ஒரே இரவில் இழந்த அவளது வாழ்க்கையும் முற்றும் தடம் நழுவிப் போனதை...

"ஓ... அதனால்தான் பாட்டி வீட்டிலே வளர்ந்தியா?"

"சொந்தப் பாட்டியில்லை - பாட்டியுடைய அக்கா."

"அங்கே நீ நிம்மதியாய் இருந்தியா?"

"ஆரம்பத்தில் கொஞ்சம் கஷ்டமாய்த் தோனியது... நானும் ரொம்ப சென்ஸிட்டிவ். பிறகு பழகிட்டேன். நான் விரும்பிய கோர்ஸையே படிக்க வச்சாங்க பாட்டி. ம்ம்... நிம்மதியான நாட்கள்தான்... ஆனால் மனசில் நாம அனாதைங்கற துக்கம் சதா இருக்கும்..."

மண் வாசனை மேலும் வலுத்தது.

மழைக்கான குதூகலக் கட்டியமான அந்த சுகவாசனை அவளைச் சஞ்சலப்படுத்தியது. எழுந்து ஜன்னல்களை மூடினான்.

"தாங்க்ஸ்... எனக்கு அந்தக் கறுப்பு மேகங்கள்கூட அலர்ஜிதான்."



"கருமேகங்கள் பயமுறுத்தலாம் சாரு. ஆனால் அவைதான் நீர் பொழியும். வெண்மேகங்கள் பார்க்கப் பவிசாய், பஞ்சு பஞ்சு போல மிதந்தாலும், அதனால் நமக்குப் பயனில்லையே..."

"ம்ம்..."

"இப்பவும் தோட்டத்தில் நான் வெறுமே மலர்ச்செடிகளையே வைக்கலை. ஊடே நிறையக் கனிமரங்கள் உண்டு. தோட்டம் வெறுமே அழகுக்காய்னு இல்லாமல் பலன் தரணும்..."

"பூக்களும் பார்வைக்குப் பலன் தருதுதானே... எத்தனை குளிர்ச்சி... கவர்ச்சி!"

"அவை வேண்டாம்னு சொல்லலியே... கூடவே பழமரங்களும் இருக்கட்டும்னுதானே சொல்றேன்... பெரும்பாலான நேரங்களில் நாம பார்க்கறது வெண்மேகங்களைத்தான்... கருமேகங்கள் அப்பத்தான் திரளுது... ஆனா உலக ஜீவன்களுக்கு அது அத்தியாவசியத் தேவையாச்சே..."

"ம்ம்..."

"பஞ்ச பூதங்களை இணைக்கும் நூல் மழைன்னு சமீபத்தில் ஒரு கவிதை படிச்சேன்.

'ஆகாயம் பூமியை நீர்க் கரங்கள் இணைக்க,

காற்றும் அக்னியும் ஸ்வரூப மின்னல்கள்'

ன்னு."

"நீங்க மனோதத்துவம் படிச்சிருக்கீங்களா?"

"ம்ஹூம்... உன் பயம் புரிஞ்சுது. அவ்வளவுதான்."

போர்வையை விரித்து அவளுக்குப் போர்த்தியவன் வெளியேறினான்.

ஒரு பாடலை 'ஹம்' செய்தபடியே வரையும் வேலையில் முனைந்திருந்தாள் சாருமதி.

அந்நேரம் கதவு தட்டப்பட, சிறு விந்தலுடன் நடந்து போய்க் கதவைத் திறந்தாள், ஏன் சந்துரு கதவைத் தட்ட வேணும் என்ற யோசனையுடன்.

வெளியே நின்றது ஒரு புதுமுகம்.

கையிலிருந்த பென்சில்களை மேசையின் மேல் வைத்தபடி பதட்டமானாள் -

"ஸர்... நீங்கதான் காந்தனா? வணக்கம்... வாங்க..."

"இல்ல... நான் சாரதி. காந்தன் கம்பெனிகளின் மேனேஜர்."

"ஓ? வேலைகள் நடந்தபடி இருக்குது... ஸர்."

"நல்லது - ஏதும் தேவைன்னால் எங்களைத் தொடர்பு கொள்ளலாம்."

"சரிங்க, ஸர்.."

உயர்ந்த ஸூட்டில் நின்றவரை வியந்து பார்த்தாள் சாரு. கல்யாண மேடைகளையும் அலங்கரிப்பதுண்டு என்பதால் மணமக்களின் உடைகளைப் பற்றி முதலில் தெரிந்து கொண்டு அதற்குத் தோதாய் மேடையை அமைப்பாள் - ஆக விலையுயர்ந்த உடைகளிலும் அவளுக்குப் பரிச்சயம் உண்டு. சாரதி அணிந்திருந்த ஸூட் ஆறாயிரம் ரூபாய்க்குக் குறையாது - நேர்த்தியான ஸில்க் டை. ஒரு மேலாளரே இப்படி உடுத்தக் கூடுமானால் இது பெரிய நிறுவனம்தான்!

"நீங்க வருவதை எதிர்பார்க்கலை... நான் செய்த வேலைகளைப் பார்க்கறீங்களா?"

"பரவாயில்லை... பிறகு பார்ப்போம்." சற்று தலைதாழ்த்திவிட்டு சாரதி விலக, சாரு அவசரமாய் மேலறை ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தாள். நீளமாய் ஒரு வெளிநாட்டுக் கார் ஜம்பமாய் நின்றது.

ஹா! குட்டி விமானம் மாதிரியிருக்குது... ஸ்மூத் லேண்டிங் செய்ததால்தான் சத்தமே கேட்கலை போலும். தனக்குள் மெச்சிக் கொண்டாள்.



அவசரமாய் ஏறியதில் கணுக்கால் தெறிக்க, அமர்ந்து எட்டி எட்டி மட்டும் நோட்டமிட்டாள். அலுவலக அறையில் ஆண்கள் இருவரும் இருப்பது புரிந்தது.

ஒருமணி நேரம் கழித்து கார் சன்ன உறுமலுடன் கிளம்ப, சில நிமிடங்களில் சந்துரு மேலேறி வந்தான்.

"சூடாய்ப் போளி சேலத்திலிருந்து வந்தது - சாப்பிடேன்."

"ம்ம்... மானேஜர் வந்திருந்தார்... போல?"

"ஆமாம்."

"கொஞ்சம் பந்தா பேர்வழியோ?" - போளியை ருசித்தபடி கேட்டாள்.

"ஏன்... என்ன சொன்னார்?"

"ஏதும் சொல்லலை... நான் செய்த வேலை பற்றியும் கேட்டுக்கலை..."

"நாம் பண்றது அவருக்காக இல்லையே!"

"ஆனா உங்களோட நிறையப் பேசினார் போல...?"

"வேலை விஷயமாய் நிறைய உத்தரவுகள்..."

"போளி நல்லாயிருக்கே - வாயில் கரையுது..."

"அவர்தான் கொண்டு வந்தார்..."

"அதெப்படி... நமக்காகவா?"

அவளது பேச்சை இடைவெட்டினான் - "ஃபோன் வந்தது சாரு... கூப்பிட்டது பிரபு..."

வாயைத் துடைத்துக் கொண்டவள்,

"நான் இருக்கறதாய்ச் சொல்லலையே...?" கெஞ்சலாய்க் கேட்டாள்.

"ஃபோனை எடுத்தது சாரதி... அவருக்கு விஷயமேதும் தெரியாதே... ஆக நீ இருப்பதைச் சொல்லிவிட்டார்."

முகம் சுணங்கினாள்.

"என் நிம்மதி போச்சு..."

"நம்ம நிம்மதி நம் கையில்தான் இருக்கணும் சாரு... அதைப் பறிக்க, கெடுக்க மற்றவங்களுக்கு உரிமை கிடையாது."

"உங்களுக்குப் பிரபுவைத் தெரியாது... கண்டபடி கத்துவார்..."

"இடி மாதிரியா?"

"அதேதான்... புரிஞ்சுகிட்டீங்க..."

"பயம்ங்கறது புரியுது... அதே சமயம் நீ இனி யாரையும் கண்டு அஞ்ச வேண்டாம்னு தோணுது."

"எனக்கும் இப்ப கொஞ்சம் தைரியம் துளிர்த்திருக்குதுங்க, சந்துரு. முந்தாநாள் மழை கொட்டிச்சே... எனக்குப் பயம்மாவே இல்லை..."

ஒரு சிறுமியின் பெருமிதத்துடன் சொன்னாள்.

"குட் - பிரபுவையும் சமாளிச்சுடலாம்."

அவன் தன் முஷ்டியை வலுவாய் மடக்க, இவளும் அதே போலச் செய்து சிரித்தாள்.

## 8

சந்துரு தந்திருந்த வெளிநாட்டுப் பத்திரிகைகளில் அவள் ஆர்வமாய் மூழ்கியிருக்க, அந்தப் பக்கத்தைப் பார்த்த சந்துரு கேட்டான்.

"உனக்கு லண்டன் டவரைப் பார்க்க ஆசையா சாரு?"

திகைத்தவள் பின் நகைத்தாள்.

"என்ன கேள்வி... யாருக்குத்தான் இஷ்டமிராது?"



"நிறையப் பெண்களுக்குச் சிங்கப்பூர், துபாய் போய் ஷாப்பிங் பண்ணத்தான் ஆசை. இப்படிப் பழங்கால மாளிகைகளைப் பார்ப்பதில் ஆவல் இருக்காது. நீ அவற்றை நுணுக்கமாய் ரசித்து, அதையே நம்மூருக்கு ஏற்றாற்போல மாற்றிடுவே..."

"ஷ்யூர்..." உற்சாகமாய் ஆமோதித்தாள் - "ஆயிரம் வருஷத் தொன்மையான இந்த லண்டன் டவர், மியூஸியம், இப்பத்திய பக்கிங்ஹாம் பேலஸ் எல்லாம் பார்ப்பேன்..."

வழுவழுத்த பக்கங்களை நீவியபடி சொன்னவளது பேச்சு, வெளியே கேட்ட காரின் உறுமலில் வெட்டுப்பட்டது.

வீட்டுப் படியேறி வந்தவனைப் பார்த்து விக்கித்தாள்.

இதுவரை இங்கிருந்த சந்துருவை எங்கே காணோம்? தாயைத் தேடும் குழந்தை போல அலமலந்தது மனம்.

புத்தகங்களை வைத்து விட்டு எழுந்தவளைப் பார்த்து அகலமாய்ச் சிரித்தான் பிரபு!

"அடடே... என் வான்கோழி இங்கே வந்து முகம் புதைச்சுகிச்சா?" அவனது உரத்த சிரிப்பு அவளது நரம்புகளை இழுத்தது... வெறுப்புக் கிளம்பியது.

"மண்ணில் முகத்தைப் புதைக்கறது தீக்கோழி வான்கோழியில்லை..."

"ஏதோ ஒரு கோழி... எப்படியிருக்கே?" ஆக தான் என்றுமே இவனுக்கு மயிலாகப் போவதில்லை... தோகை விரிக்கும் வான்கோழிதான்.

"என்ன பிரபு - திடீர் வருகை?"

"நீ திடீர்னு மறைஞ்சிட்டியே... தேடிப் பிடிச்சுட்டேன் பாரு! ரீனாட்ட சேலம் போறதாய் மட்டும் சொல்லியிருந்தே... ஆனாலும் வேறெங்கே போவ?"

ஏனிப்படிக் கத்திப் பேசுகிறான்?

"ஏன் சாரு... இங்கே வந்தவ ஒரு ஃபோனாவது பண்ணக் கூடாதா?"

"உங்களுக்குத்தான் தெரியுமே.. நான் வேலையில் இறங்கினால் அநாவசிய நினைப்புகளே வராது..."

"நீதான் வேலையில் சுட்டிகையாச்சே.. ஒரே அலுப்பு சாரு... ஒரு டீ போட்டுக் கொண்டாயேன்."

சோபாவில் தொப்பெனச் சாய்ந்தான்.

இத்தனை நாட்களில் ஒரு நேரம்கூடச் சந்துரு தன்னை இப்படி ஏவியதில்லை என்று பட, அவளும் அமர்ந்தாள்!

சற்று ஆச்சரியமான அவன் பார்வையை அலட்சியப்படுத்தினாள். தன் செய்கை அவளுக்கே ஆச்சரியம்தான்!

முன்பு என்றால் அவனிடமிருந்து தப்பவே சமையலறைக்குள் தஞ்சம் புகுந்திருப்பாள்... ஆனால் இப்போது எதையும் நின்று சமாளிக்கலாம் என்ற தெம்பு!

"எம்மேல் இன்னும் கோவமா சாரு?"

அடடே... பிரபுவின் குரலும் கூடக் குழைகிறதே! அவள் பேசவில்லை.

"நீயும் கோவிச்சுட்டா எப்படி? பிஸினஸ் மோசம்தான்னு பிறர் என்னை விட்டு ஒதுங்கலாம்... நீயுமா?"

இதென்ன புதுக்கதை என்பது போல நிமிர்ந்தாள்.

"இத்தனை நாள் ராஜஸ்தான் போயிருந்தேன் - சகாய விலையில் நிறையக் கிடைச்சது - ஆனாப் பணமெல்லாம் அதிலே முடங்கிடும்..."

'அதைத்தான் வாடிக்கையாளர்களிடமிருந்து ஐந்து பங்காய்க் கறந்துடறியே... பிறகென்ன!' என்று மனதுள் கறுவினாள்.

"பணம் சுழலும் போது நம்ப கையில் தங்காது... அதான் உன்னிடம் காசு கேட்டேன்... நீயானா கோபமாய்க் கிளம்பிட்டே... இந்நேரம் நீயும் ஒதுங்கினால்..."



"அது பாட்டி என் அலுவலகம் ஆரம்பிக்கன்னே சொல்லித் தந்த பணம்."

"ஏன் பிரிச்சுப் பார்க்கறே.. பேசறே?"

"எனக்குத் தொழில் பக்தி அதிகம், பிரபு. நீங்க அடிக்கடி சொல்வது போல அது என் ஒரே பலம்... ஆக அதில் நான் ஏதேனும் செய்யணும்... அதான் வேலையில் மும்முரமாயிட்டேன்..."

"குளுகுளு காற்று உனக்குச் சேராது, சாரு... ஆள் தேறிட்டே... வேலை ரெண்டாவது.. முதல்ல வாழ்க்கையில் செட்டிலாயிடலாம்..." எழுந்தவன் அவளை நெருங்க, அவளது இதயம் எகிறியது.

"என்ன சாரு... சார்தான் ஃபோன் பண்ணினவரா?"

ஆழ்ந்த அழுத்தத்துடன் கேட்டபடி வந்த சந்துரு அந்நேரம் பெரிய நிம்மதியை அளித்தான்.

"ம்ம்."

"நீ காலைல மாத்திரை போட்டாச்சா?"

"வந்து... ஆமாம்..."

"ஆனா ஜூஸ் குடிக்கலை போல? மேசையிலேயே விட்டுவிட்டு வந்துட்டே.. குடிச்சிடு!" குவளையை நீட்டினான்.

ஒரு மகாராணியாய்த் தான் நடத்தப்படும் உல்லாசத்துடன், எழுந்தவளின் கணுக்கால் மறுபடி நோக,

"ஸ்ஸ ஆ..." சுணங்கினாள்.

"பார்த்தும்மா!" - சந்துருவின் கைகள் அவள் தோளைச் சுற்றின. இப்போது அவளுக்குப் பிரபுவின் பக்கம் பார்க்கும் துணிவில்லை. அவன் அங்கிருந்து கிளம்பி விட மாட்டானா என்ற தவிப்புதான்.

"உட்காரேன்!" என்று சந்துரு வேறேதோ பேச, பிரபுவிற்கு அந்த அசட்டையைத் தாள முடியவில்லை.

"அப்ப நான் கிளம்பட்டா?' என்றான் சற்றுக் காட்டமாய்.

"சரி."

இந்த உடனடிச் சம்மதம் பிரபு எதிர்பார்க்காதது.

"கிளம்புங்க.." சந்துரு வழிகாட்டுவது போல முன்னே நடக்க, பிரபு சற்று அடங்கி, அசட்டு முழியுடன் பின் தொடர்வதை விழி விரியப் பார்த்தாள்.

அவர்கள் ஏதோ பேசியபடி வெளியேற, 'சட்'டென்று பற்றிய அயர்ச்சியில் உடல் தொய்ய, இருக்கையில் சரிந்தாள்.

இது எதிர்பாராதது - அவன் கேட்ட தேநீரைக் கூடப் போட்டுத் தராதது குறுகுறுத்தது.

ஆனால் ஒரு கெட்ட மகிழ்வுடன் ஏறக்குறைய பிரபுவைச் சந்துரு நெட்டித் தள்ளினாற்போல வெளியேற்றியதும் நினைப்பு வந்தது...

தனக்கு ஒரு அன்பான அண்ணன் அல்லது கரிசனையான கணவன் இருந்திருந்தால் இதையேதான் செய்திருப்பான்...

'மாத்திரை சாப்பிட்டாச்சா?'

'ஓய்வெடு - பழரசம் குடி....' இதுமாதிரியான கவனிப்புகள் எல்லாம் வாழ்நாளில் அவளுக்குக் கிடைப்பது இதுவே முதல் முறை! அதுவும் பிரபுவின் முன்னும் கூச்சமின்றிச் சந்துரு தன்னைத் தாங்கியது அவளுக்கு இரட்டிப்பு குஷி!

இவளை ஒரு பொருட்டாகவே எண்ணாத பிரபுவின் முகம் போன போக்குதான் காணச் சகிக்கவில்லை!

ஆனால் அவன் அப்படிக் கிளம்பிப் போனது நிம்மதியான ஒரு அயர்ச்சியைத் தர, படுக்கையில் முடங்கினாள்... இனி இங்கே தங்குவதிலும் அர்த்தமில்லை. இப்படி நினைத்ததும் பள்ளத்தில் தடுக்கி விழுந்ததுபோல மனம் அதிர்ந்தது.



சந்துருவும் கூட இங்கிருந்து போக வேண்டியவன்தானே?... இதொன்றும் அவர்களுக்குச் சொந்தமான இடமல்லவே! இந்த எண்ணமும் மிகக் கசந்தது...

ஏன்?

சந்துருவின் மீது தனக்கு என்ன இப்படியொரு அலாதிப் பிடிப்பு?

அவனது கண்ணியத்தினால் ஏற்பட்ட மதிப்பா?

தன்னையும் ஒருவன் மதித்துப் பிரியம் காட்டுகிறானே என்றதால் மனம் நெகிழ்ந்து போனதா?

அவனது பேச்சு, தோற்றம், நடை, புன்னகை... எல்லாம் இப்போது நினைக்கையிலும் மனம் கனிந்து கசிகின்றதே..!

பிரபுவிடம் தோன்றாத இந்த உணர்வுதான்... காதலா?

அவள் இதயம் சுகமாய்ப் படபடத்தது..! இப்படியே படுத்துக் கிடந்தால் எண்ணங்கள் தறிகெட்டுப் பாய்வது போலப் பட, எழுந்து ஏதேனும் வேலையில் தன்னை ஈடுபடுத்த முயன்றபோதுதான் ஃபோன் மணி அலறியது!

சந்துரு அங்கு இருப்பதாய்த் தோன்றவில்லை...

அதிலும் 'இதுதான் காதலா?' என்ற ஞானோதயம் வந்த பிறகு அவனைப் பார்க்கும் துணிவுமில்லை!

அழைத்த கருவியை எடுத்தாள்.

பேசியது பிரபு...

'ஓ... எங்கேருந்து பேசறீங்க?' - இயல்பாய்க் கேட்க முயன்றாள்.

"சேலம் வந்தாச்சு... பசிச்சுது... சாப்பிட்டேன். ஆயிரங்களைத் தர முடியாதுன்னு ஓடிட்டே.... இப்ப ஒரு டீ கூடப் பெறாதவன் ஆயிட்டேன் இல்ல..?'

"திடீர்னு வந்து... நீங்க..."

"திடீர்னு வந்த வாழ்வுதாம்மா..." அவன் குரல் சற்றுக் குழறியது.

இங்கு தேநீர் கிடைக்காத ஆத்திரத்தில் வேறேதோ குடித்திருப்பான் போலும்... சாருமதிக்குத் தன் மேலும் வெறுப்பு வந்தது.

"ஒரே வாரத்துல வந்த வாழ்வு... உனக்கு இப்ப மத்ற எல்லாம் மறந்திடுச்சு... ம்ம்?'

"இந்த வேலையை ஒழுங்காய்ச் செய்தால்தான் என் எதிர்காலத்திற்கு நல்லது... அதான்.."

கொடூரமாய்ச் சிரித்தான்.

"போதும் சாரு... ஓவராய் நடிக்காதே... இனி உன் எதிர்காலம் ஜெகஜோதிதான்!"

"என்ன சொல்றீங்க?"

"சொல்லலை... அம்மணிகிட்ட கேட்கறேன்... காந்தனை எப்படி இப்படி கவர்ந்து இழுத்தேன்னு கேட்கறேன்!"

"யார் காந்தன்..."

"சந்திரகாந்தன்... முதல்ல அவனைத் தாடியும் ஜீன்ஸுமாய்ப் பார்த்ததும் அடையாளம் புரியலை. ஆனாலும் ஆசாமி பிரபல புள்ளியாச்சே... ஒன்னு ரெண்டு விழாக்கள்ல பார்த்திருக்கேன்... தவிர அந்த பந்தா... பணம் பண்ற பந்தா இருந்துதே... அது அவனைக் காட்டிக் கொடுத்திருச்சு..."

இவளது உதடும் நாக்கும் உலர்ந்து கிடந்தன.

விஸ்கி இறங்கியதால் கண்டபடி கற்பனை செய்து உளறுகிறானோ? "இனி என் வீட்டுப் பக்கம் உன்னைப் பார்க்கக் கூடாதுன்னு மிரட்டினான், அந்தப் பணக்கார ராஸ்கல்... நீ இப்பத்தான் கொஞ்சம் கொஞ்சமாய்த் தேறிட்டு வர்றியாம்..."

"......"

"என் வீடுங்கவும் தெளிஞ்சுட்டேன்..."



"இது அவர் பொறுப்பில் இருக்கறதால்... அப்படிக் குறிப்பிட்டிருப்பார்..."

"பாவ்லா காட்டாதம்மா... பெரிய திமிங்கலம்னு தெரிஞ்சுதான் வலை வீசினே... ஆனால் திமிங்கலம் எப்படி வலையைக் கிழிக்காம இப்படி அடங்கிக் கிடக்குதுங்கறதுதான் புரியலை..."

சாருவிற்குத் தலை சுற்றியது.

இங்கு பத்து நாட்களாய்த் தன்னுடன் ஒரு வேலைக்காரனைப் போல உழைத்த சந்துரு 'காந்தன் கம்பெனிஸ்'ஸின் முதலாளியா? அதை விடப் பெரிய அதிர்ச்சி க்ருதிகாவிற்காய் நிச்சயிக்கப்பட்ட காந்தனா? கடவுளே...!

இது தெரியாமல்... தன் மனதை அவனிடம் இழந்து...

பிரபு தொடர்ந்து பேசினான்.

"நீங்க காந்தனான்னு கேட்டதும் 'யெஸ்'னு அகங்காரமாய்த் தலையசைத்தானே! என்னை அழுக்கு மூட்டை போல நான் வந்த டாக்ஸியிலேயே போட்டு வழியனுப்பிட்டான்... ஆனால் உங்கிட்ட பாகாய் உருகறான் மனுஷன்...! அந்த அளவுக்கு அவனைக் குழைய வச்சுட்டே... இத்தனை நாள் தனிமையில... என்னென்ன செய்து...?"

தொடர்பைத் துண்டித்தாள் சாரு.

மறுபடி பிரபு தொடர்பு கொள்ள முடியாதபடி ரிஸீவரைத் தனியே வைத்தாள். வெற்றுக் காகிதம் போல் கிடந்த புத்தியைத் தட்டி யோசிக்க வைத்தாள். தன் மீது சில நேரம் பட நேர்ந்த அவன் கைகள், விரல்கள் மிருதுவாய் இருந்தனவே... கரடுதட்டினவையாய் இல்லையே...!

சாரதியோடு இதே அறையில் அவர்கள் பேசியது... யார் யாருக்கு உத்தரவுகளை இட்டது?

மெள்ள மேசை இழுப்பறைகளைத் திறந்து ஆராய்ந்தாள்...

அச்சடிக்கப்பட்ட காகிதங்களும் கோப்புகளுமாய்... பலவற்றில் எஸ்.கே. என்ற அழகான கையெழுத்து.

அவளுக்கு உடல் குளிர்ந்து நடுங்கியது.

இது சத்தமில்லாமல் உச்சந்தலையில் இறங்கிய ஒரு இடி!

எத்தனை நேர்மையாய் மென்மையாய்ப் பழகினான்... அப்படிப்பட்டவன் இப்படி ஏமாற்றக் கூடுமா?

இல்லை... இந்த எஸ்.கே. வேறு யாரோ?

'இன்னைக்கு என் பைக்ல நாம ரெண்டு பேரும் டவுன் போய் லஞ்ச் சாப்பிடப் போறோம்!' என்ற சந்துரு அல்ல.

கோடீஸ்வரக் காந்தன் தன் தொழில் அத்தனையையும் விட்டுவிட்டு இங்கு வந்து தோட்டத்தைக் கொத்துவானேன்?

மேனேஜர் சாரதி உசத்தியாய் உடுத்தி, வெளிநாட்டுக் காரில் வர, இங்கு முதலாளி வரண்ட ரொட்டி, பழத்தில் உயிர் வாழ்வானேன்?

இன்று மதியம் தான் அவனுடன் கிளம்ப வேண்டும் என்பது நினைவிற்கு வர, அவசரமாய் உடை மாற்றினாள்.

கொண்டு வந்திருந்த ஒரே சேலையைக் கட்டினாள்.

கைக்கு அடங்காத ஒன்னரைச் சாண் கூந்தலை அழுந்தப் பின்னினாள். சந்தன நிறத்தில் சிறு சிகப்புப் பூக்களிட்ட சேலை. ஆகப் பின்னலில் ஒரு ஒற்றைச் சிகப்பு ரோஜா. பொருத்தமாய்ச் சாந்து. மிக லேசாய் உதட்டில் சாயம்.

'கழுவறது, சமைக்கறதுன்னு இல்லாம நிம்மதியாய்ப் பேசலாம்!' என்றிருந்தானே சந்துரு... என்ன பேசுவான்...?

அவளையும் மீறிக் கன்னங்கள் சூடேறி மின்னின.

இருவரும் சுலபமாய்ப் பழகுவதால் இனிச் சேர்ந்தே வேலைகளை ஏற்றுக் கொள்ளலாம் - பரஸ்பரம் சிபாரிசு செய்யலாம் என்று தொழில் முறை பேச்சாகக் கூட இருக்கலாம்.

ஆனால் மதிய உணவை ஒரு கூடார அமைப்புள்ள இடத்தில் சாப்பிட்டு முடித்ததும் பரபரப்பு கூடியது.



அவனும் கவனமாய் உடுத்தியிருந்தான். அவனுடைய முதுகை ஒட்டியபடி வந்த பயணம் ஏன் முடிந்தது என்ற ஏக்கம் இன்னும் அவளுள் பிராண்டியது... இது பிரிவுபசார விருந்து போலவோ?

'உன் தோழமையை மிகவும் ரசித்தேன் தோழி - வணக்கம்!' என்று கைகுவிக்கப் போகிறானோ?

சாப்பிட்ட கொஞ்சமும் வெளியே வந்து விடும் போலிருந்தது.

"நீ சரியாவே சாப்பிடலை, சாரு..."

பேச்சு எழும்பாததால் நடுங்கும் விரல்களால் சோம்பு, கற்கண்டை எடுத்து வாயிலிட்டு மென்றாள்.

"அப்ப பேசலாம்... ம்ம்... நாம சுலபமாய் ஒத்துப் போறோம் இல்லையா..?"

"ம்ம்..."

"நாம சேர்ந்து..."

"அதாவது பிரபுவிற்குப் பதிலாய் வேலைகளில் பார்ட்னராய்...."

"அதில்லை... வாழ்க்கையில்... வாழ்வில் என் பார்ட்னராக முடியுமா... சாரு?"

மூச்சும் விட மறந்தவள் போல உட்கார்ந்திருந்தாள் அவள்.

## 9

"நாம கல்யாணம் பண்ணிக்கலாமா, சாரு...?"

தணிவாய் ஆனால் தெளிவாய்க் கேட்டான்.

"என்ன பேச்சேயில்லை... இந்தப் பத்து நாட்களும் அருமையாய்ப் போனது..."

"ஆனால்... கேலி பண்ற விஷயமில்லை இது..."

"கேலின்னா அதை வீட்டிலேயே பண்ணியிருப்பேன்... தவிர கல்யாணம் கேலிக்குரிய விஷயமுமில்லை..."

அவன் தொடர்ந்து பேசப் பேச, கடைசியில் அவள் சுருக்கமாய்ச் சொன்னாள் - "சரி!"

அவன் முகத்தில் சந்தோஷம் வெளிச்சமிட்டது! அவளுக்கு வெந்நீரும் பன்னீருமாய்க் கலந்து தன்னுள் ஓடுவது போன்ற ஒரு புது உணர்வு...

பயமும் பரவசமும் பின்னிய ஒரு முறுக்கான முடிச்சு.

"இன்னொரு விஷயம், சாரு... நான் சந்திர காந்தன். காந்தன் கம்பெனிகளின் இளைய எம்.டி.. அப்பாவிற்கு நரம்பு பாதிக்கப்பட்டு இப்ப ஸிட்னியில் அக்காவோடு இருக்கார். அந்த வியாதியின் பேர் குலியன் பாரே..."

அவளுக்குச் சிந்தனை, செயல் எல்லாம் மரத்துப் போனாற் போலிருந்தது. இவன்தான் காந்தனா?

தொழிலதிபர் ஏன் தோட்டத்தைக் கொத்த வேணும்?

அப்பாவின் வியாதி கூட விநோதமாய்... கேள்விப்படாததாய்...

ஒரு குழந்தை முதன் முதலில் ஒரு விநோத வஸ்துவைப் பார்ப்பது போல மிரண்ட அவளைப் பார்த்தவன் கேட்டான் -

"ரொம்பக் குழப்பறேனா, சாரு...?"

"அதென்ன வியாதி... பணக்காரங்களுக்கு வர்ர வியாதிகூட... ஸாரி... எனக்குப் பேசத் தெரியலை... முடியல..."

"இது லட்சத்துல ஒருத்தர்க்கு வரும் நோய். இதுவே ஏழைக்கு வந்தால் அது என்னன்னு டயக்னோஸ் ஆகாமல் போயிடும். கைகாலை அசைக்க முடியலை - மறுவாரம் மூச்சுக் கூட விட முடியாமல் இறந்துட்டாருன்னுவாங்க... பணம் இருக்கறவங்களுக்கு வந்தால், வியாதி என்னங்கறதைப் புள்ளி குத்திடறாங்க... அவ்வளவுதான்..."



பொறுமையாய் விளக்கினான்.

"உங்க அக்கா?"

"என்னை விட எட்டு வயது மூத்தவ. ரெண்டு குழந்தைகள், கணவரோட ஸிட்னியில் இருக்கறா... அவளுமே மருத்துவர் என்பதால் அப்பாவிற்கு அங்கே வைத்தியம் நடக்குது..."

"அப்பா எப்படியிருக்காங்க...?"

பேச்சை வளர்ப்பதற்காய் ஏதோ திக்கித் திணறிக் கேட்டாள்.

"முற்றிலும் குணமாக்கக் கூடியதாம்... அப்பா ஓரளவு நடக்கறார்... பேசறார்... இன்னும் ஒரு மாசம் பிஸியோதெரபி செய்தால் மேலும் முன்னேற்றமிருக்கும்."

"பெத்தவங்க நம்மோட இருக்கறது பெரிய பாக்கியம்."

"ம்ம்... நல்ல துணை அமைவதும்கூடப் பாக்கியம்தான்."

"நீங்க நிஜமாவே...?"

"கல்யாண விஷயத்தில் விளையாட்றளவு நான் குரூரமானவனா, சாரு?"

"இல்லை... ஆனால் என்னால் எதையுமே நம்ப முடியலை... நீங்க இப்ப சந்துரு இல்லையே..."

"நான் ஏமாற்றவுமில்லை... என் பேர் சந்திரகாந்தன்... அப்பா பேர் ஜெயகாந்தன்ங்கறதால அம்மா என்னைச் சந்துருன்னே அழைப்பாங்க..."

"உங்கம்மா?"

"இள வயசிலேயே கான்சர் வந்து போயிட்டாங்க..."

அவள் வெறுமே பெருமூச்செறிந்தாள்.

"நான் செய்யும் தொழில்ங்கறது ஒரு அநாவசியப் புற அலங்காரம் போல... அது இல்லாம உன்னிடம் பழகினேன் - அது தப்பா?"

அவள் கண்ணாடிக் குவளையில் வட்ட விளிம்பைத் தடவினாள்.

மனதுக்குள் ஏதேதோ மாய வட்டங்கள்.

"நான் உன்னைச் சம்பிரதாயமாய்ப் 'பெண் பார்க்க' வந்திருந்தால் நீயும்தான் பிரமாதமாய் அலங்கரிச்சுட்டு வந்து நின்னிருப்பே... அதுக்காக நீ என்னை ஏமாற்ற நினைப்பதாய்ச் சொல்ல முடியுமா?"

"ம்ப்ச்... நீங்களாவது எங்க சின்ன வீட்டுக்கு... வர்ரதாவது... அதுவும் என்னைப் பெண் பார்க்க..."

"எனக்குக் கடவுள் நம்பிக்கை உண்டு, சாரு... அவர் அது சாத்தியமில்லைன்னுதான் நம்மை இங்கே சந்திக்க வச்சுட்டார்."

"கடவுள் மேல் பழியைப் போடாதீங்க... நீங்களே சொல்லலியா... காந்தனுக்கு அதாவது உங்களுக்கு இந்த ஏற்காடு பங்களா பிடிச்சதாலேதான் க்ருதிகாவும் பரபரப்பான சென்னை வாழ்க்கையை விட்டுட்டு இங்கே வரச் சம்மதிச்சதாய்..."

"சம்மதிச்சது காந்தனுடைய கோடிகளுக்காக! அவளுக்குள் எத்தனையோ திட்டங்கள்... எல்லாவற்றுக்கும் அடிப்படை என் பணம்... ஆனா என் சம்பாத்தியம் என்ன, எவ்வளவுன்னு தெரியாமலேயே நீ என்னைக் கல்யாணம் பண்ணச் சம்மதிச்சே... இல்லையா சாரு...?"

இல்லை என்பது போலத் தலையாட்டினாள் -

"வேணாம்ங்க... உங்கப்பா கூட இதுக்குச் சம்மதிக்க மாட்டார்."

"என்க்கு வேண்டியது உன் சம்மதம் மட்டும்தான்..."

அவளுடைய குழம்பிய முகத்தைப் பார்த்தவன் தொடர்ந்து பேசினான். "வியாபாரத்தில் நான் நாணயத்தை விரும்பறேன், மதிக்கறேன், சாரு... என் மனைவி உயர்ந்த, நேரான நோக்கு உடையவளாய் இருக்கணும்னு விரும்பறது... நியாயமான ஆசைதானே? க்ருதி அப்படிப்பட்டவள் இல்லைங்கறது புரிஞ்சுது...



புரிஞ்சு சலிச்ச நேரத்துல உன்னைப் பார்த்தேன்... பழகினேன்... எளிமையான பெண் ரொம்ப அபூர்வமான பொருள்ங்கறது புரிஞ்சவன்... உன்னை நழுவ விட முடியாது..."

"க்ருதி பற்றிய ஏமாற்றம்தான் இந்த... இந்தத் தாடியா?"

கன்னத்தை நீவியபடி சிரித்தான் - கறுத்த தாடி மீசைக்கிடையே பற்கள் மின்னலடித்தன.

"கொஞ்சம் தனிமை தேவைப்பட்டது... தனிமையில் மழிக்கற அவசியமில்லைன்னும் பட்டது... அதான் தாடி... போகலாமா?"

அவன் எழுந்து நிற்க, அவசரமாய் ஒரு டம்ளர் நீரைக் குடித்தாள் அவள்.

**ம**றுபடி வந்தது போலவே அவனோடு பைக்கில் பயணம்... ஆனால் இப்போது மனதுள் நூறு சங்கடங்கள்!

வாழ்க்கை சட்டென்று புரட்டிப் போடப்பட்ட சஞ்சலம்!

மகா இரைச்சலோடு விரைந்த பைக் சத்தத்தை மீறி அவளால் ஏதும் பேச முடியவில்லை... ஆனால் மனதிற்குள் பேச வேண்டியதை ஒத்திகை பார்த்தபடியேதான் வந்தாள்.

சந்துருவை உட்கார வைத்து,

'நான் மணக்கச் சம்மதித்தது கோடீஸ்வரக் காந்தனை இல்லை... க்ருதிகாவிற்காக நிச்சயிக்கப்பட்டவனை நிச்சயமாய் இல்லை!' என்று விட வேண்டியது.

ஆனால் காந்தன் அவளை அப்படிச் செயல்பட விடவில்லை!

பைக்கிலிருந்து இறங்கியவளை வீட்டிற்குள் கைப்பற்றி இழுத்துக் கொண்டு போனவன், நேரே அலுவலக அறையிலிருந்த 'பேசி'யை எடுத்துப் 'படபட' வென்று எண்களை ஒற்றினான்.

எதிர்முனையில் மணியடிக்கலானதும், அருகிலிருந்தவளை இடது கையால் இழுத்து அணைத்துக் கன்னத்தில் முத்தமிட்டான்.

"தாங்க்ஸ், சாரும்மா."

அவள் விக்கித்து நின்றாள்.

விஷயம் தன் கையை மீறி உருளுவது புரிந்தது... மேற்கொண்டு அவளை யோசிக்க விடாமல் இம்சித்தது அந்த முத்தம்.

அதன் ஈரக் கிளுகிளுப்பில் சந்தோஷம், கிளர்ச்சி, நன்றி எல்லாம் இருந்தன.

"அப்பா... காந்தன் பேசறேன்."

மிக அருகே நின்றதால் மறுபக்கமிருந்து கேட்ட குரல் அவளையும் எட்டியது -

நிதானமான கருணையான குரல்.

மாறிமாறிப் பேசினார்கள்... இவளுக்குள் மேலும் குழப்பங்கள்-

அவ்வப்போது க்ருதிகாவின் முகம் வேறு வந்து அச்சுறுத்தியது.

"அப்பா உன்னோடு பேசணுமாம்."

கருவியை இவளது காதில் வைத்தான்.

"என்ன... என்னங்க?"

"சந்தோஷம்மா, சாருமதி." - பெரியவர் சொல்ல, அவளுக்குள் ஏதோ முறுகி, அறுந்து அதன் சாறாய்க் கன்னங்களில் நீர் வடிந்தது.

"நீங்க ரெண்டு பேரும் சந்தோஷமாய் வாழணும்மா... உன்னைப் பற்றி அப்பப்ப சொல்வான்... எங்களுக்கும் திருப்திம்மா... காந்தன் நிறைவாய் வாழ, என் உடம்பு இன்னும் சீக்கிரம் தேறிடாதா... என்னம்மா?"

"ஆம்... ஆமாம், மாமா."

"அப்படிச் சொல்லம்மா ராஜாத்தி... கல்யாணத்தை உடனே எளிமையாய் நடத்திடச் சொல்லிட்டேன்... எனக்குத்தான் நேரே பார்க்கக் கொடுத்து வைக்கலை..."



"நீங்க வந்த பிறகே..."

"நல்ல விஷயங்களைத் தள்ளிப் போடக் கூடாதும்மா... எம் மக நளினி கல்யாணத்தைக் கூட வீட்டோடதான் நடத்தினேன். ரிஸப்ஷன்தான் ஜமாய்ச்சோம்... இப்பவும் அப்படியே செய்துடலாமே! காந்தன் தனிமையாய் இருக்கக் கூடாதம்மா... உன்னோட இருந்தால்தான் அவனுக்கு நன்மை, பலம் எல்லாம்... சிறுவயசிலேயே அவன் தோளிலே பெரிய சுமைங்க... நீயும் துணையாய் நிற்கணும்மா..."

"சரி... சரிங்க, மாமா."

"தவிர இப்ப அவன் லண்டனுக்குப் போகணும்... அதுவே உங்களுக்குத் தேனிலவாயும் அமையட்டுமே... என்ன?"

அவளது முகம் சிவந்தது கண்ட சந்துரு தன் அணைப்பை இறுக்கினான்.

"என்னம்மா பதிலில்ல...? ஆனால் சம்மதம்தானே?"

பெரியவர் சிரித்தார்.

சந்துருவின் சுகமான சிரிப்பைப் போலவே இருந்தது அதுவும்.

அவளிடமிருந்து 'பேசி'யை மீட்ட சந்துரு,

"ஆகட்டும்ப்பா... பிறகு பேசறேன் - அக்கா வந்ததும் சொல்லுங்க... அவளோட பிறகு பேசறேன்... வைக்கட்டுமா?"

பேச்சை முடித்தான்.

நழுவினவளை விடாமல் இழுத்தான் - "என்ன இப்படி வெட்கப்படறே!"

"குழப்பமாய் இருக்குது... இத்தனை வேகமாய்..."

"இப்ப வேகமாய்ப் பெட்டியை அடுக்கு, சாரு... சேலம் போகணும்... இன்றிரவு சென்னைக்கு ட்ரெய்ன் டிக்கெட்ஸ்ஸுக்கு சொல்லிடறேன்..."

"ஏன்... எதுக்கு?"

“இன்னும் எவ்வளவு நாளைக்கு இங்கே வேலை செய்ற மாதிரி 'பாவ்லா' காட்டறது? ஒரு வார வேலைன்னு வந்தே... கூடவே நாலு நாளாச்சு... எனக்கும் கம்பெனி வேலைங்க குவிஞ்சிருக்கும்... இனி, கல்யாண வேலைங்க எல்லாம் கவனிக்கணுமே! தவிர...”

இழுத்தவனைக் கேள்வியோடு ஏறிட்டாள்.

“தவிர இனி நாம இங்கே தனிமையில் இருக்கறதும் ஆபத்து... எம் மேல் எனக்கு நம்பிக்கையில்லை...”

- புருவங்களை உயர்த்தினாள்.

அவளுக்கு மறுபடி முகம் சூடாகிச் சிவந்தது...

“லவ்வி... முன்னே நேரே என்னைப் பார்த்துச் சிரிப்பே... இப்ப தரையைப் பார்த்து வாய்க்குள்ளே சிரிக்கறே... அதிலும் கன்னம் வேற இப்படிச் சிவக்கிறதா... ரொம்ப அழகாயிருக்கே...”

“பெட்டியை அடுக்கறேன்...” நழுவினாள்.

## 10

ஏதோ கனவு போல அவர்கள் ஒன்றரை மணி நேரத்தில் அலுங்காமல் சேலத்தின் நட்சத்திர ஹோட்டெல் ஒன்றில் நுழைந்து விட்டார்கள்.

அங்கு இவர்களுக்காகச் சாரதியும் அவரது மனைவியும் காத்திருந்தனர்.

“இவங்க பிரமீளா சாரதி!” - சந்துரு அறிமுகப்படுத்தினான். “எனக்குக் கொஞ்சம் வேலையிருக்குது. சாரு... போயிட்டு வந்துடறேன். நமக்கு ரயில் இரவு பத்திற்குத்தான். அதுவரை நீ மிஸஸ். சாரதியோட ஷாப்பிங் போகலாம். நம்ப மில் துணிகளைக் கொண்டே இங்கே ஒரு பொட்டிக் நடத்தறாங்க. தேவையான உடைகள், மற்றதெல்லாம் வாங்க உதவுவாங்க... வரட்டா?”



மற்றவர்கள் முன் தலையாட்டுவதைத் தவிர வேறு வழியில்லை....

**ஏ**.ஸி. செய்ப்பட்ட அச்சிறு அழகுக் கடையில் விதவிதமான உடை ரகங்கள்... ஆரம்பத் தயக்கம் விலக, ஆவலுடன் அவற்றைப் புரட்டித் தேர்ந்தெடுத்தாள் சாருமதி...

பிரமீளாவின் உடை கனகச்சிதமாயிருந்தது.

அதனுடன் தன்னதை ஒப்பிடவும் கூட முடியாது. இனி இப்படி உடுத்தி நின்றால் சந்துருவிற்குக் கேவலம் என்ற முனைப்புடன் ஒரு கருநீலச் சுடிதாருக்குள் புகுந்தாள். அவளது ஒடிசலான உடல்வாகுக்கென்றே தைக்கப்பட்டது போலிருந்த அது அவளுக்குப் பாங்காய்ப் பொருந்தியது.

அவள் தேர்ந்தெடுத்தவற்றைக் கவனித்த பிரமீளா,

“உங்களுக்கு நல்ல ரசனை மேம்... சில பட்டு ரகங்களும் எடுத்துக்கோங்க. இனித் தேவைப்படும்!” என்று ஊக்கினாள்.

“எல்லாவற்றுக்கும் என் பெட்டியில் இடமிருக்காதே...”

“அதெல்லாம் என் பொறுப்பு... இந்த ஸல்வார்களைக் கொஞ்சம் உங்க அளவிற்கு ஆல்டர் பண்ணணும்... அதுக்குள்ள உங்களுக்கு ஒரு ஃபேஷியல் செய்திடலாமே...?”

அழகு நிலையத்தில் இவள் முகத்தை, முக்கியமாய் கட்டுக்கடங்காத குட்டைச் சுருள் முடியைச் சில நொடிகள் ஆராய்ந்த பெண்மணி காரியத்தில் இறங்கினாள்.

ஏதோ திரவத்தைத் தடவி ஒரு 'ஹெல்மெட்' போன்ற அமைபபிற்குள் திணித்தவள்,

'உங்க தலை முடி உங்களை ஒரு கல்லூரி மாணவி போலக் காட்டுது. மேம்... இனி நீங்க ஒரு பிரபல தொழிலதிபரின் மனைவி... ஆகத் தோற்றம் கண்ணியமும் கம்பீரமாயும் இருக்கணும் -

உங்களது சுருளைக் குறைத்து ரோல் செய்து கொண்டை போல அமைத்தால் உங்க முக அமைப்பிற்கு அமர்க்களமாய் இருக்கும்."

வேறு வழியின்றிச் சம்மதித்தாள் சாரு.

"முடி 'செட்' ஆகிற நேரத்திற்குள் ஒரு ஃபேஷியல் செய்திடறேன்!" புருவங்களைச் சீர் செய்து முகத்திற்கு ஆவி காட்டி, பின் இறுக்க ஏதேதோ பூசி, கழுத்தை இதமாக நீவி விட, சாரு சுகமாய் உறங்கியே விட்டாள்.

கண் விழித்தபோது தன் முகத்தின் பொலிவு அவளையே அசத்தியது. புதுச் சிகை அலங்காரத்தைச் சாருவிற்கும் கற்றுத் தந்த பெண் தேவையான உயர்ரக அழகு சாதனங்களையும் அவற்றைப் பயன்படுத்தும் முறையையும் தந்தாள்.

புது உடை, முக அலங்காரத்தில் தன்னைப் பார்த்த சாருவிற்கு ஆனந்தம் பீறிட்டது... எல்லாவற்றையும் விட இப்படியே சந்துருவின் முன் போய் நிற்க வேண்டுமென்ற ஆவல்...

இவளது அளவுகளைக் கேட்ட பிரமீளா உயர்ரக உள்ளாடை, செருப்புகள் எல்லாம் வாங்கி விட்டாள்.

ஹோட்டெலுக்குத் திரும்பியபோது சதா அங்கிருந்த நீள, அகலக் கண்ணாடிகளையே சாருவின் கண்கள் மொய்த்தன. அலங்காரம்தான் ஒரு பெண்ணை எப்படித் தேற்றி, மாற்றி விடுகிறது!

அறைக்குள் போனதும் உடனடியாகப் பிரமீளாவிடம் எண்ணைக் கேட்டு, 'பேசி'யில் தட்டினாள்.

சந்துருவின் குரலைக் கேட்டதும்,

"நான் ரெடி... வர்ரீங்களா?" என்றாள் ஒரு சிறுமியின் குதூகலத்துடன்.

"இல்லை, சாரு. எனக்கு எதிர்பாராத ஒரு செய்தி... வேலை வந்திருச்சா... ஆக நீ தனியாய்த்தான் சென்னை போகணும்."

அவன் சொன்ன விஷயத்தை விட அந்தத் தொனி அவளது உற்சாகம் அத்தனையையும் வடித்தெடுத்து விட்டது.



"ஏன்... என்னாச்சு... மாமாக்கு...?"

"எல்லாரும் நல்லாத்தான் இருக்காங்க... வேலைதான்."

"எங்கே... எங்கே யிருக்கீங்க?"

"மில் ஆபீஸ்ல..."

"நான் சென்னை கிளம்பும் முன் உங்களைப் பார்க்க முடியாதா? ஒரு பத்து நிமிஷம்...?"

ஏக்கமாய்க் கேட்டாள்.

"முடியாது, நீ சாப்பிட்டுட்டுக் கிளம்பு. சாரதியும் பிரமீளாவும் வேண்டியதைப் பார்த்துச் செய்வாங்க... பணமிருந்தால் எதுவுமே பிரச்னையில்லை...."

உள்ளுக்குள் எங்கோ ஊசி ஏறியது...!

"உங்களை... உங்களை இனி எப்ப பார்க்கலாம்?"

டாக்டர் அல்லது வக்கீலிடம் நேரம் குறிப்பது போலிருந்தது!

ஊறியிருந்த ஆனந்தமெல்லாம் வடிந்து உள்ளே அச்சம் சுரந்தது... இனி சந்துருவைப் பார்ப்போமா... இனிமையும் எளிமையுமாய்ப் பழகுவோமா என்று...

"அது பற்றி பிறகு ஃபோன் பண்றேன் - வச்சிரு..."

தொய்ந்து உட்கார்ந்தாள்.

சந்துரு காந்தனான குழப்பதிலிருந்து முழுக்க மீளுவதற்குள், இப்போது ஒரு புதுக் குழப்பம்...!

இருவரிடையே பெரியவர்கள் பார்க்கும் பொருத்தங்கள் இல்லை. தனக்கு ஒரு ஆணைக் கவிழ்ந்தடிக்க வைக்குமளவு அழகும் கிடையாது. அப்படியிருக்க இந்த திடீர்க் கல்யாணம் எதற்கு?

காதலா?

கண்களை மறைக்கும் காதலா?

தனக்குச் சந்துருவின் மீது காதல் துளிர்த்திருந்தது நிஜம்... ஆனால் அவர் தன்னைக் காதலிப்பதாய்ச் சொல்லவில்லையே!

இப்போது அவர் மனம் மாறிப் போனதோ?

பிரமிளா அவளுக்காகச் சுவையான உணவு வகைகளை வரவழைத்திருந்த போது சாருமதிக்கு ஏதும் இறங்கவில்லை. பெரிய தோல் பெட்டியில் அவளது புது உடைகள், பொருட்கள் எல்லாம் அடுக்கப்பட்டு, அவளுடன் ரயிலின் முதல் வகுப்பில் ஏற்றப்பட்டது. அது ஒரு கூபே...

அடுத்த நபருக்கான டிக்கெட்டும் இவளிடமே இருந்ததால் கதவைத் தாழிட்டு விட்டுத் தூங்கச் சொல்லி விடைபெற்றார்கள்.

சுலபமாய்க் கதவைத் தாழிட்டவளுக்கு உறக்கம்தான் சுலபத்தில் வரவில்லை.

எத்தனையோ யோசனைகள்... புரளல்கள்.

சென்னையில் இவள் பெயர் எழுதிய அட்டையைச் சுமந்த ஒரு ஆள் காத்து நின்று, பெட்டியைப் பவ்யமாய்த் தூக்கிக் கொண்டு இவளை வழிநடத்தினான்.

கரும் பச்சை 'ஸான்ட்ரோ' இவளை இவளது வீட்டிற்கு இட்டுச் சென்றது. பெட்டியை இறக்கித் தந்தவனுக்கு நன்றி கூறினாள்.

"ஐயா காரை இங்கயே நிறுத்தச் சொன்னாங்க..." பணிவாய் வெளியேறினான். ஆக, சந்துரு தன்னை மறந்து விடவில்லை.

சற்று நேரத்தில் ஒரு பெண் வந்து, தன்னைச் சமையலுக்கு நியமித்திருப்பதாகச் சொல்ல, சாரு பிரமித்துத்தான் போனாள். அப்பெண் ஓட்டுனரிடம் ஏதோ சொல்ல, சற்றுப் பொழுதில் சமையலுக்கான பொருட்கள் வந்து சேர்ந்தன. சமையல் 'கமகம' என்று நடந்தது.



சந்துரு சொன்னது போலப் பணமிருந்தால் எதுவுமே பிரச்னையில்லை... ஆனால் சிலபோது பணமே பிரச்னையும் ஆகிறது!

சந்துரு பணக்காரக் காந்தனானதுமே மாறிப் போகவில்லையா?

குளித்துப் பெட்டியைப் பிரித்து அடுக்கியவளுக்குப் பசிக்க, சாப்பிட்டாள். கத்தரிக்காய் வந்தது போல இவளுக்கு ஒரு செல் ஃபோனும் வந்திருந்தது - அதன் மூலம் அவள் அன்று செய்ய வேண்டிய முக்கிய வேலைகள் தெரிவிக்கப்பட்டன.

அதில் முதன்மையானது 'பாஸ்போர்ட்' பெறுவதுதான்.

வேலைகள் இயந்திரத்தின் விரைவுடன் நடந்தன.

பலரை மிரட்டும் பாஸ்போர்ட், விசா எல்லாம் இவளை நலுங்காமல் வந்து சேர்ந்தன.

திருமண வேலைகளையும் இவளைக் கலந்தாலோசித்து ஆரம்பித்திருந்தார் சாரதி.

"கல்யாணம் மிக எளிமையாக நடக்கப் போறதால் அழைப்பு, மண்டபம் சாப்பாடு, வரவேற்புன்னு ஏதுமில்லை, மேம்... விசேஷ அனுமதி பெற்றுக் கல்யாணத்தைப் பதிவு செய்யப் போறோம்... இடையில் ஒரே வாரம்தான்... ஆக நீங்கதான் ஷாப்பிங்கை முடிக்கணும் - கல்யாண உடை, நகைகள் போக, நீங்க வெளிநாடுபோகத் தோதாகச் சில ஆடைகள், சால்வை, அங்கு சந்திக்க நேரும் வியாபார நண்பர்களுக்கான பரிசுப் பொருட்கள் இப்படி... பிரமீளாவை உதவிக்கு வரவழைக்கவா?"

"நான்... நானே பார்த்துக்கறேன்..."

ஆனால் மனம் எதிலும் ஒன்றவில்லை.

அதற்கு ஒரே காரணம்தான் -

சந்துருவை, இன்னும் அவள் பார்க்கவில்லை... அவனது குரலை ஃபோன் மூலமாவது கேட்கவில்லை.

ஏன்... அப்படியென்ன வேலை... கவலை?

தன் தந்தையுடன் ஃபோனில் பேசும் போது அத்தனை ஆனந்தமும் ஆசையுமாய்த் தன் கன்னத்தில் முத்தமிட்டவருக்கு இப்போது என்னவாயிற்று...?

ஏனிந்தப் பாராமுகம்?

## 11

கூழுத்தின் தாலியை ஒரு ரகசியக் கர்வத்துடன், களிப்புடன் நீவினாள் சாருமதி.

அவள் இப்போது சாருமதி சந்திரகாந்தன்!

நடக்குமா என்றவள் சந்தேகித்த திருமணம் வெகு எளிமையாய் ஆனால் அழகாக நடந்தே விட்டது.

ரோஜா வண்ணத்தில் வெள்ளிக் கொடிகள் ஓடிய காஞ்சிப் பட்டில் தான் மலர் வனம் போலிருப்பது அவளுக்கே தெரிந்தது.

மாணிக்கங்களும் வைரங்களும் பதித்த ஆபரங்கள் அவள் காது, கழுத்து, கரங்களில் ஒளி வீசின.

அத்தனையையும் மீறும் முகப் பொலிவு!

அதற்கு மகுடமாய் நெற்றிக் குங்குமம்.

அலங்காரக் கொண்டையில் முத்தாட்டம் மல்லிகை.

காமராக்கள் கண் சிமிட்டி மணமக்களின் அழகை உள்வாங்கின.

பதிவு செய்தன.

இரு நாட்களுக்கு முன்பு சென்னை வந்த பிரமிளாவின் தேர்வு இந்த நகைகள்.



நகைகளும் திருமாங்கல்யமும் வாங்கப்பட்ட பிறகுதான் இவள் தன் சிநேகிதிகளிடம் வாய் திறந்தாள்.

'கல்யாணமா? நீ எங்கே போயிருக்கேன்னு எங்களிடம் பிரபு கெஞ்சிக் கேட்டார் - தேடி வந்துட்டாராக்கும்!' சிரித்தனர்.

'மாப்பிள்ளையின் பேர் சந்துரு...'

இவள் அமைதியாகவே சொல்ல முயன்றாள்.

'பிரபுக்கு அப்படியும் ஒரு பேர் இருக்குதா?'

'இவர் சந்திரகாந்தன் - காந்தன் கம்பெனீஸின் எம்.டி.'

ஒரு கணம் வாயடைத்து, பின்னர் ஓயாமல் கேள்விகளால் குடைந்தார்கள்.

'எங்கே எப்ப சந்திச்சீங்க?

'அதான் இத்தனை நாள் அடைக்கோழி மாதிரி கமுக்கமாய் உட்கார்ந்திருந்தியா?'

'உடனே நாங்க அவரைப் பார்க்கணுமே...'

'ஃபோட்டோவாவது காட்டுடி...'

இவள் ஓரளவு சமாளிப்பாய்ப் பதில்களைச் சொல்லி எளிய கல்யாணம் பற்றிக் கூறி அவர்களை வரவேற்க, அடுத்த 'செட்' கேள்விக் கணைகள் பாய்ந்தன!

'அதென்ன... இத்தனை பெரிய இடத்துக் கல்யாணம் இத்தனை அமைதியாய் ஏன் நடக்கணும்? விளங்கலேயே...'

'அவர் அப்பா கூட வராமலா?'

'உடனே இங்கிலாந்து போறோம்... அவர் தனியே போக வேண்டாம்னு அவர் அப்பாவே சொன்னார்...' - சாருமதி விளக்கினாள்.

'தவிர அந்த க்ருதிகா ஆர்ப்பாட்டம் செய்வாங்கற பயமும் கூட இருக்கலாம்!'

- என்றாள் நாசூக்கற்ற இன்னொருத்தி.

'அவங்க வீட்டுப் பெரியவா சம்மதம் இருக்கோல்லியோ? அப்ப சரி.'

'ம்ம்... தன் அப்பா, அக்காவே கல்யாணத்துக்கு வர முடியாத போது மற்றவர்கள் அவசியமில்லைன்னு நினைச்சுட்டார்... ஆனால் நாங்க மூனு வாரங்களில் இங்கிலாந்திலிருந்து திரும்பியதும் பெரிய அளவில் வரவேற்பு இருக்குமாம்.'

தன் விளக்கம் சிநேகிதிகளை விடத் தன்னையே தேற்றுவதற்காய்த்தான் என்று பட்டது சாருவிற்கு.

**வா**ழ்த்திய சிலருடன் சாப்பிட்டு விடைபெற்று காரில் ஏறிய தம்பதி போய் இறங்கியது 'மெரிடியன்' ஹோட்டெலில்.

'இது விமான நிலையத்திற்குப் பக்கம் - அதான்!' என்ற விளக்கத்துடன் அவள் இறங்கக் கைகொடுத்து உதவினான்.

கைகள் இணைந்தது சில நொடிகளுக்குத்தான் என்றாலும், அவளில் சிலிர்ப்பு. இது அவளுடைய கணவனின் தொடுதல்...

உரிமையுள்ள ஸ்பரிசம்!

அவள் ஏங்கிக் காத்திருந்த நெருக்கம்.

ஆனால் சந்துருவின் முகத்தில் இவளுக்குள் பொங்கியது போன்ற உணர்வுகள் ஏதும் வழியக் காணோம்...

ஒருவித இறுக்கம் மட்டுமே.

எல்லாவற்றையும் மீறி மழித்த அவன் முகத்தின் புதுக் கவர்ச்சி அவளை ஈர்த்தது. கச்சிதமான மீசை அலாதி ஆண்மை தந்தது.

பல நாட்கள் ரோமத்துள் புதைந்து கிடந்த கன்னமும் தாடையும் பசும்பொன் நிறத்தில் பளபளத்தன.

'அறை என் 506 நீ போய் அறையில் இரு, சாருமதி.. கொஞ்ச நேரத்தில் வரேன்..'



ஒரு சிப்பந்தியுடன் 'லிப்ட்' மூலம் ஐந்தாம் மாடியிலிருந்த அறைக்குள் நுழைய, பெட்டிகள் ஏற்கெனவே சமர்த்தாய் அவளுக்காய்க் காத்திருந்தன.

அதிகக் கனமில்லாவிட்டாலும் மின்னிய இப்புடவையை மாற்றி விடலாம் என்று பட்டது. தவிர சந்துரு அறைக்கு வந்த பின் உடை மாற்றுவது.. சிரமம்... கூச்சமாயிருக்கும்.

ஆக அவன் உடன் வராததும் நல்லதிற்கே என்று அவசரமாய்ச் சேலையை மாற்றி, நகைகளையும் கழற்றிப் பத்திரமாய் அதற்கான பெட்டியில் வைத்துப் பூட்டினாள். சிறு முத்து மாலையை மட்டும் விட்டவளின் விரல்கள் மறுபடி மார்பில் புரண்ட புது ஆபரணத்தை நீவின.

அது ஆபரணம் மட்டுமல்ல, புது உறவுக்கான அழுத்தமான ஆதாரம்.

ஆலிவ் பச்சை டாலரில் பசும் கொடி போலவே தெரிந்தவள் கட்டிலில் சாய்ந்து கணவனுக்காய்க் காத்திருக்கலானாள்.

கல்யாணத்திற்குச் சம்மதித்த தன்னை அத்தனை ஆவலாய் முத்தமிட்டவன் கல்யாணமானதும் தன்னைக் கண்டு கொள்ளாததேன்?

அன்று காலை சிநேகிதிகள் அனைவரும் பார்த்து வாய் பிளந்தனர் -

'ஹய்யோ... நீ இத்தனை அழகா சாரு...?'

'அதோட காதலும் கலந்திருக்கே..!'

வீட்டிலிருந்த சமையல்காரம்மாள் தினமும் பாதாம் பாலும், மாதுளைச் சாறுமாய் வேறு தந்திருந்தாள் -

சந்துருவைப் பற்றிய கனவுகள்

அவன் தந்த முதல் அல்லது ஒரே முத்தம் பற்றிய கிளர்ச்சி

இனிச் சேர்ந்தே கழிக்கப் போகும் வாழ்வு பற்றிய காத்திருப்பு எல்லாமுமாய் அவளைப் பொலிவாக்கித்தான் இருந்தன

ஆனால் கலக்கமும் இல்லாமல் இல்லை.

கதவு திறக்கும் சத்தம் கேட்க, அவசரமாய் எழுந்து நின்றாள்.

உடம்பு முழுக்க வெட்கம், வெப்பமாய்ப் பாய்ந்தது.

பின் தொடர்ந்த யாரிடமோ பேசியபடி அறைக்குள் நுழைந்தவன் இவளைப் பார்க்கவுமில்லை.

இவள் நெஞ்சம் வெந்நீரில் விழுந்த புழுவாய்த் துடித்துச் சுருண்டது.

அணைப்பு முத்தமெல்லாம் வேண்டாம்.

ஒரு பரிவான பார்வைகூடப் பெறாதவளா தான்?

பிரத்தியேகமான ஒரு பார்வையில் சின்ன முறுவலில் நேசத்தைக் காட்டியிருக்கலாமே!

மடிப்புக் கலையாமலிருந்த செய்தித் தாளை எடுத்துப் பொருமலுடன் விரித்தாள். அதுவும் ஒரு கேடயம் போல அவளை மூடிக் காப்பாற்றியது.

முதலாளியின் உத்தரவுகளைக் கவனமாய்க் கேட்டுக் குறித்துக் கொண்டிருந்த சாரதியுமே சற்று அவஸ்தையுடனேயே நின்றார். இரண்டு மணி நேரம் முன்பே திருமணமான தம்பதியின் தனிமையைக் கெடுத்தபடி தானிருப்பது அவரை உறுத்தியது போலும்...

"நான் கிளம்பட்டுமா, ஸார்?"

"என்ன அவசரம்?"

"அப்படியில்ல... எனக்கில்ல... நீங்க."

டையைக் கழற்றியபடியே... "அவசரமாய் நடந்த கல்யாணம்தான் - ஆனா வேறெந்த அவசரமுமில்லை... வாழ்க்கை நிதானமாகவே நடக்கும்.'

சாருவின் விரல்கள் செய்தித்தாளைக் கசக்கி விடுவது போலப் பற்றியிருந்தன.



"வரேன், ஸார்."

சாரதி விலக, மற்றொரு கதவைத் திறந்து சந்துருவும் போனான் - ஆக, இங்கு இன்னுமொரு அறை இருக்கிறது.

மக்குச் சிலை போல உட்கார்ந்திருப்பது சிரமமாயிருந்தது.

இந்தப் பாராமுகம் துக்கமாயிருந்தது.

அவன் குளிக்கும் சத்தம் கேட்டது - இருபது நிமிடங்கள். உடை மாற்றி வந்தவனைச் செய்தித்தாளின் பின்னிருந்து நோட்டமிட்டாள்.

அவனது முகம், நடை, பாவனை எல்லாம் சர்வ சகஜமாயிருந்தன.

ஒவ்வொரு மாதமும் கல்யாணம் கட்டிக் கொள்பவனோ இவன் என்று ஒருவர் எண்ணுமளவிலான சகஜம்!

மாதத்திற்கு ஒரு முறையே தியேட்டர் போய் சினிமா பார்க்கும் ஒரு குடும்பம் கூட எத்தனை குதூகலமாய்க் கிளம்பும்...!

அடக்க முடியாமல் கேட்டே விட்டாள்.

செய்தித் தாளை மடித்து வைத்தபடி எழுந்து நின்றாள்.

"அவசரமாய் ஒரு காரியத்தைச் செய்த பின், சாவகாசமாய்ச் சஞ்சலப்படுவது பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன்... இப்போது உங்க நிலையும் அதுதான் போல...?"

அவளை நோக்கி வந்தபடி கேட்டான் -

"இந்தக் கல்யாணத்திற்காக நான் வருந்தறேன்னு தோணுதா, சாரு?"

"உங்க நடவடிக்கைகள் அப்படித்தான் காட்டுது..."

"நேர்மையான வாழ்க்கைத் துணை அமைஞ்சால் வாழ்க்கை நிம்மதியாய் ஓடும்னு நினைச்சேன்... அப்படி ஓட்டறது உன் கையில்தான் இருக்குது..."

ஒரு தினுசாய்த் தோள்களைக் குலுக்கினான்.

அத்தனை நம்பிக்கை இல்லாதவர் ஏன் தாலி கட்டினார்?

அதையும் கேட்டு விடலாமா என்று முடிவெடுப்பதற்குள், "எனக்குக் கடைசி நேர வேலைகள் இருக்குது, சாரு. நீ ஓய்வு எடுத்துக்கோ. இரவு பத்தரைக்கு விமானம் ஏறணும்... இது உனக்கு முதல் விமானப் பயணம்ங்கறதால் உன்னால் தூங்க முடியும்னு தெரியலை... படுத்து எழுந்திரி..."

"உங்கப்பா... மாமாட்ட... பேசி..."

"சாரதிட்ட சொன்னால் லைன் போட்டுத் தருவார் - பேசு... இப்ப இ-மெய்ல் மூலம் நம் கல்யாணப் படம்கூட அப்பாக்குப் போய்ச் சேர்ந்திருக்கும்."

அதற்குள் 'செல்' சிணுங்கலாய் அழைத்தது.

கருவியைக் காதிற்குக் கொடுத்தவன் வெகு உற்சாகமாய்,

"நன்றி... ஆமா ஹனிமூனுக்கு வெளிநாடு கிளம்பற அவசரம்... வந்ததும் வரவேற்பு... நிச்சயம் நீங்க எல்லாம் இல்லாமலா..." பேசினான்.

தன்னிடம், புது மனைவியிடம் பேசும் போது மட்டும் இந்தத் துள்ளலும் துடிப்பும் ஏன் இல்லை...?

அவனையே வெறித்தாள்.

பேசி முடித்து அவளை நோக்கியவன் - 'இனி புயல் போல 'கால்ஸ்' வரும்... இப்ப சென்னையின் சூடான செய்தி நம் கல்யாணம்தான்!' என்றான் ஒரு விதத் திருப்தியுடன்.

ஏதோ ஒரு ஆபத்திலிருந்து தப்பிய திருப்தியா?

அவனுக்குக் கல்யாணம் ஒரு கேடயம்... தன்னை மொய்க்கும் பெண் வண்டுகளிடமிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும் ஒரு கருவி... அவ்வளவுதான்.



விமானப் பயணத்தில் இருவரும் அருகருகாய் ஒரு முழு இரவைக் கழித்தது சாருமதிக்கு அவஸ்தைதான்.

அவளைக் கவனமாய்ப் பார்த்துக் கொண்டான்.

இருக்கையை நீட்டி, அவளைப் படுக்க வைத்துப் போர்த்தியும் கூட விட்டான்.

ஆனால் அவளது மனம் பரவசத்தால் படபடக்கவில்லை.

எதற்கு இப்படியொரு வேஷம் போடுகிறான்...?

யாரை ஏமாற்ற - தன்னையேவா... அன்றி உலகத்தையா... என்று மறுகியது! அவனைப் பார்க்கக் கூடாமல் மறுபுறமாய்த் திரும்பிச் சுருண்டாள்.

பிரபுவிடமிருந்து விலகிய போது இப்படி மனம் நொறுங்க வில்லை. சந்துருவோ தாலி கட்டிவிட்டுப் பொசுக்கியல்லவா போடுகிறான்?

## 12

'ஹீத்ரோ' விமான நிலையம் பரபரப்பாய் இருந்தது.

கூச்சல்கள் இல்லாமல் நம்மூர்க் கல்யாணம் போன்றதொரு பரபரப்பு. எங்கும் வெள்ளை முகங்கள்.

மிடுக்கான நடை, உடைகள்

வித்தியாசமான - 'ஒரிஜினல்' ஆங்கிலம்! சந்துருவை விட்டு விலகியே நிற்க வேண்டும் என்ற வீம்பு மாறிப் புதிதாய்ப் பள்ளிக்குப் போகும் சிறுமி தாயை ஒட்டியே நிற்பது போலப் புருஷனை அண்டியே நின்றாள்.

இயந்திரம் தயாரித்துப் பொழிந்த காபி நம்மூர் 'டிகிரி' காபிக்குச் சவால் விட்டது. அதில் ஒரு கோப்பை பெற்று, பருகி முடிப்பதற்குள் சந்துரு பெட்டிகளை ட்ராலியில் வைத்து வந்தான்.

'ஹோட்டெல் பிக்கட்லி' யிலிருந்து இவர்களை இட்டுச் செல்ல வாகனம் வந்திருந்தது. புதுக் கார் என்றாலும் பழங்கால வாகனங்களைப் போலப் பருத்த அமைப்பிலிருந்ததை வியந்து பார்த்தாள்.

"ஆங்கிலேயர்கள் பழமை விரும்பிகள் - எதையும் லேசில் மாற்ற மாட்டார்கள்.' விளக்கம் கிடைத்தது.

கார் அவர்களை லண்டன் நகருக்கு இட்டுச் செல்ல, சுற்றிலும் ஆர்வமாய் விழியோட்டினாள்.

ஒன்றரை நாளில் அவள் வாழ்வுதான் எப்படி மாறிப் போனது? திருமதியாய் உலகின் மறுபகுதியில் இருக்கிறாள்!

'தான்' கனவிலும் கூடக் கான முடியாது என நினைத்த லண்டன் மாநகரில்!

லண்டன் தன் பழமைக் கம்பீரம் கலையாமல் நின்றது.

புது மெருகில் எந்தக் கட்டடமுமே இல்லை.

எவையும் மேகங்களைத் தொடும் முயற்சியில் எம்பி நிமிரவில்லை. மிஞ்சினால் இரு அடுக்கு மாடிகள் மட்டுமே போதுமான கன அகலத்துடன் தூண்களை ஊன்றி நின்றன.

சுத்தமான வீதிகள் நீட்டி நிமிர்ந்திருந்தன.

ஹோட்டெலில் அவர்களது அறை விசாலமாகவே இருந்தது. ஒருவரிடமிருந்து ஒருவர் விலகியே இருக்க வசதியாய் என்ற கசப்பான நினைப்புடன் கண்ணாடிக் கதவைத் திறந்து பால்கனிக்குப் போனாள் - இப்படி நின்ற போதுதான் முதன் முறையாய் சந்துருவைப் பார்க்க நேர்ந்தது என்ற ஞாபகம் உருண்டு வந்தது...

அன்று சந்தித்தவர்கள் இன்று தம்பதி...

ஆனால் நேசம், நெருக்கமற்ற ஜோடி....

"சாரு, சாப்பிடறியா?"

"முதல்ல குளிச்சுடறேன்."



"சரி. நீ குளிக்கறதுக்குள்ளே நான் என் வேலைக்கான ஃபைல்ஸை எடுத்துத் தயார் பண்ணறேன்."

அவன் தன் பெட்டியைத் திறந்து கோப்புகளை ஆராய, இவளும் தன் பெட்டியிலிருந்து எடுத்த மாற்றுடைகளுடன் குளிக்கப் போனாள்.

குளித்து, அங்கேயே உடை மாற்றி விட்டுக் கதவைத் திறக்க, பேச்சுக் குரல்கள் கேட்டன. சந்துருவுடைய குரலைத் தவிர மற்றது ஒரு பெண்ணினது.

சாருவிற்குள் படபடப்பு.

தயக்கமாய் முன்னேறியவளை அறையில் நின்ற அப் பெண்ணும் ஒரு விதப் பதட்டத்துடனேயே பார்த்தாள்.

ஆனால் சந்துரு மிக இயல்பாகப் பரஸ்பரம் அறிமுகம் செய்வித்தான். "என் மனைவி சாருமதி. சாரு, இவங்க ஷில்பா. இங்கே நம் பிஸினஸிற்கு உதவும் மிஸ்டர் ஷிங்காருடைய மகள்."

"வணக்கம்!"

இளம் முறுவலுடன் கை குவித்தாள் சாருமதி.

"ஹாய்..." என்ற மற்றவளின் கண்கள் இவளைக் குறுகுறுவென ஆராய்ந்தன. தொடர்ந்து - "மிஸ்டர் காந்தனுக்கு இங்கே நிறைய வேலைகள் காத்திருக்குது. இங்கிலாந்து கம்பெனிகளோட இணைந்து வேலை பார்க்கறது லேசான வேலையில்லை ஆக உங்களைக் கவனிக்கும் சுவாரஸ்யமான வேலை என்னுடையது, சாருமதி" என்றாள்.

இவள் மனதிற்குள் அடுத்த உடைசல்.

ஆக இங்கும் சந்துரு தன்னோடு இருக்கப் போவதில்லை.

"உங்களுக்கு ஏன் சிரமம், ஷில்பா... நான் நானே..."

சந்துரு இடை புகுந்தான்.

"சாரு, நான் மற்ற நாடுகளுக்குப் போயிருக்கிறேன். என்றாலும் இங்லண்ட் வருவது இதுதான் முதல் முறை... நம் கம்பெனிக்காக இந்த

ஒப்பந்தத்தைப் பேசி முடித்தது ஷில்பாவின் அப்பாதான்... நம்ப அப்பாதான் முனைந்து ஆரம்ப வேலைகளைச் செய்தாங்க... அப்புறம் அவருக்கு உடம்பு முடியாமல் போக, வேலைகள் தாமதப்பட்டிருச்சு... நம் இந்திய டிஸைன்களை இங்கிலாந்தின் ரசனைக்கேற்ற மாதிரி நெய்து திரைச்சீலை, படுக்கை விரிப்புகள்னு நாம செய்து கப்பலேற்றப் போறோம். அதற்கான ஒப்பந்தப் பத்திரங்கள், மாதிரித் துணிகள், விலை எல்லாம் கொண்டு வந்தாச்சு... இனி ஆர்டர்கள் வாங்கி வேலையில் மும்முரமாகணும்..."

அவன் நீளப் பேச,

"சரி," என்று சுருக்கமாய்க் கேட்டு கொண்டாள்.

"ஆக நீ ஷில்பாவுடன் போறதுதான் எனக்கு வசதி..."

"எனக்கு லண்டன் அத்துப்படி... உங்க ரசனை புரிந்தால் அதற்கேற்ற கடைகளுக்கு உங்களைக் கூட்டிப் போறேன்."

"நன்றி... ஆனால் ஷாப்பிங்... இங்கே என்ன வாங்கறது?"

சந்துரு விமான நிலையத்தில் இங்கிலாந்தின் பவுண்ட்களாய்த் தன் பணத்தை மாற்றும் போது சாரு கவனித்திருந்தாள்.

ஒரு பவுண்ட் என்பது நம்மூரின் எழுபது ரூபாய்!

ஒரு பவுண்ட் தந்து குடித்த கமகம காபி கூடச் சற்றுக் கசந்தது.

70 ரூபாய்க்குக் குடிக்கும் காபி நடுத்தர வர்க்கப் பெண்ணுக்குச் சுவைக்குமா என்ன?

இதில் ஷாப்பிங் செய்வதாவது?

ஆனால் ஷில்பா உரக்கச் சிரித்தாள்.

"இங்கே கிடைக்காதது என்ன? உங்களுக்கு எது பிரியம் - ஸெண்ட், அலங்காரப் பொருட்கள், வீட்டுக்கான கண்ணாடி, கைவினைப் பொருட்கள், தோல் பைகள்...?"

"பெண்களுக்கு இவை எல்லாமே பிரியந்தான்."



நகைத்தான் சந்துரு.

"உங்களுக்குத் தெரிந்த மற்றப் பெண்கள் போலில்லை சந்துரு, நான்..." இவள் அவசரமாய்ப் படபடத்தாள். "தவிர இந்தியாவிலேயே தேவையான தரமான அத்தனையும் கிடைக்க, இங்கே வாங்கி ஏன் சுமந்து போகணும்?"

"அப்ப எப்படித்தான் பொழுதைப் போக்கப் போறீங்க?"

கவலைப்பட்டாள் ஷில்பா.

'காசைக் கரியாக்கித்தான் பொழுதைக் கழிக்கணுமா?' என்று தோன்றினாலும், வெறுமே, 'இங்கிலாந்து தொன்மையான நாடு... இங்குள்ள மியூஸியம், மாளிகைகள், கண்காட்சிகள் எல்லாம் பார்க்கப் போறேன்!' என்றாள்.

"காந்தன், நீங்கள் அதிர்ஷ்டசாலி... உயர்ந்த ரசனையும் கம்மியாய்ச் செலவழிக்கவும் கூடிய மனைவி வாய்த்திருக்கிறார்களே...!"

பாராட்டிய ஷில்பா, சாருவின் விருப்புகளை அறிந்து சில டிக்கெட்டுகளை முன்பதிவு செய்து தந்தாள். ஹோட்டெலின் டாக்ஸி சாருவை அவள் போக வேண்டிய இடங்களுக்குக் கொண்டு சேர்த்தது.

**ம**றுநாளே அவள் சென்றது நாடக அரங்கத்திற்கு. லண்டனில் 'தியேட்டர்' என்றாலே நாடக அரங்குகள்தான்.

மாதக்கணக்காய் மேடையேறிய பின்னும் ரசிக்கக் கூட்டம் அலைமோதியது.

துப்பறியும் நாவல்களை எழுதிய அகதா கிறிஸ்டியின் 'எலிப்பொறி' என்னும் நாடகம் தொடர்ந்து ஐம்பது ஆண்டுகளாய் நடப்பது அறிந்து அதற்குத்தான் போனாள்.

நீங்கள் பார்க்கப் போவது 25,210-ஆவது காட்சி என்ற அறிவிப்புடன் ஜோராய் ஆரம்பித்தது நாடகம்!

இது தன் தேனிலவு... அதன் முதல் நாளை இப்படித் தனியே கழிப்பது அபத்தமாய், ஏன் அசிங்கமாய்க் கூடப் பட்டது.

எலிப் பொறியில் தான் சிக்கின அவஸ்தை!

உலகின் பிற பாகங்களைக் காணும் ஆர்வத்துடன் டி.வி.யில் 'நீங்கள் கேட்ட பாடல்' நிகழ்ச்சியை அவள் பார்த்ததுண்டு.

அதில் பங்கேற்கும் ஜோடிகளுக்கான ஒரு கேள்வி - 'நீங்கள் திருமணமானதும் பார்த்த முதல் படம் என்ன?' அப்படி ஒரு கேள்வி தன்னிடம் கேட்கப்பட்டால், 'நான் மட்டும் 'எலிப்பொறி' பார்த்தேன்!' என்றா சொல்வது? ஆனாலும் நாடகத்தின் மர்ம முடிச்சுகள் இறுக, அவள் அதில் ஒன்றிப் போனாள்.

மறுநாள் மாலையை அவள் தனியே கழிக்க நேரவில்லை.

தொழிலை முன்னிட்டுச் சிநேகமான ரையன்ஸ் குடும்பத்தார் புது மணத் தம்பதிகளை விருந்துக்கு அழைக்க, இணைந்தே போனார்கள்.

ஊருக்குச் சில மைல்கள் ஒதுங்கியே நின்றது ரையன்ஸின் வீடு. ஆரம்பக் குசலங்கள் முடிந்தது. வீட்டை ஆர்வமாய்ப் பார்த்தாள் சாருமதி.

"இந்த வீடு இரண்டு நூற்றாண்டுகளாவது பழமையானது இல்லையா?"

"பரவாயில்லையே...! உங்களுக்குக் கட்டிடங்களில் ஆர்வமுண்டா, மிஸஸ் காந்தன்?"

சந்துரு பெருமிதத்துடன் இடை புகுந்தான்.

"அவளது வேலை, திறமை எல்லாம் அதுதான். வீடுகளை நேர்த்தியாய் அலங்கரிப்பதில் சாரு நிபுணி!"

"நல்லது. 18-ஆம் நூற்றாண்டு வீட்டை வாங்கினோம்... விலை அதிகம்தான். அதைவிட இதை இப்ப நாம் வாழும்படி மாற்றுவது அதிகச் செலவை இழுக்குது."



"ம்ம்... கழிப்பறைகளே இருந்திருக்காது இல்லையா?"

"ஆமாம்... நவீனக் கழிப்பறைகளை வீட்டின் தொன்மை கலையாமல் சேர்க்க வேண்டியிருந்தது. தவிர அக்காலக் கூரை ஏக உயரம்... இதன் அகலத்திற்கு ஏற்றாற் போலில்லாமல்..."

"அதற்கு ஒரு உபாயம் இருக்குது, மிஸஸ் ரையன் - 'ஆப்டிக்கல் இல்யூஷன்' - தரையில் சாம்பல் நீல கார்பட் இருக்கிறதில்லையா? இதே நிறத்தை சீலிங்கிற்கும் பூசிட்டால் விகல்பமாய்த் தோணாது... இது கண்களை ஏமாற்றும் ஒரு வித்தை..."

"நன்றிம்மா... செய்து பார்த்துடறேன்."

இப்போது திரு. ரையன் குறும்பாகக் குறுக்கிட்டார்.

"ஆனால்... ஆனால்... உங்கள் இருவருக்கும் இத்தகு வித்தைகள் அவசியமில்லை, கான்ட்டன்ஸ்... நீங்கள் ஒருவருக்கொருவர் ஏற்ற ஜோடி..."

கண்களில் கேள்வியுடன் சந்துருவைப் பார்த்தாள் சாருமதி.

## 13

"வந்து சாப்பிடுங்க, மேம்."

மேஜையில் காலை உணவு வகைகளைப் பரப்பிய ராஜ் சாருமதியை அழைத்தான்.

"இரு, ராஜ், இன்னும் பத்தே நிமிஷத்துல இந்த வேலை முடிஞ்சிரும்."

சற்று நெருங்கியவன் அவள் வரைந்து கொண்டிருந்ததை எட்டிப் பார்த்தான்.

"அரே, பிரம்மாதமாய் வரையறீங்க, மேம்?"

"இதுதானே என் தொழில்? நீ பத்தே நிமிஷத்தில் இந்த அறையைச் சுத்தம் பண்ணிப் புதுசு போல் ஆக்கிடலை - அதே போல..."

அந்த இளைஞன் வெட்கமும் பெருமிதமுமாய்ப் புன்னகைத்தான்.

தமிழ் அவர்களிடையே பாலமிட்டிருந்தது.

ராஜ் ஹோட்டெலின் சிப்பந்தி. இந்தியாவில் கேட்டரிங் படிப்பை முடித்தவன். பெற்றோர் வெளிநாடு கிளம்ப, தானும் இங்கேயே வந்து வேலைகளைப் பிடித்துக் கொண்டான். தங்கியவர்கள் தமிழர்கள் என்பதால் நிர்வாகத்திடம் கெஞ்சி அவர்கள் அறையைச் சீர் செய்யும் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருந்தான். சில நிமிடங்கள் தாய் மொழியில் வாயாரப் பேசும் சந்தோஷம் பரஸ்பரம்.

"என்ன மேம், நேற்று மியூஸியம் எப்படியிருந்தது?"

"அற்புதம் - தொன்மையான பாத்திரங்கள், உடைகள், இசைக்கருவிகள், ஆயுதங்கள்னு எல்லாம் காலவாரியாய் இருந்ததை ரொம்ப ரசித்தேன்."

"நாளைக்கு மேதம் டுஸாட்ஸ் மெழுகு மியூஸியத்திற்குப் போங்களேன்."

"எல்லாரும் சொல்லுமளவு அத்தனை அற்புதமாய் இருக்குமா?"

"பின்னே... பக்கத்திலே நிற்கிற ஆள் சிலையா, நிஜமான்னு குழப்பமாவே இருக்கும்... அங்கே மெழுகுச் சிலைகளாய் நிற்கும் பிரபலங்கள் எல்லாம் அத்தனை தத்ரூபம்! சிலைகள் உடைகளும் அப்படித்தான்... அங்கேயிருக்கும் இந்திரா காந்தியின் உருவம் கட்டியிருப்பது காஞ்சியில் நெய்த கலாக்ஷேத்திரா புடவையாம்..."

"மெனக்கெடறாங்கதான்."

"கண் இமை, புருவம், சின்னச் சுருக்கம், நகப் பளபளப்பு எல்லாம் அப்படியே... உங்களுக்கான டிக்கெட்டை 'புக்'



பண்ணிடவா, மேம்? இல்லைன்னா வரிசையில் நின்னு கால் ஓய்ஞ்சிடும்."

"இல்லை... இவர் என்னைக்கு ஃப்ரீன்னு பார்த்து..."

ராஜின் முகம் சற்று மாறியது.

"இது உங்க தேனிலவுன்னு நம்பத்தான் முடியலீங்க... சார்தான் முழுநேரம் வேலைன்னு கிளம்பிடறாரே..."

முயன்று சிரித்தாள்.

"சேர்ந்துதானே தங்கியிருக்கோம்..." மழுப்பினாள்.

வரையும் சாக்கில் குனிந்து கொண்டாள்.

"சரி, மேம்... ஆறுவதற்குள் சாப்பிட்டுருங்க..."

ராஜ் வெளியேறினான்.

'சேர்ந்தே இருக்கிறோம்!' என்பது பெரிய பொய்! ஒரே அறை. கட்டிலைப் பகிர்ந்து கொண்டாலும் இருவருக்கிடையே எத்தனை பெரிய இடைவெளி! முயன்று வேலையில் மும்முரமானாள்.

இங்கிருந்த மக்கள் பழமையை ஆராதிப்பவர்கள் என்பது புரிய, அருங்காட்சியகத்தில் கண்ட சில துணி ரகங்களை மனதில் நிறுத்தி, அவற்றின் சாயலில் சில புது டிஸைன்களை வரைந்து கொண்டிருந்தாள். குறிப்பாகப் புராதன வீடுகளில் இருப்பவர்கள் விரும்பி வாங்கும் வகையிலான 'புரோகேட்' வகை டிசைன்... இது பற்றிச் சந்துருவிடம் சொல்ல அவனும் ஊக்குவித்திருந்தான் -

'வரையேன்... இங்குள்ளவர்களிடம் காட்டி, பிடிச்சிருந்தால் நமக்கு அதிக வருமானம்தானே!' என்று.

சில நாட்களுக்கு முன் கனிவாய், கவிதையாய்ப் பேசியவன் இன்று பேசுவதெல்லாம் காசு பற்றித்தான்!

நேசம் நிலாவின் வளர்பிறையாய் இருக்க வேண்டுமென்றவன் வாழ்வில் இப்போது நேசநிலாவிற்கு இடமேயில்லை!

வேலையைச் சாரு முடித்தபோது உணவும் ஜில்லிட்டிருந்தது

சூடாய் ஒரு காப்பி மட்டும் போதும் என்று கீழே இருந்த உணவகத்தில் வந்து ஓரமாய் உட்கார்ந்தாள். சற்று நேரத்தில் 'திடுக்'கிட்டாள்.

காரணம் அறையின் மறுகோடியில் அமர்ந்து முனைப்பாய்ப் பேசிக் கொண்டிருந்த ஜோடிதான்.

சந்துருவும் ஷில்பாவும்.

இருவரும் இயல்பாய்த் தெரியவில்லை. பழரசத்தை அவ்வப்போது உறிஞ்சியபடி பேசியவர்கள் முகத்தில் கலவரம் தெரிந்தது.

சுற்றிலும் பார்க்கக் கூடாதபடி அப்படி எதைப் பற்றிப் பேச்சு? முக்கியமான சமாச்சாரம் பற்றியதுதான்... ஒரு வேளை பேச்சு தன்னைப் பற்றியோ? அதுதான் அறையில் பேச முடியாமல் இங்கே உட்கார்ந்து...

மேலும் அங்கே அமர முடியாமல் எழுந்து ஐந்தாம் மாடியைப் படியேறியே வந்தடைந்தாள்.

சற்றைக்கெல்லாம் கதவைத் தட்டி அறைக்குள் வந்தாள் ஷில்பா.

சாருவின் இறுக்கத்தை உணர்ந்தவள்,

"உங்களுக்கு போர் அடிக்குதுன்னு நினைக்கறேன், சாரு...." என்றாள் மெள்ள.

"அப்படி நான் சொல்ல முடியாதே... இது எங்க தேனிலவு!"

வார்த்தைகளில் தொனித்த கசப்பு தன் புன்னகையில் வழிந்து விடாமல் கவனமாய்ப் புன்னகைத்தாள் சாருமதி.

மேசையில் படபடத்த காகிதங்களைக் கண்ட ஷில்பாவின் புருவங்கள் மேலேறின.

"அற்புதமான டிஸைன்... நிச்சயம் இது ஆங்கிலேயர்களைக் கவரும்."



"ம்ம்... இப்பதான் வரைந்தேன்..."

சற்றைக்கெல்லம் சாரு தான் நினைத்த திசையை நோக்கிப் பேச்சை வளர்த்தாள். "இவர்... சந்துரு இங்லன்ட் வருவது இதுதான் முதல் முறை... ஆனா உங்களுக்கிடையே நல்ல பரிச்சயம் போலிருக்குதே!"

"நான் அப்பப்ப இந்தியா வர்ரதுண்டே... எங்க அப்பாக்களுக்கிடையே நல்ல பழக்கம்... ஆக காந்தனுடைய குடும்பம் தெரியும்... அவருடைய... கா..."

சட்டெனப் பேச்சை நிறுத்தி மழுப்பினாள் ஷில்பா.

"காதலி க்ருதியையும் தெரியும்!" என்று சொல்ல வந்தாளோ?

"நான் இன்னும் சந்துருவின் குடும்பத்தைச் சந்திக்கலை..."

"ம்ம்... சொன்னார்.... காந்தனைப் புரிந்து, ஈடு கொடுக்கும் மனைவியாகத்தான் இருக்கறீங்க... ஆக இப்ப நான் சொல்லப் போறதையும் புரிஞ்சிக்குவீங்கன்னு நம்பறேன்..."

ஷில்பா தயங்க, இவளுக்குத் தடுமாறியது.

"பர... பரவால்ல... சொல்லுங்க..."

"க்ருதிகா லண்டன் வந்திருக்காங்க!"

புத்தியும் உடலும் மரத்துப் போனாற் போலானது. கேட்டவளுக்கு. எதற்கு இத்தனை தூரம் வந்திருக்கிறாள் க்ருதி?

அனுமன் சீதையை மீட்கக் கடல் தாண்டிப் போனது போல, தன் காந்தனைச் சேர இங்கும் வந்து விட்டாளா?

'ஏண்டி, எத்தனை நெஞ்சுரம் இருந்தால் என்னவரோடு கிளம்பியிருப்பே?' என்று தன்னைப் பிடித்து உலுக்குவாளோ?

"ஒரு டி.வி. சீரியலுக்கு இங்கே ஷூட்டிங் நடக்கப் போகுதுன்னு என்னிடம் சொல்லிச் சில ஏற்பாடுகளைச் செய்து தரக் கேட்டாங்க..."

"ஓ...?"

"எனக்குக் காந்தனுக்கு உங்களோட கல்யாணமானது பற்றி ஏதும் தெரியாது... காந்தன் எப்படியும் வேலை நிமித்தமாய் இங்கு வருவதாய் இருந்துச்சு... இதே ஹோட்டெல்ல அவங்களுக்கு அறை போடச் சொல்ல..."

சாருவிற்கு மூச்சடைத்தது.

ஆக க்ருதிகாவும் லண்டனில், இதே ஹோட்டெலில்தான் இருக்கிறாளா?

ஆக சந்துருவும் ஷில்பாவும் இது பற்றிதான் பேசிக் கொண்டிருந்தார்கள் போலும்... பேயறைந்தாற் போல நின்றவளைப் பரிதாபமாய்ப் பார்த்தாள் ஷில்பா.

"இந்த வாரம் 'ஹேம்டன் கோர்ட்' எனும் அரண்மனையில் அவங்க படப்பிடிப்பு நடத்த அனுமதியும் வாங்கிட்டேன்... காந்தனோடு விரிசல் விழுந்திருச்சுன்னு தெரியாமல் அவருக்காக க்ருதிக்கு உதவிட்டேன்... ஆனா நீங்க க்ருதிகாவை இங்கே பொது இடத்தில் சந்திச்சுடறது நல்லதுன்னும் படுது, சாரு... பொது இடத்தில் அவங்க ராசாபாசமாய் நடந்துக்க முடியாது... ஆக..."

சிக்கல்கள் கூடிக் கொண்டே போகின்றனவே...!

"இந்தப் புது டிஸைனைக் காந்தனிடமும் என் அப்பாட்டேயும் காட்டறேன், சாரு... இதைப் புது 'பையர்'களிடம் காட்டினால் புது ஆர்டர்ஸும் கிடைக்கும்."

சுவாரஸ்யமின்றித் தலை ஆட்டினாள் சாரு.

க்ருதியிடமிருந்து தப்ப, சந்துரு தன்னைத் திருமணம் செய்தாலும், க்ருதி அவனை விடுவதாயில்லை...

ஆக அத்தன ஆழமான நேசமா?

அப்படியானால் இடையிலிருக்கும் தான் விலகி விட வேண்டியதுதான். "எங்கேயாவது வெளியே போகணுமா சாரு? நான் இறக்கி விடவா?" வழக்கமாய் எல்லாரும் சொல்லும் பொய்யையே இவளும் சொன்னாள் -



"கொஞ்சம் தலைவலி... படுத்துக்கறேனே."

"அநாவசிய டென்ஷன்தான்... ஆனா கவலைப்படாமல் தூங்குங்க... பை..."

கவலையையே போர்த்திக் கொண்டு படுத்தாற் போலாயிற்று... தவித்துப் போனாள்...

மாலை ஆறரைக்கு அறைக் கதவு திறக்கும் சத்தம்... கூடவே உற்சாகமான சீட்டியொலி...!

"சாரு..."

சந்துருவின் அழைப்பு.

தலைமுடியைச் சீர் செய்தபடி எழுந்தாள்.

"இதென்ன லைட் கூடப் போடாமல் படுத்திருக்கே? ராஜிடம் கேட்டேன். நீ ரூமில்தான் இருக்கறதாய்ச் சொன்னான்... நீ என்னோடு மெழுகு மியூஸியம் பார்க்கணும்னு சொன்னியாமே? நாளைக்குப் போறோம் - தயாராகு."

இருண்டு கிடந்த உலகில் சூரியன் நேரே உச்சிக்கு வீசப்பட்டு பிரகாசம் வந்தது போலானது!

"சந்தோஷமாய்த் தெரியறீங்க?"

"பின்னே - நீ வரைந்த திரைச்சீலைக்கான 'புரோகேட்' டிஸைன்ஸ் இங்குள்ளவர்களுக்கு ரொம்பப் பிடிச்சுப் போச்சு... பெரிய ஆர்டர்... நீ வழக்கம் போல மற்றவர்களுக்கும் வீட்டு அலங்கரிப்பில் உதவலாம்னுதான் முதல்ல நினைச்சேன்... ஆனால் இப்ப 'நோ.' இனி உன் திறமை அத்தனையும் நம்ப நிறுவனத்திற்கு மட்டும்தான்...."

ஆக இங்கும் அவள், அவளது காதல் பிரதானமில்லை... அவளது வேலையும் திறமையும் மட்டுமே போதும்... பல்லாயிரம் மைல்களைக் கடந்தும், தாலியேறியும் கூடத் தன் நிலைமை அதுவேதான். துக்கத்துடன் நினைத்துக் கொண்டாள்.

## 14

போவதா வேண்டாமா என்று தனக்குள் அல்லாடிய பின் ஒரு வழியாக முடிவு செய்தாள்.

'ஹேம்டன் மாளிகை'யில் நடக்கும் படப்பிடிப்புக்குப் போவது. க்ருதிகா இதே ஹோட்டலில் மூன்று நாட்களாய்த் தங்கியிருந்தும் கூட இன்னும் ஒருவரை ஒருவர் பார்க்க நேரவில்லை.

ராஜிற்குத்தான் ஏகக் குஷி.

"டிவி. ஆக்ட்ரஸ் க்ருதி வந்திருக்காங்க, மேம்."

"ம்ம்... கேள்விப்பட்டேன்."

"நம்ப சாரைக் கூடத் தெரியும் போல..."

'ஆமாம். இந்நேரம் அவரது மனைவியாய் இருந்திருக்க வேண்டியவங்க!' என்று அவளுக்குள் ஒரு கூச்சல்!

வழக்கம் போல விரைவாக அறையைத் துப்புரவு படுத்தியபடியே பேசினான்.

"அவங்க அறையையும் நீதான் சுத்தம் செய்வியா, ராஜ்?"

"ஆமா, மேம்... ஆனா அவங்க அறையில் இருக்கறதேயில்லை. அதிகாலமே மேக்அப் முடிச்சு கிளம்பிடறாங்க. நான் மாஸ்டர் கீ போட்டுத் திறந்து என் வேலையை முடிப்பேன்... சாயங்காலம் களைச்சுத் திரும்பும் போது காபி கொண்டு போவேன்... கடும் வேலைதான்..."

"கடுமையாய் உழைச்சால்தான் வெற்றியடைய முடியும்ப்பா..."

ராஜ் சற்று ஆச்சரியமானான்.

"அவங்களும் அதேதான் சொன்னாங்க, மேம்... ஆனா சில சமயம் எத்தனை உழைச்சாலும் வெற்றியைப் பிறர் தட்டிப் பறிச்சுடறாங்கன்னும் சொன்னாங்க..."



இவளுக்குச் 'சுருக்'கென்றது.

கோபம் கிளர்ந்த புலியாய் இருக்கிறாளோ க்ருதிகா? ஆக இனியும் தானும் பம்மிப் பதுங்குவதில் அர்த்தமில்லை என்று துணிந்தாயிற்று.

தவிர சந்துருவும் க்ருதியும் சந்தித்துப் பேசிக் கொள்ளாமலும் இல்லை... முன் தினம் அவர்கள் இருவரும் ஹோட்டலின் வரவேற்பறையில் நின்று பேசிச் சிரிப்பதை இவள் லிப்ட்டின் கண்ணாடி வழியே பார்த்தாளே!

சந்துருவின் முதுகுதான் தெரிந்தது என்றாலும், எதிரே யிருந்த பெரும் கண்ணாடியில் மகிழ்ச்சியும் மலர்ச்சியுமாய் அவனது முகமும் தெரிந்ததே... தன்னிடம் பேசும் போது அவன் கண்கள் இத்தனை பரவசமாய் மின்னுவதில்லையே... 'லிப்ட்'டிலிருந்து இறங்காமலேயே எதையோ மறந்து விட்ட பாவனையுடன் மீண்டும் அறைக்கு வந்து பதுங்கினாள்.

க்ருதியின் முகம் நாள் முழுக்க வேலை செய்த களைப்புடன் தெரிந்தாலும் சந்துருவை எத்தனை ஆவலாய்ப் பார்த்திருந்தன..!

படப்பிடிப்புத் தளத்திற்குச் சந்துருவும் போயிருக்கிறான்.

"நீயும் ஷில்பாவோடு வா, சாரு... க்ருதியைப் பார்த்தது போலவுமாச்சு... அங்குள்ள அரண்மனையும் பார்த்துட்டுத் திரும்பலாம்..."

அது உத்தரவு போலில்லை. உனக்கு மனமிருந்தால் வா... என்பது போன்ற தொனிதான்.

க்ருதி துணிந்து கடல் கடந்து வந்திருக்க, தானும் சற்றுக் காலை எட்டிப் போட வேண்டியதுதான்...

தயாரானவள் தன்னையே கண்ணாடியில் ஆராய்ந்தாள். பசும் மஞ்சள் நிறப் பட்டு ஸல்வார்.

அதில் நுணுக்கமான தங்கமும் கறுப்பு நூலுமான வேலைப்பாடு. அதற்குப் பொருத்தமாய்க் காது, கழுத்தில் கறுப்பு கிரிஸ்டல்கள். கச்சிதமான ஒப்பனை, தலையலங்காரம்.

இதுவரை கற்பனையை, திறமையை வீடுகளை அலங்கரிப்பதில் மட்டுமே காட்டியிருந்த அவள் இப்போது தன் தோற்றத்திலும் காட்டப் பழகியிருந்தாள்.

கதவைத் தட்டி விட்டு நுழைந்த ஷில்பா, 'அடே... பிரமாதமாய் இருக்கீங்க..!' என்றாள்.

"நன்றி..." என்றபடி கைப்பையை எடுத்தபடி கிளம்பினாள் சாருமதி. ஷில்பாவும் உடனிருப்பது ஆசுவாசம்தான்.

"கறுப்பு கிரிஸ்டல்ஸ் என்னமாய் மின்னுது!"

"இங்கேதான் 'ஹேரட்ஸ்'ஸில் வாங்கினேன்."

"இளவரசி டயானா இரண்டாம் முறையாய்க் கல்யாணம் செய்துக்க இருந்த கோடீஸ்வரனின் கடைகளின் ஒரு கிளை அது... எப்படி இருந்தது?"

"பிரம்மாண்டமாய்... ஒவ்வொரு மாடியும் விஸ்தாரம்... ஐந்தாறு மாடிகள்னு... என்னால் முடியலை... ஏதோ நவீன மியூஸியம் போலச் சுற்றிப் பார்த்தேன். விலையும் அதிகமோன்னு பட்டது..."

"கணவனுக்குச் சம்பாதிக்கத் தெரிஞ்சிருந்தால் மனைவிக்குச் செலவழிக்கத் தெரிஞ்சிருக்கணும்..."

ஞானி போலச் சொன்னாள் ஷில்பா!

இவள் வந்ததிலிருந்து ஏதுமே வாங்காததைக் கண்ட கணவனும் இதையேதான் சொன்னான்.

'எனக்கேற்ற மனைவியாயிருக்க திறமையாய்ச் செலவு பண்ணத் தெரிஞ்சிருக்கணும்!'

'அநாவசியமாய் ஏன்...?'

'என் மனைவிக்குப் பல ஆடம்பரங்கள் கூட அவசியம்தான்!'

அந்தத் தொனியில்தான் எத்தனை அகங்காரம்!

எளிமையும் இனிமையுமாய் அறிமுகமான, பழகிய தன் பழைய சந்துருவிற்காக ஏக்கமாய் ஏங்கினாளே, அந்தக் கணம்!



"போலாம்... ட்ரெயினில் நமக்கு ஒரு மணி நேரப் பயணம்... நீங்க எளிமையை விரும்பறதாலதான் ரயிலில் போகலாம்னு முடிவு பண்ணினேன். பூமிக்கடியில் ஓடும் இந்த 'ட்யூப்'களில் பயணம் சுளுவானது - டிராஃபிக் சிக்கலில்லாமல் சீக்கிரம் போய்ச் சேரலாம் - முழுக்க ஏ.ஸி.ங்கறதால் அசதியும் இருக்காது."

சாரு பூமிக்கடியில் விரைந்த ரயில் பயணத்தை ரசித்தாள்.

விநாடி கூடப் பிசகாத துல்லியத்தில் ரயில் ஒவ்வொரு நிறுத்தத்திலும் ஓரிரு நிமிடங்கள் நின்று பயணிகளை இறக்கியது - ஏற்றியது.

**அ**ப்பிரமாண்டமான பதினாறாம் நூற்றாண்டில் எழுப்பப்பட்ட மாளிகையின் முன் நின்ற போது சாருமதிக்குப் பரவசத்தை மீறிய பயம்! இங்குதான் க்ருதி இருக்கிறாள்.

அவளை நேருக்கு நேர் தான் சாருமதி சந்திரகாந்தனாய்ப் பார்க்கப் போகும் பதட்டம். இவளது உணர்வுகள் புரிந்த ஷில்பா பேச்சுக் கொடுத்தாள்.

"இது எட்டாம் ஹென்றி மன்னர் ஒரு பிரபுவிடமிருந்து வாங்கி விஸ்தரிச்ச அரண்மனை - ஆறரை ஏக்கர் ஏரியா..."

"இங்கு அடிக்கடி வந்ததுண்டா, ஷில்பா?"

"சில முறைகள்... உறவுக்காரங்களை அழைத்து வந்ததுண்டு... இங்கே இலவச 'கைட்ஸ்' உண்டு. அந்தக் கால ட்யூடர் பாணியில் உடுத்தி நமக்கு மாளிகையைச் சுற்றிக் காட்டுவாங்க..."

கூழாங்கற்களால் ஆன நெடும் பாதையில் நடந்தபடி பேசினார்கள். ஆனால் ஷில்பா சொன்னது அதிகம் இவள் காதில் ஏறவில்லை... தன் இதயம் முரசு போலக் கொட்டுவதுதான் கேட்டது.

"அந்த 'கைட்ஸி'ன் விளக்கங்களைக் கேட்டதால் இப்ப எனக்கே ஓரளவு விவரங்கள் தெரியும்..."

"இங்கே... எத்தனை நாட்கள் ஷூட்டிங்?"

"இது ஒரு டெலி - ஃபிலிம்க்காகவாம் - ஹீரோ அரண்மனைகளைப் பற்றி ஆய்வுக் கட்டுரை எழுதறவனாம்... அதுக்காக இங்கு ஒரு நாள்... மற்ற இடங்களிலும் மொத்தம் ஒரு வாரமாகவாம்..."

"இவர்... சந்துரு எப்ப வருவார்?"

"வந்திருக்கணுமே. க்ருதியை நீங்க பார்க்கும்போது தானும் உடனிருப்பது நல்லதுன்னு நினைச்சார்... எப்படியும் எங்கேயாவது பார்த்துத்தானே தீரணும்... ரயில் நேரம் சொல்லிட்டேன்... சரியாய் நேரத்துக்கு வர்ரவர் சந்துரு..."

இவளுக்குள் முரசு ஒலி மட்டுப்பட்டது. "இடப்பக்கம் தெரிவது சமையல் அறைகள். தினமும் 600 பேருக்காவது சமையல் ஆகுமாம்... நேரே போனால் அரசரின் அறைகள்..."

"எட்டாம் ஹென்ரிக்குத்தானே ஆறு மனைவிகள்? மெழுகு மியூஸியத்திலே அவரைச் சுற்றி ஆறு மனைவிகள் இருக்கறது போல அமைச்சிருந்தாங்க. ட்யூடர் காலத்திய உடை, கிரீடம் நகைகள் எல்லாம் அற்புதமாயிருந்தன..."

"இங்கு பல தாரம்ங்கறது அபூர்வம்... இவர்தான் மனைவிகளில் இரண்டு பேரை விவாகரத்து செய்து, ரெண்டு பேரின் தலையை வாங்கிட்டார். மூணாவது மனைவி பிரசவத்தின் போது இறந்துட்டா... கடைசி மனைவியைத்தான் விதவையாய் விட்டுவிட்டு ஒரு-வழியாய்ப் போனார்..."

"ஓஹோ?"

"அதிலும் அவரது ஐந்தாம் மனைவியைப் பற்றி சுவாரஸ்யமான தகவல்கள் உண்டு. குறிப்பிட்ட அந்த இடத்துக்குப் போனதும் சொல்றேனே..."

அரண்மனை முகப்பில் வித்தியாசமான சந்தடி இருந்தது. கேமரா, ரிப்ளெக்டர்கள் ஒரு பொருந்தாத்தன்மையுடன் அங்கு நின்றன.



அவற்றைத் தாண்டி மருட்சியுடன் தேடின சாருவின் விழிகள். இரைக்காகக் காத்திருந்த கழுகாய்ப் பக்கவாட்டிலிருந்து 'திடும்'மென வெளிப்பட்டாள் க்ருதிகா!

அவ்வேகத்தில் இவ்விரு பெண்களும் சற்றுத் தடுமாறினார்கள்.

"அடே... உன்னை எதிர்பார்க்காமல் இருந்தால் நீதான் சாருமதின்னே கண்டு பிடிச்சிருக்க மாட்டேன்... அத்தனைக்கு மாறிட்டே!"

ஏளனமாகவே ஆரம்பித்தது பேச்சு!

அவளது பார்வையும் ஒரு வித வெறியுடன் சாருமதியை மேலும் கீழுமாய் அளைந்தன.

சாருவிற்கு வாய் உலர்ந்திருந்தது. எல்லா வார்த்தைகளுமே மறந்து போனாற் போலொரு திகைப்பு!

பக்கவாட்டு அறையிலிருந்து வந்து சந்துரு கேட்டான்.

"ஏன் க்ருதிகா... சாருட்ட அப்படியென்ன வித்தியாசம் தெரியுது?"

"முழுக்க மாறிட்டாளே... முன்னே சதா வியர்த்து வழிஞ்சு, பழைய கூடாரத் துணியில் தைச்சது மாதிரியான ஒரு சுடிதார்ல... கட்டுக் கடங்காத முடியோட..."

"நான் இவளை அப்படிப் பார்த்துதான் பிரியப்பட்டேன்."

சொன்னவனை நன்றியோடு பார்த்தாள் சாரு.

"ஆக எல்லாம் பணம் பண்ணும் மாயம் - இல்லையா?"

"நோ - இது காதலின் மாயம்!"

இவளுக்கென்னவோ கூசியது. ஆனால் அவர்கள் இருவர் சொன்னதிலும் உண்மை உண்டு. சந்துருவின் பணமும் அவன் மீது தனக்குப் பெருகியிருந்த காதலுமாய்ச் சேர்ந்தே இந்த மாற்றத்திற்குப் பொறுப்பு.

"ஷாட் ரெடி..."

குரல் வர, க்ருதிக நகர்ந்தாள்.

இவர்கள் வேறு பக்கமாய் ஒதுங்க, "இந்த இதமான குளிரிலும் கூட உங்களுக்கு வியர்த்திடுச்சே..." இதமாய்ப் பேசினாள் ஷில்பா. அவளுக்கு வியர்த்து, வெளுத்திருந்த சாருமதியைக் காணப் பாவமாய் இருந்தது.

ஆக அரைமணி நேரத்தில் இவர்களைத் தேடி மறுபடி க்ருதிகா வர, ஷில்பாவே பேசினாள் -

"ஆங்... உங்களுக்கு ஒரு சுவாரஸ்யமான சம்பவம் சொல்றேன்லையா சாரு? இதுதான் மன்னனின் படுக்கை அறை. தன் ஐந்தாம் மனைவியின் நடத்தை மேல் சந்தேகப்பட்ட மன்னன் அவளைச் சிரச்சேதம் செய்ய உத்தரவிட்டு விட்டான். அப்போது அவளுக்கோ பதினைந்தே வயது..."

"கடவுளே!" சாரு சிலிர்த்தாள்.

"தனக்கான தண்டனையைக் கேள்விப்பட்ட அச்சின்னப் பெண் நள்ளிரவு அரசனின் அறையைத் தட்டி இரக்கம் கேட்டுக் கெஞ்சிக் கதறினாளாம். இன்னும் நள்ளிரவுகளில் அவள் ஓடுகிற மாதிரிச் சத்தமும் ஓலமும் கேட்பதாய்..."

சாருவின் மேலும் வெளுத்த முகம் கண்டு பேச்சைக் கத்தரித்துக் கொண்டாள் ஷில்பா.

"வரும் டூரிஸ்ட்டுகளுக்கு சுவாரஸ்யம் கூட்டுவதற்காய் 'கைட்ஸ்' இட்டுக் கட்டும் கதைகள் இதெல்லாம்!" என்று சமாதானம் சொன்னாள்.

"அந்தக் கால மன்னர்களின் வாழ்க்கை வசதிதான். கல்யாணம் ஆயிட்டால் கூட என்ன? அவ கழுத்தைச் சீவிட்டு அடுத்த கல்யாணம் செய்துக்கலாம்." தோள் குலுக்கலுடன் சொன்ன க்ருதிகாவின் தொனி அநாகரீகமாய்ப் பட்டது.



"சந்துரு உங்களைத் தேடுவார், சாரு - கிளம்பலாம்..." என்று விலகினாள்.

திரும்பும் வழியில் இருவருமே பேசவில்லை.

மழை பெய்வதற்குத் தயார் என்பது போல வானம் கறுத்திருந்தது சாருவை மேலும் மிரட்டியது. அவள் பயந்தது போலவே மழை பெரிதாய் ஆரம்பித்தது. காற்றின் ஊதலுக்கு மரங்கள் தங்கள் பச்சைப் பாவாடைகளை விரித்தும் சுழன்றும் ஆடின. எங்கோ முழங்கிய இடி தன் உச்சந்தலையில் இறங்கியது போல விதிர்த்தாள்!

மழை, இடி, மின்னல் பயங்களிலிருந்து மீண்டு விட்டதாக நினைத்த தன் நம்பிக்கை பொய்த்துப் போனது புரிந்தது.

இப்போது தனக்குச் சந்துருவின் அன்பில்லையே -

அனுசரனையான பேச்சும் ஆறுதலான அன்மையும் இல்லையே... க்ருதியின் முன் சற்று இதமாய்ப் பேசினான்தான். ஆனால் அது பிறருக்காக நாடகமல்லவா?

ஷில்பா விடைபெற்றுக் கிளம்ப, உடம்பைத் துவட்டிவிட்டு, இரவு உடைக்குள் புகுந்தாள். கண்ணாடி ஜன்னல்களை வெட்டி விடுவது போல மின்னல்கள் பாய்ந்து வந்தன. இடியின் உறுமல்கள்.

திரைச்சீலைகளை இழுத்து மூடியவள் தலைவழியே போர்வையை மூடித் தூங்க முயன்றாள்... ஆனால் உடம்பு இறுகி விரைத்திருந்தது.

உறக்கத்தை அண்ட விடாத ஒரு இறுக்கம்.

எத்தனை நேரம் அப்படிக் கிடந்தாளோ... சந்துரு அறைக்குள் நுழையும் அரவம். சற்றைக்கெல்லாம் அவன் கைகள் அவளைச் சுற்றின.

பிடரியை மெள்ள நீவின.

உடம்பு மெல்லத் தளர்ந்தது... அவள் சுவாசம் சீர்ப்பட்டது.

போர்வையைச் சற்றுத் தழைத்தாள் - ஜன்னல் இடுக்கு வழியே ராட்சசக் கத்தி வீச்சுக்கள் போல மின்னல்கள் வானைக் கிழித்தது தெரிந்தது.

கண்ணை இறுக மூடினாள்.

"மழை, இடிக்கெல்லாம் இனிப் பயப்பட மாட்டேன்னு நினைச்சேன், சாரு..."

சந்துருவின் உதடுகள் அவள் காதருகே முணுமுணுத்தன.

"ம்ம்..."

"நானிருக்கேன்ல... பிறகென்ன?"

அவளது தோளை, புஜங்களை நீவி அழுத்தின அவன் கரங்கள். 'இதெல்லாம் போதாது!' என்பது போலக் கீழிறங்கின.

இப்போது அவளுக்குள் மின்னல்கள் மின்னித் தெறித்தன. மழை போலொரு உணர்வு கிளர்ந்து பொழிந்தது.

## 15

மறுநாள் காலை விழிப்போடு வேறு சில ஞாபகங்களும் வந்து தித்தித்தன. சுவர்ப் பக்கமாய்ப் படுத்திருந்தவளுக்கு மறுபக்கம் திரும்பி அவனைப் பார்க்கத் துணிவில்லை. சற்று நேரம் அப்படியே கிடந்தவள், பின் அலுங்காமல் இறங்கிக் குளியலறைக்குள் புகுந்தாள். வெளியே வந்து ஓரக்கண்ணால் கட்டிலைப் பார்த்தவளுக்குத் 'திக்'கென்றானது.

படுக்கை காலியாகக் கிடந்தது.

சந்துரு எப்போது வெளியேறினான்? மணி ஏழுதான்.

அதிகாலையிலா அல்லது நேற்றிரவேவா? அவளுள் கிளர்ந்து நுரைத்திருந்த பூரிப்பெல்லாம் நொடியில் கசந்து போனது.



அவமானம் வந்து பிடுங்கிப் பிடுங்கித் தின்றது! இதே போலத் தன் செய்கையின் அவமானம் தாளாமல்தான் சந்துருவும் கிளம்பி விட்டானா?

உள்ளத்தை க்ருதியிடமும் உடலை வேறொருத்தியிடமும் கொடுத்த வேதனையுடன் வெளியேறி விட்டானா?

க்ருதிகாவிடம் பாவமன்னிப்புக் கோரவோ?

தவிர தன் முகத்தைக் காணவும் கூசியிருக்கும்.

ராஜ் தந்த காபி கோப்பைகளை வாங்கி உள்ளே வைத்தவள், "படுக்கையெல்லாம் நானே சீர்படுத்திடறேன் - அப்புறமாய் வாயேன்," என்றாள்.

"என்ன, மேம்?"

"பொழுது போகலை... அதான்." கதவைத் தாழிட்டவள் படுக்கையைப் பார்த்தாள். தலையணைகள் நெருக்கமாய்க் கிடந்தன. அவனதில் அழுத்தமாய் அவனது தலை பதிந்த அடையாளம். போர்வையின் கலையலில் இன்னும் இன்பம் மிச்சமிருந்தது. அந்தச் சுகச் சுவடுகளைக் கலைக்க விரும்பவில்லை சாரு.

வெறுமே இருக்க மனமின்றித் தயாரானாள்.

சற்று ஆறியிருந்தாலும் காபி தேவையாயிருந்தது - ஆனால் இரு வாய் பருகும் முன்னரே கதவைத் திறந்து கொண்டே வந்து நின்றாள், க்ருதி.

உரிமையுடன் பார்வையை முன்னறையில் சுழற்றியவள், ஒரு வேலையாளிடம் கேட்பது போலச் சாருவை விசாரித்தாள்.

"எங்கே காந்தன்? உள்ளே ரெடியாகிட்டிருக்காரா?" சாருவின் வயிறு பால் வார்க்கப்பட்டது போலக் குளிர்ந்தது! க்ருதிகாவைத் தேடி ஓடவில்லை என்ற நிம்மதி!

"இல்லை... வெளியே போயிருக்கார்."

"எங்கே?"

“தெ... தெரியலை.”

“அவரால் ஒரு மணி நேரம் ஓரிடத்தில் தரிக்க முடியாது. சரி 'இங்கே போறேன்'ன்னு சொல்லிட்டுப் போகவும் பிடிக்காது. காற்று மாதிரி அவர்... நிஜந்தான். காற்றைப் பிடிச்சு வைக்க முடியுமா?... நான்தான் இன்னும் ஜாக்ரதையாய் இருந்திருக்கணும்.” தனக்குள் பேசுவது போல முனகினாள்.

“உட்காருங்க... குடிக்க காபி வரவழைக்கவா?”

“நோ, ஜூஸ் வரட்டும். இன்று லண்டன் பாலம் பக்கத்தில் ஷூட்டிங். டிரஸ் மாற்றுவதற்காய் அறைக்கு வந்தேன்.”

ஃபோன் மூலம் பழரசம் கொண்டு வரப் பணித்தாள் சாரு.

அவளது அழகான ஆங்கிலப் பேச்சைக் கவனித்த க்ருதி, பேச்சைச் சற்று மாற்றினாள் -

“நீயும் உட்கார்... வீடு... எப்படி உருவாகிக்கிட்டிருக்குது?”

“ம்ம்... ரெண்டு மூணு ஸ்கெட்சஸ் போட்டேன்.”

“இப்ப அதுக்கெல்லாம் தேவையே இல்லையே... உன் சித்தம்தானே இனி அந்த வீட்டின் பாக்கியம்?”

சாருவிற்கு அடக்க முடியவில்லை - “மன்னிச்சிடுங்க க்ருதிகா... இப்படி ஒரு மாற்றம் நேரும்னு யாருமே நினைக்கலை...”

சற்றுக் காரமாய்ப் பதில் வந்தது -

“நான் நினைச்சிருக்கணும். ஏற்காடு வீட்டைப் புனரமைக்கும் வேலையை ஒரு ஆணிடம் விட்டிருந்தால் இந்நேரம் பாதி வேலை முடிஞ்சிருக்கும். அதை விட முக்கியம் காந்தன் என்னவராகவே இருந்திருப்பார்...”

இந்த அடி தனக்குத் தேவைதான் என்று பட்டது.

சந்துருவிடம் தான் தன் மனதை நழுவ விட்டது வேறு. ஆனால் அவன் காந்தன் என்று அறிந்த பிறகு கல்யாணத்திற்கு மறுத்திருக்கலாம்.



பாழாய்ப் போன காதல் கண்களைக் கட்டி விட்டது... சந்துரு சொல்படியெல்லாம் ஆட வைத்து விட்டது...

ஆனால் க்ருதியின் காதலில் நம்பிக்கையற்ற நிலையில்தானே சந்துரு இருந்தார்...?

“மேம், ஜூஸ்...”

சற்று வியப்புடன் பழரசத்தை மேசையில் வைத்தான் ராஜ்.

“மேம்... ஏதும் சாப்பிடலை போலியே?”

“ட்ரேயை எடுத்துட்டுப் போயிடு, ராஜ்... பிறகு வந்து சாப்பிடறேன்...”

ராஜ் அறைக் கதவை மூடவும்,

“ஐயோ!” என்ற கூவலுடன் எழுந்தாள் க்ருதி.

“என்ன, என்னாச்சு?”

தன் மேல் சிந்திய பழரசத்தைத் துடைக்க முயன்று கொண்டிருந்தாள் க்ருதி.

“கை நழுவிடுச்சா? இருங்க. ஈர டவல் கொண்டு வரேன். துடைச்சுடலாம்.”

“வேண்டாம்... உன்னை வேலை ஏவின காலமெல்லாம் போயாச்சு... இப்ப நீ மிஸஸ் காந்தன் - நானே பாத்ரூமில் கழுவிக்கறேன்...”

அவசரமாய்ப் படுக்கையறைக்குள் போன க்ருதியின் முகம் மறுகணமே கறுத்தது. அவளது பார்வை போன பக்கம் பார்த்த சாருவும் கூசினாள்.

கலைந்த படுக்கையைச் சீராக்காமல் போனதற்காய்த் தன்னையே நொந்து கொண்டாள். பெயருக்குத் தன் உடையில் சிந்தியிருந்த பழச்சாறைத் துடைத்தவள், கோபத்துடன் முன்னறைக்குத் திரும்பினாள்.

தனக்குள்ளாகப் பேசுவது போல மறுபடி பேச்சு தொடர்ந்தது. "புருஷனை எப்படிக் கைக்குள் அடக்கறதுங்கறது உனக்குத் தெரிஞ்சிருக்குது - எனக்குத்தான் புத்தியில்லை... என்னை நடிக்கக்கூடாதுன்னார்... நான் அதற்கு ஒத்துக்கலை... அவர் கண்டிஷன்களுக்கு எல்லாம் நான் ஆடாத, அடங்காத எரிச்சல்... ஆனால் அது இந்தளவு பிரிவில் கொண்டு விடும்னு நான் நினைக்கலையே..."

அவள் குரல் அமுங்கி உடைந்தது.

தன் அறைக்கு வந்து இப்படிப் பழி போட க்ருதிக்கு உரிமையில்லை என்பது புரிந்தும், பதிலுக்குச் சண்டையிடும் மனமின்றி நின்றாள், சாரு.

வேண்டுமென்றே பழரசத்தைச் சிந்தி உள்ளே நோட்டமிட்டாள் க்ருதி என்ற சந்தேகம் வேறு குடைந்தது.

இனி அவளுக்குச் சந்துருவின் மீது ஆத்திரம் அதிகமாகும்.

தன்னைத் துரத்தி விட்டு விட்டு மனைவியோடு சல்லாபிக்கிறானே இவன் என்ற ஆங்காரம்.

காதல் இருக்குமிடத்தில்தானே இத்தகு ஆத்திரம், பொறாமை எல்லாம் தோன்றும்?

சந்துருவுமே க்ருதியை மறக்க முடியாமல் மறுகுவது புரிகிறது. ஆக இவர்களிடையே நில்லாமல் தான் விலகி விடுவதுதான் உத்தமம். தனக்கு நேற்றைய ஒரு இரவு... அதன் இனிப்பான அனுபவம் போதும்... அதன் திருப்தியில் மீதி நாட்களை நகர்த்தி விடலாம்.

"பிடிவாதப் பிசாசு... உன்னைக் கல்யாணம் பண்ணப் போறேன்னது வெறும் மிரட்டல்னு நினைச்சேன்... எனக்கும் இந்தப் பாடம் தேவைதான்..."

உடைந்து நாற்காலியில் தொய்ந்தவள், "நான் என் தொழிலை நேசிக்கறேன் சாரு... அது ஒரு தப்பா? நீ உன் வேலையை விரும்பிச்



செய்தது போல... என்னோடு ஏற்காடு வீட்டின் அறைகளை நீ பார்த்தபோது உன் கண்கள் மின்னின... அதில் அத்தனை கற்பனைகள் எனக்கும் தெரிஞ்சது... அதே போல நானும் லயித்து நடித்தேன் - அதன் மூலம் கிடைச்ச பணம், புகழ் அதன் போதையிலும் லயிச்சுட்டேன். அது தப்புன்ரது இப்ப புரிஞ்சிடுச்சு... ஆனா ரொம்பத் தாமதமாய்க் கற்ற பாடம்..."

வார்த்தைகள் வராமல் ஜன்னல் வழியே வெறித்தபடி நின்றாள் சாரு. நேற்றைய மழை நகரை மேலும் சுத்தமாகியிருந்தது -

மரங்களின் பசுமை கூடியிருந்தது -

மக்கள் சுறுசுறுவென்று வேலையிடங்களை நோக்கிச் சென்று கொண்டிருந்தனர் -

அத்தனையையும் ஒருவித மரத்த பார்வையோடு கவனித்தாள்.

"ஆனால் என்னால் தாங்க முடியலை சாரு... அவரில்லாத ஒரு வாழ்வை... அது இன்னும் எத்தனை காலமோ... என்னால் நினைச்சே பார்க்க முடியலை... பயம்மா இருக்குது... என் நடிப்பை விட, அது தரும் போதையை விட, அவர் மேலிருக்கும் காதல் பெரிசு... இப்ப புரியுது... இதையெல்லாம் உன்னிடம்... அவர் மனைவியிடம் சொல்றது தப்பு... பாவம் கூட. ஆனால் உனக்கது புரியுது இல்லையா?"

சாருமதிக்குப் புரிந்தது.

காதலை இழப்பது - நேச நிலா அமாவாசையாய், இல்லாமலே போவது கொடுமை. அதைத் தற்சமயம் அனுபவிப்பவளாயிற்றே...!

இந்த இரு பெண்களின் நிலை கண்டு ரசிப்பது போல அலறியது தொலைபேசி.

ஒரு கணம் சாரு திகைத்தாள் -

அழைப்பது யார்?

"இது எனக்கான 'கால்' - உன் அறையில் இருப்பதாய் ரிஸப்ஷனில் சொல்லிட்டுதான் வந்தேன்..."

விளக்கத்துடன் 'பேசி'யை எடுத்தாள் க்ருதி. அதிகம் பேசாமல் சொல்லப்பட்டதை மட்டும் கிரஹித்தவள் கைப்பையை எடுத்துக் கொண்டாள்.

"ஷூட்டிங்குக்கு நேரமாச்சு... இவரும் அங்கேதான் இருக்கறார்... இதுதான் என் கடைசி ஷூட்டிங். கேமரா முன்னே என் கடைசி நாள். நான் எல்லாத்தையும் விட்டுவிடத் தயார். அவர் சொல்லுக்குக் கட்டுப்பட்டாச்சு. இனி அவர் முறை. அவரும் இறங்கித்தான் வரனும்... என்ன, சரிதானே சாரு?"

கண்டிப்பாய் ஆரம்பித்து ஒரு கெஞ்சல் தொனியுடன் முடித்தாள்.

சாருவிற்கு மற்றவளை நிமிர்ந்து பார்க்கவும் திராணியில்லை.

ஆகத் தன்னைப் பகடைக் காயாய் உருட்டியிருக்கிறார்கள்!

'சாருமதி யாருமற்ற அனாதை... அவளைக் கல்யாணம் பண்ணினாலும், பின் கைகழுவி விட்டாலும் கேட்பார் இல்லை. என்று திட்டமிட்டே பயன்படுத்தியிருக்கிறார்கள்.

'வேறு கல்யாணம் செய்து கொள்வேன்!' எனும் மிரட்டலை நிஜமாய் ஆக்குவதற்காய்ப் பயன்படுத்தியிருக்கிறார்கள்.

இப்போது க்ருதிக்குப் புத்தி தெளிந்து விட்டது.

தொழிலை விடக் காதல் பெரியது என்ற தெளிவு.

ஆக இனி இந்தச் சாருமதி அவசியமில்லை.

அலமாரிகளில் அடுக்கி வைத்திருந்த தன் உடைகளை எடுத்துப் பெட்டிக்குள் வைத்தாள். அவளது சின்னச் சின்னப் பொருட்களும் பெட்டிக்குள் போக, அறை சற்று வெறுமையாய்த் தோன்றியது...

இதுவே நம்மூராய் இருந்தால் பஸ்ஸோ, ரயிலோ பிடித்துச் சந்தடியின்றிக் கிளம்பியிருக்கலாம்... ஆனால் விமான டிக்கெட்டுகள் எடுத்து அவளுக்குப் பழக்கமில்லை. பாஸ்போர்ட் கூடக்



கையிலில்லை. ஆக சந்துரு வரும் வரை காத்திருந்து - 'நான் கிளம்பத் தயார்!' என்று அறிவிக்க வேண்டியதுதான்!

இப்போது சந்துரு க்ருதி நடிக்கும் கடைசிக் காட்சிகளைப் பார்த்துக் கொண்டிருப்பார். அவள் தன் அழகை, திறமையைப் பொது மக்களுக்குக் காட்சியாக்கும் இறுதி நாளிது... பின் அவர்களது காதல் தொடரப் போகிறது!

'அலைமோதும் கடலில் அல்லி வளராது

உறுதியற்ற மனதில் காதல் வளராது!'

உண்மைதான். இத்தனை உறுதி இல்லாவிட்டால் க்ருதி, சாந்தனது காதல் கடல் கடந்து வந்து கனியுமா?

ஆனால் இத்தனையிலும் நேற்றிரவு சந்துரு தன்னிடம் எடுத்துக் கொண்ட உரிமை, அதில் பெருகி வழிந்த நேசம்...

இவளும் தடையின்றித் தன் காதலைக் காட்டினாளே...

அது கடவுளாய்த் தனக்கிட்ட பிச்சை என்றே கொள்ள வேண்டும். சந்துருவின் அன்பான ஆண்மைக்குள் முடங்கிக் கிடந்த நிமிடங்களைத் தன் ஆயுள் முழுக்கப் பன்னீர்த் துளிகளாய்த் தெளித்து வைத்துக் கொள்வாள். நினைத்து நினைத்துப் புல்லரிக்க அந்த முத்தங்கள் போதும்.

இத்தனை நாட்கள் பொறுத்தும் கடைசி இரவில் கட்டுப்பாட்டை இழந்து விட்டோமே என்ற வெட்க விரக்தியில்தான் சந்துரு ஓடியிருக்க வேணும்.

சிந்தித்து ஓய்ந்தவளின் வயிறு பசியில் எரிந்தது.

உணர்வுகளில் கிளர்ந்த உடல் இப்போது 'பசிக்குத் தா!' என்று அதட்டுகிறது. ஏதேனும் சாப்பிட்டால்தான் தெம்பாக, அழுது தொலைக்காமல், ஊர் போய்ச் சேரலாம்.

ராஜ் வெளியே எங்கும் இருக்கிறானா என்று பார்ப்பதற்காய் அறையின் கதவைத் திறந்தவள் திடுக்கிட்டாள்.

வெளியே வெளிச்சப் பின்னணியில் நிழலுருவாய் நின்றது சந்துரு...! இவளது திகைப்பைப் பார்த்தவன் முகத்தில் புன்னகை.

"கதவைத் தட்டறதுக்குள்ளே திறந்துட்டியே..."

"ம்ம்... வந்து..."

"வந்துட்டேன்... என்ன முகம் வாடியிருக்குது? இன்னும் சாப்பிடலையா?"

அவனுக்கு இவள் தேவைகள் அனைத்தும் தெரியும்... அதுதான் நேற்றிரவு அணைப்பையும் தந்தானோ?

"நீங்க அங்கே க்ருதிகாவோடு இல்லையா?"

"ஏன் அங்கே இருக்கணும்? உன்னோடு இருக்கலாமேன்னு வேலையை முடிச்சுட்டு வந்தேன்... ஆயிரம் வருஷங்களுக்கு முன்பு கட்டப்பட்ட 'லண்டன் கோபுரங்களை' நீ ரொம்ப ரசிப்பே சாரு... நம்ப கோஹினூர் கூட இப்ப அங்கேதான் இருக்கிறதாம்..."

"க்ருதி இங்லண்ட் வந்ததே உங்களுக்காகத்தானே...?"

சம்பந்தா சம்பந்தமின்றித் தான் பேசுவது புரிந்தாலும், இது சொல்லி விட வேண்டிய விஷயமாயிற்றே...

"இப்ப க்ருதி இங்கே வந்திருந்தாளா?"

"ம்ம்..."

"தன் நடிப்புத் திறனை உன்னிடம் காட்டினாளாக்கும்?"

குழந்தையிடம் விசாரிப்பது போலவே இருந்தது அவனது குரல். "நான் அவளை இங்கே வரச்சொல்லவில்லை, சாரு."

"நம்ப கல்யாணம் மூலம் அவளைக் கொக்கி போட்டு இழுத்துட்டு வந்தீங்க..."

"உளறக் கூடாது, சாரு செல்லம்..." அக்கொஞ்சல் இவளை உலுக்கியது! இன்னும் எவ்வளவு நேரத்திற்குத் தன் கணவனை இப்படி அருகிலிருந்து பார்க்க முடியுமோ என்ற ஏக்கத்துடன் அவனை ஏறிட்டாள்.



"முதல்ல சாப்பிட ஏதேனும் சொல்றேன் - எனக்கும் பசிதான்... நானும் இன்னும் சாப்பிடலை..." என்றவன் 'பேசி'யை எடுத்தான்.

## 16

சந்துரு விளக்கினான் -

"நம்ப பணம் கடும் உழைப்பில் விளைஞ்சது சாரு... அதை இப்படிக் கண்டபடி இறைக்க மனசே வராது. ஒரு முழுப் படப்பிடிப்புக் குழுவை அயல்நாட்டிற்கு வரவழைக்கறது லேசா? ஆனா க்ருதியால் அதையும் செய்ய முடியும்..."

அவளது பெருமூச்சைக் கண்டவன் அவசரமாய் மறுத்தான். "நோ... அப்படி சோகமாய்ப் பார்க்காதேம்மா... தன் சீரியல் தயாரிப்பாளரைத் தாஜா செய்து வேண்டியதை க்ருதி சாதிச்சுகிட்டான்னு சொல்ல வரேன்."

"நீங்க நேரடியாய் வரவழைக்கலை... ஆனால் நம் கல்யாணம் ஒரு தூண்டிலாகி அவளை இங்கே தூக்கி வந்து போட்டிருச்சு..."

"இதென்ன ஸினிமா வசனம் பேசறே? க்ருதி பேசினாளா?" சோபாவில் தன்னருகே மனைவியை இழுத்து அமர்த்தினான். "நம் கல்யாணத்தை அமைதியாய் நடத்தியதற்குக் காரணமே இம்மாதிரியான வில்லங்கங்களைத் தவிர்க்கத்தான். க்ருதி சுறா மீன்... அவளுக்குத் தூண்டில் வீசறவன் முட்டாள். அவ வாயில் சிக்கறது அதைவிட மடத்தனம்... அப்பாவும் எச்சரித்ததால சிக்காமல் மீண்டுட்டேன்..."

அப்போதுதான் சாருவின் மதிக்கு அவன் தந்தையின் பாசக் குரல் எட்டியது. சற்று முன் இத்திருமணம் ஒரு நாடகம், ஒரு தூண்டில் என்று நினைத்தது தப்பு என்று உறைத்தது. சந்துருவை மட்டுமல்லாமல் அவன் குடும்பத்தையும் அல்லவா அபாண்டமாய் நினைத்து விட்டாள்?

தவிர கோயிலில் ரகசியத் தாலி கட்டிக் கல்யாணம் முடியவில்லையே, முறையாய்ப் பதிவு பண்ணப்பட்டதே?

"ஸாரி... க்ருதியை இங்கே பார்க்க... பேச... நான்... குழம்பி..."

"அதான் நான் அவ உன்னைப் பார்க்க, பேச விட்டேன்... எனக்குள்ளும் சில குழப்பங்கள், சாரு... கலகம் நேர்ந்தால் சீக்கிரம் முடிவு வருமோன்ற நப்பாசை எனக்கு... ஷில்பா இந்தியா வந்திருந்த போது க்ருதியை அறிமுகம் செய்து வைத்தேன். பிறகு நடந்ததெல்லாம் தெரியாத ஷில்பாவைக் க்ருதி கிளற, ஏதோ வாயை விட்டுட்டாள். தேனிலவிற்கு நாம லண்டன் போறது புரிஞ்சு மற்ற ஏற்பாடுகளை... தன் தயாரிப்பாளரைச் சரிக்கட்டிச் செய்துட்டாள். எல்லாப் பெண்கள் அல்லது நடிகைகள் தவறான வழிமூலம் தங்கள் விருப்பங்களை நிறைவேற்றுவாங்கன்னு நான் பழி போடலை... ஆனா க்ருதி எதற்கும் அஞ்சாதவ... எங்கப்பா அதை முதல்லியே உணர்ந்து என்னை எச்சரித்தார் -

'இந்தப் பொண்ணு நம் குடும்பத்துக்கு ஏற்றவளில்லை... இவளால் உனக்குச் சஞ்சலம்தான் மிஞ்சும்!'னார்...

"நான் கேட்கலை... காதல் காதை அடைச்சிருந்தது... அதாவது அப்ப நான் காதல்னு நினைத்திருந்த உணர்வு..."

வந்த உணவை இருவரும் துளி மிச்சமின்றிக் காலி செய்திருந்தனர். "வாழ்க்கையில் வேஷம் போடாத பொண்ணு வேணும்னார் அப்பா... அப்பதான் வாழ்வு தெளிஞ்சிருக்குமாம்... உன்னை... துளி ஒப்பனையோ பாவனைகளோ இல்லாத உன்னைச் சந்திச்ச போதுதான் அந்த உண்மை உறைத்தது."

உடம்பெல்லாம் செவியாகக் கவனித்திருந்தாள் சாருமதி. "எளிய தேவதையாய் பால்கனியில் நின்ற உன்னைப் பார்த்ததுமே எனக்குள் ஏதோ ஒரு உலுக்கல்... பழகப் பழகத் தெவிட்டாத இன்பம்..."

காதிற்கு இன்பமாயிருந்தாலும் குழப்பத்துடனேயே குனிந்திருந்தாள் சாரு... அப்படியானால் கல்யாணமான பிறகு ஏனிந்தப் பாராமுகத் துன்பம்?



"க்ருதியிடமிருந்து விலகி, அந்த ஏமாற்றம் ஆறத்தான் நான் ஏற்காடு வீட்டுக்கு வந்தேன்... வேலையாட்களையும்கூட அனுப்பிய பிறகு... நீ வந்து நின்னே! நான் யாருன்னே தெரியாத... அப்படித்தான் நான் நினைச்சேன்."

சாரு குழப்பமாய் அவனை ஏறிட்டாள். ஆனால் குறுக்கிடவில்லை. "உன் அண்மை, இயல்பான பேச்சு எனக்கு இதமாய் இருந்தது... உன்மேல் விவரிக்க முடியாத ஒரு ஈர்ப்பு... உன்னருகே இருக்கையில் அலாதி நிம்மதி... அப்பாட்ட உன்னைப் பற்றிச் சொல்ல, அவர் உன்னைப் பற்றிச் சாரதி மூலம் விசாரிச்சிருக்கார்... உளவு வேலைன்னே வையேன். சென்னையில் உன்னைப் பற்றிக் கிடைச்ச தகவல்கள் எல்லாம் திருப்திகரமாய்ப் பட்டிருக்குது... பிரபுவோட ஏற்பட்ட உன் பிணைப்பைத் தவிர... ஆனால் நீ அவனிடமிருந்து தப்பத்தான் ஏற்காடு வந்திருக்கேன்னு தெரிஞ்சதும், 'இதுவல்லவா பொருத்தம். இது ஆண்டவன் போட்ட முடிச்சு'ன்னுட்டார் அப்பா!

அவன் சிரிக்க, அவளுக்குச் சிரிப்பு வரவேயில்லை.

பேச்சின் திசை புரியாத கலக்கம்!

தவிர க்ருதிகாவினுடைய குமுறலான பேச்சும் வார்த்தைகளும் அவளைச் சுற்றிச் சுற்றிச் சிலம்படித்தன.

அவளது உச்சந் தலையைத் தொட்டு நீவினான் சந்துரு.

"ஏன், சாரு... நேற்றிரவு நடந்தது... நான் தொட்டது உனக்குப் பிடிக்கலையா? வருத்தமா?"

இவள் சிவந்த தன் முகத்தை மேலும் தாழ்த்தினாள்.

"இல்ல... க்ருதி பற்றி யோசிச்சேன்..."

"உனக்கு அவளைக் குறித்து வருத்தமே வேண்டாம்... கல்யாணத்தை வியாபாரமாய் நினைச்சு என்னிடம் நிறையப் பேரம் பேசினாள். அவள் டி.வி. சீரியல்களில் தொடர்ந்து நடிக்க என் பணத்தை அதில் இறைக்கணும்னா. அவளைப் பற்றிய

கிசுகிசுக்களை நம்பக் கூடாது... எப்பயிருந்தாலும் கேள்வியே கேட்கக் கூடாதுன்னு..."

"க்ருதிகா தன் தொழிலை நேசிக்கறாங்க..."

"கல்யாணத்தையும் மதிக்கனுமே?"

"மதிச்சதால்தான் உங்களோடு ஏற்காடு வீட்டிலிருக்கச் சம்மதிச்சாங்க..."

"அது நடித்தது போக மிச்சமிருக்கும் ஓரிரு நாட்களில்தான். அம்மாவிற்குப் பிறகு ஒரு பெண் ஆளாத எங்க வீடு சரியாயில்லை. பெரிய குடும்பங்களில் வீட்டுப் பொறுப்புகளும் பெரியவைதான். வர்ரவங்களை விருந்தோம்பறது, யார் கல்யாணத்திற்கு எப்படிச் செய்யணும், நம்ப தொழிலாளர்கள் குடும்ப விசேஷங்கள், நொந்து வர்ர வீட்டு ஆணுக்குத் தோள் கொடுக்கறதுன்னு... ஆனா க்ருதி அந்தப் பொறுப்புகளை ஏற்கத் தயாராயில்லை... அவளது போக்கைக் கண்டு நான் விலகறதை உணர்ந்தவள் மிரட்ட ஆரம்பிச்சா. வேறு யாரையும் கல்யாணம் செய்ய நான் துணிஞ்சால் உடனே தற்கொலை செய்து கொள்வதாய்... அவளது பிரபலம் விஷயத்தை ரொம்பப் பெரிசாக்கிடும்.."

"ஐயோ..."

"அதான் அப்பா கூட வராமல் அவசரமாய் நம் கல்யாணம் முடிஞ்சது."

"ஓஹோ?" - மெள்ள நிமிர்ந்தாள்.

"எந்த அசம்பாவிதமும் நடக்கும் முன்னே நாம் வெளிநாடு போயிடறது உசிதம்னார் அப்பா... தவிர எனக்கிங்கே வேலையும் இருந்தது."

"நான் மாமாட்ட பிறகு பேசவேயில்லை..."

"முதல்ல நாம பேசிடலாம்... இன்னும் சில விளக்கங்கள் இருக்கே..."



"ம்ம்... கல்யாணத்திற்குச் சம்மதம் வாங்கும்வரை இருந்த சந்துரு வேறு... பிறகு மாறிட்டீங்க..." அவளது உதடுகள் துடித்தன... அதுதான் பெரிய குழப்பம்.

அவள் குளிர்ந்த கைகளை எடுத்துத் தன்னதில் பொதித்தான். "என்னோடு சென்னை வர மறுத்தீங்க... அது வேலை நிமித்தம்னால் கல்யாண நாள் வரை என்னைப் பார்க்கலை. ஒரு ஃபோன் கூட இல்லை... இன்றுவரை பிரியமாய் ஒரு பார்வை... பேச்சு!"

குரல் தழுதழுத்து உடைந்தது.

"சொல்றேன். நீ மணக்கச் சம்மதிச்சது சந்துருவை... அப்படி நினைத்துப் பூரித்திருந்தேன் நான். ஆனால் நான் காந்தன், கோடீஸ்வரன்னு சம்மதம் சொல்லும் முன்னே உனக்குத் தெரியும்... தெரிந்துதான் சம்மதிச்சே இல்லையா?"

அக்கேள்வியில் துளிக் கசப்பிருந்தது.

தன் கணவனை முழுக்கப் பார்த்தாள் -

"தெரியுமில்லையா?" அதட்டினான்.

ஒரு மாதிரி மையமாய்த் தலையசைத்தாள். பின்பு கேட்டாள் -

"யார் சொன்னா?"

"நாம சேலம் வந்து சேர்ந்ததும் ஹோட்டெல் லாபியிலிருந்து 'செல்' மூலம் நம் தொழிற்சாலைக்குப் பேசினேன்... அப்ப பிரபுவும் அங்கே இருந்தான். குடிச்சிருந்தாலும் சொல்ல வேண்டியதைத் தெளிவாகவே சொன்னான்.

"'என்ன, வெற்றிக் களிப்பில் இருக்கீங்களா, மிஸ்டர் காந்தன்? உங்களை விடப் பெரிய ஆள் சிக்கினால் சாரு உங்களைக் கை கழுவிட்டு கட்சி மாறிடுவா... பிறகு நீங்களும் குடிச்சுப் புலம்ப வேண்டியதுதான்" னான்.

"பிரபுவை நான்... இதுபோல... நேசிக்கலியே..."

ஒரு தவிப்புடன் சொன்னாள்.

"பிரபு சொன்னது எனக்கு அதிர்ச்சிதான், சாரு...

'நீ கோடீஸ்வரனாய் இல்லாது போனா, சாரு இப்படி நீ இழுத்த இழுப்புக்கு ஹோட்டெலுக்கு வருவாளா?'ன்னு சிரிச்சான்..."

"நீங்களும் நம்பிட்டீங்க..."

இப்போது அவளது தொனியிலும் துளிக் கசப்பு!

"சாதாரணச் சந்துருவாய் நினைத்தே என்னை மணக்கச் சம்மதித்தாய்ன்னு கர்வப்பட்ட என் நினைப்பில் 'நச்'ன்னு ஒரு கல்லைப் போட்டான்."

அவள் வெகு நிதானமாய் ஆனால் அழுத்தமாகச் சொன்னாள்.

"நீங்க சந்திரகாந்தன் இல்ல... பில்கேட்ஸ் அளவு உலக மகாக் கோடீஸ்வரர்ன்னு சொல்லியிருந்தாலும் சம்மதிச்சிருப்பேன்..."

சந்துரு அவளையே ஆழப் பார்த்தான்.

"நம் கல்யாணத்துக்குப் பணம்... அது இருப்பதோ இல்லாததோ பொருட்டாய்ப் படலையே..."

கண்கள் மின்ன அவள் தோள்களைப் பற்றினான்.

அந்தக் கைகளின் அழுத்தம் இன்பமாய் அவளை இம்சித்தது.

"முதலில் பிரபு சொன்னதை நான் நம்பலைங்க, சந்துரு... உங்க ஆபீஸ் மேசையிலிருந்த ஃபைல்ஸ்ஸைப் பார்த்தேன்... ஆனாலும் பிரபு சொன்னது பொய்யாய் இருக்க வேண்டும்னே ஆசைப்பட்டேன்... தவிர... தவிர... நீங்க என்னை ஏமாற்ற மாட்டீங்கன்ற நம்பிக்கை..."

ஆக நீயும் உண்மையானவனாயில்லை என்பது போல அவள் பேச, அவன், "சாரி.... ஸாரி... சாரும்மா..." பணிந்தான்.

"கல்யாணத்திற்கு நான் சம்மதிச்சது அதே எளிய சந்துருவாய் நீங்க தொடர்ந்து இருப்பீங்கன்ற நம்பிக்கையில்தான்... தவிர கல்யாணப் பேச்சை நீங்க எடுப்பீங்கன்னே எதிர்பார்க்கலை...



எல்லாம் அசாத்திய வேகத்தில் நடக்க... கனவு போலத்தான் இன்னுமே தோணுது... ஆனா ஒன்னு நிச்சயம்..."

அவளது மோவாயை ஒரு மலரைப் போலத் தாங்கியபடி வினவினான் -

"என்னடா?"

"உங்களை உங்களுக்காக மட்டுமே மணக்கச் சம்மதிச்சேன்..."

உணர்வுப் பெருக்கில் அவளது உடல் நடுங்கியது.

"நான் முட்டாள், சாரும்மா... நீ சமைச்சுப் போட்டது, அன்பாய்ப் பரிமாறினது, பரிவாய்ப் பேசிப் பழகினது எல்லாம் எளிய சந்துருவிடம்னு... மறந்துட்டேன்..."

"அத்தனை சந்தேகத்துடன் ஏன் என்னைக் கல்யாணம் செய்துகிட்டீங்க, சந்துரு?"

"உன்னை விட்டுட... ஏன் விலகவும் மனமில்லையே... மூன்றாம் பிறையளவு நேசமிருந்தாலும் அது சீக்கிரம் வளர்ந்து முழுமையாயிடும்ன்ற ஆசை!"

இருவரின் விழிகளிலும் நீர்ப் படலம்...

"ஆனால் தேய்பிறையாய்க் கரையவும் பயந்துட்டேன்... உங்க இருவரிடையே நிற்கக் கூடாதுன்னு..."

அவளை இழுத்துக் கட்டினான்.

அதில் மோகமில்லை... இருவரும் இனிப் பிரியவே கூடாதென்ற தாபம்தான் தகித்தது!

"இல்லைடா... ஏதோ குழப்பம் கருமேகம் போல நமப பிரியத்தை மறைச்சிடுச்சு. ஆனால் அது அமாவாசையில்லை..."

"அப்படீன்னா க்ருதி...?"

"இனி அவளையோ, பிரபுவையோ பற்றிய பேச்சு தேவையில்லை..."

மென்று விழுங்கினாள்.

"நீ எங்களைப் பார்த்ததை நானும் எதிரே யிருந் கண்ணாடியில் கவனிச்சேனே..."

குறும்பாய்ப் புன்னகைத்தான் - "பொங்கிய பொறாமையில் என் சட்டையைப் பிடிச்சு உலுக்க மாட்டாயாங்கற நப்பாசையில்தான் நான் க்ருதியிடம் பேசினேன்... ஆனால்..."

"எனக்குச் சண்டை, கூச்சல் எல்லாம் ஆகாதே..."

"என் பாக்கியம்!" சிரித்தான் - "உன்னை வெளியே அழைச்சுட்டுப் போலாம்னுதான் வந்தேன்... ஆனா இப்ப நேற்றிரவு நாம ஆரம்பிச்ச கதையைத் தொடரலாம்னு தோணுது..."

அவள் மோவாயை நீவின அவனது நீண்ட விரல்கள்.

அவள் சிவந்த முகம் முற்றிலும் தழைந்தது.

"நான் முட்டாள், சாரு... அநாவசியமாய் நானும் நொந்து உன்னை விட்டு விலகி, உன்னையும் நோகடித்து... நேற்றிரவு உன்னைத் தழுவினப்போ எல்லாக் குழப்பமும் தளர்ந்து, தெளிவு வந்தது...' காலைல எழுந்தப்போ என் சந்தேகங்கள் எல்லாம் அசட்டுத்தனம்னு பட்டது..."

அவளது உதடுகள் அசைந்து அசைந்து அவள் கன்னங்களை வருடின.

"இப்பவும் உன் குழப்பம் முழுசாய்த் தீரலையோன்னு படுது... ஆக அதே மருந்தைப் பயன்படுத்தி... புரியுதா?"

என்றபடி அவளை அள்ளித் தூக்கினான்.

வெட்கம் தாளாமல் தன் முகத்தைக் கைகளால் மூடினாள் சாரு. ஆனால் அவள் மனம் அவனுக்காய் முழுக்கத் திறந்தே யிருந்தது...